www.padippakam.com


* இது
மற்றுமோர் அரசியல் கட்சி அன்று!
மாற்று அரசியல் புரட்சி!

* நாங்கள்
அரசியல்வாதிகள் அல்லர்!
புரட்சிவாதிகள்!

வீழ்ந்து விடாத வீரம்! மண்டியிடாத மானம்!

# நாம் தமிழர் கட்சி

## ஆவணம்



படிப்பகம்

www.padippakam.com

# நாம்தமிழர் கட்சி
# ஆவணம்

திருவள்ளுவர் ஆண்டு 2043

விடைத் திங்கள் 5 (கி.பி. 2012) மே 18

வெளியீடு

**நாம்தமிழர் கட்சி**

கதவு எண் 7, மருத்துவமனை சாலை

செந்தில் நகர், சின்னப்போரூர்,

சென்னை - 600 116.

விலை : உரு. 50/-

படிப்பகம்

www.padippakam.com





"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்"

(திருக்குறள்-457)



# உள்ளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 4 |
| 2. | கட்சித்திட்டம் | 6 |
| 3. | முன்மாதிரி முழக்கங்கள் | 45 |
| 4. | உரைவீச்சுத் தெறிப்புகள் | 48 |
| 5. | கட்சிக் கொடிப் பாடல் | 56 |
| 6. | செயற்பாட்டுக் கொள்கைகள் | 57 |
| 7. | கட்சியின் அமைப்பு விதிகள் | 64 |
| 8. | கட்சியின் நடத்தை விதிகள் | 104 |
| 9. | அக வணக்கம், வீர வணக்கம் உறுதிமொழி | 115 |
| 10. | கலைச்சொல் விளக்கம் | 116 |


படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரை

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள், நாம் தமிழர் கட்சியின் முன்னணித் தலைவர்கள், மூத்த வழக்கறிஞர்கள், பல்வேறு நிலைக் கட்சிப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கருத்துகளை உள்வாங்கிய நிலையில், பல அமர்வுகள் ஆன்றோர் அவையினரோடு கலந்தாய்வு செய்ததன் விளைவே இந்த ஆவணம்.

இந்த ஆவணம், நாம் தமிழர் கட்சி பிறந்த வரலாற்றுக் கட்டாயத்தையும், தமிழ்நாட்டில் ஒரு தமிழ்த் தேசியக் கட்சியே தரிக்க முடியாமல் போன வரலாற்றுச் சூழலையும் விளக்குகிறது.

கடந்த ஈராயிரம் ஆண்டுகால மனுவியப் பகையையும் , கடந்த 500 ஆண்டுகளில் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டவர்களையும், கடந்த 100 ஆண்டுகளில் அடிமைத் தளை உடைத்து, விடுதலை வாழ்வு படைப்போம் என முழங்கி, தமிழர்க்குத் தலைமை தாங்கித் தமிழ்த் தேசியம் உருவாகாமல் பார்த்துக்கொண்டுக் கடைசியில் கழுத்தறுத்த திராவிடத்தையும் இந்த ஆவணம் துல்லியமாகச் சுட்டி நிற்கிறது.

இந்த ஆவணம், நம்மை மீட்டெடுக்க வல்ல வழிகாட்டி மெய்ம்மங்களை வரிசைப்படுத்திக் காட்டுகிறது. தொடர்ந்து, கட்சியின் இயக்கத்திற்கான அடிப்படையும், நடைமுறையும், கட்சி எதிர்கொள்ளும் முரண்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

கட்சிக் குறிக்கோளின் கரு நாட்டு நடப்பிற்கும், தேவைக்கும் ஏற்ப தமிழர் உரிமையை மீட்கும் வகையில், “முழுத் தன்னாட்சி உரிமை படைத்த இந்திய மாநிலங்களின் உண்மையான கூட்டாட்சி அரசு”, என்ற சொற்றொடரில் உருக்கொண்டிருக்கிறது; இந்தக்



குறிக்கோள் உருவத்தின் படிநிடிலை வளர்ச்சியைக் காலமே தீர்மானிக்கும்.

கட்சி அமைப்பு விதிமுறைகளைப் பெரும்பாலும், தேர்தல் ஆணைய நெறிமுறைகளே தீர்மானித்துள்ளன; கட்சியின் இயக்க நடைமுறைகள் அவற்றைக் காலப்போக்கில் செதுக்கும்; செழுமைப் படுத்தும்.

நடத்தை விதிகள், ஓர் அரிய குறிக்கோளை அடைவதற்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு பேரியக்கத்தின் பெருமைமிகு உறுப்பினர் களைக் கவனத்தில் வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆவணத்தை விளக்கப்படுத்தும் முகமாக, முன்மாதிரி முழக்கங்களும், உரைவீச்சுத் தெறிப்புகளும், செயற்பாட்டுக் கொள்கைகளும் ஆவணத்தில் இடம் பெற்றுள்ளன. அதனினும் மேலாக, ஆவணத்தைத் துல்லியமாக விளங்கிக்கொள்வதற்கு உதவியாக, “கலைச்சொல் விளக்கம்”, என்ற பகுதியும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஆவணத்தைப் படிக்குமுன், இதைப் படித்து முடித்தால் பயன்மிகுதியாக இருக்கும்.

இந்த ஆவணம், மாற்றப்பட முடியாததும், மாற்றப்படக் கூடாததும் அன்று ; ஆனால் குறிக்கோள் தேவைக்காகவும், சரித்தன்மைக்காகவும் மாற்றப்படும் வரை இந்த ஆவணமே நமது சட்ட வழிகாட்டி.

ஆவணப்படி நடப்போம்!

ஆவணப்பணி முடிப்போம்!

(செந்தமிழன் சீமான்)
தலைமை ஒருங்கிணைப்பாளர்,
நாம் தமிழர் கட்சி.

படிப்பகம்

www.padippakam.com



# நாம்தமிழர் கட்சித் திட்டம்

திருவள்ளுவர் ஆண்டு 2043

(கி.பி. 2012)



# தோற்றுவாய்

## 1. தமிழ்-தமிழர் தொன்மை

"உலகின் முதன்மொழி தமிழ்; உலகின் முதலினம் தமிழர்; உலகளாவிப் பரவிய முதலினமும் தமிழரே; முதன்மொழியாம் நம் தமிழின் அகவை, 50,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது; "ஆசிற்றரேலியா முதல் ஆப்பிரிக்காவரை, நம் குமரிமுனையைத் தழுவிய வண்ணம், கடற்கோளிற்கு முன்பு தொடர்ச்சியாக இருந்த நிலப்பரப்பாம் குமரிக்கண்டமே, தமிழர் பிறந்தகம்", என்ற பாவாணரின் கருதுகோளிற்கு, அவர் தந்த சொல்லாய்வு வழிச் சான்றுகளுக்கு வலுச்சேர்க்கும் வண்ணம், இன்றைய நில அகழ்வாய்வு, கடலாய்வு, மரபணு ஆய்வுத் தரவுகள் வந்த வண்ணம் உள்ளன. அதனால்தான் புகழ் பெற்ற மொழியியல் அறிஞர் நோம் சோமிசிகி அவர்கள், "உலக மொழிகள் அனைத்தும் ஒரு மூலமொழியில் இருந்தே பிறந்திருக்க வேண்டும்; அம் மூலமொழி தமிழாக இருக்கலாம்", என்று கருத்துரைத்துள்ளார்.

## 2. பழந்தமிழ்நாடே இந்தியா

உலகின் பல்வேறு நாடுகளில், காலப்போக்கில் இடம், பொருள், சூழலுக்கேற்ப தமிழ் பல்வேறு வகைகளில் மாற்றமடைந்து பல்வேறு மொழிகள் ஆயின; அதனால் பல்வேறு இனங்களும் ஆயின. இன்றைய இந்தியா எனப்படும் பழந்தமிழ் நாட்டில் கி.மு 3000 ஆண்டுகள் வரை, தமிழ் பேரளவில் சிதையாமல் குமரி

படிப்பகம்

www.padippakam.com



முதல் இமயம் வரை, சிந்து கங்கைச் சமவெளிகள் உள்ளிட்டுத் தமிழ் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது. இக்கருத்தை அண்ணல் அம்பேட்கரும் வழிமொழிந்துள்ளார்.

## 3. தமிழர் ஆளுமை முடிந்த காலம்

பழங்காலத்தில் இப்பொழுதுள்ள பாக்கித்தான், இலங்கை உள்ளிட்ட இந்தியத்துணைக் கண்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் ஆண்ட இனம் தமிழினம். கி.பி 2 முதல் கி.பி 9 ஆம் நூற்றாண்டு வரைத் தமிழ்நாட்டைக் களப்பிரர்களும், பல்லவர்களும் ஆண்டனர். கி.பி 9 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை பிற்காலச் சோழர்கள் ஆட்சி நடந்தது. தாய்லாந்து, மியான்மர், மலேசியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளையும் இலங்கை உள்ளிட்ட தீவுகளையும் வென்று பேரரசனாக விளங்கியவன் முதலாம் அரசர்க்கரசன் (இராசராசன்.)

கி.பி 14ஆம் நூற்றாண்டில், மாலிக்காபூர் இங்கே நுழைந்தது முதல் இன்றுவரை, தமிழர்கள் அயலார் ஆட்சியில் வீழ்ந்து கிடக்கின்றனர். மாலிக்காபூர், விசய நகரப்பேரரசர்கள், அவர்களின் முகவர்களான நாயக்கர்கள், நாவாப்புகள், மராட்டியர்கள் பின்னர் வந்த ஐரோப்பியர்கள், இறுதியாகத் தில்லி வல்லாளுமையர் எனத் தொடர்ந்து தமிழர்களை அடிமையாக்கி ஆண்டு வந்தனர்; வருகின்றனர்.

## 4. மனுநெறியர் வருகையும், திராவிடமும்

தமிழிலிருந்து பெரிதும் சிதைந்த மொழியைப் பேசிக் கொண்டு, இன்றைய ஈரானியப் பகுதியிலிருந்து கால்நடைகளை ஓட்டிக்கொண்டு, கால்நடையாக வந்து குடியேறிய மனுவாளர்கள் (ஆரியப் பார்ப்பனர்) நாகரிகச் செழுமை கொழுவிய சிந்துவெளித்



தமிழகத்தில் கால்வைத்த பின்பு, தமிழரின் மொழியும், பண்பாடும் திரிபும், சிதைவும் உற்றுப் பல்வேறு மொழிகளும்,மொழியினங்களும் ஆகின. அவ்வாறு வந்தேறிகளின் மினுக்கத்தில் மயக்கமுற்ற இரண்டகத் தமிழர்கள், தம்மொழியை மனுவாளர்களின் சமற்கிருதக் கலப்பிற்கு இடம் தந்ததால், பிறந்தவையே திராவிட மொழிகள் (தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, மராட்டியம் முதலியன); அதனால் உண்டானவர்கள் திராவிடர்கள். ஆக திராவிடம் என்பது கலப்புக் கூட்டு இனத்தை அடையாளப் படுத்துமேயன்றி, தனிப்பட்ட ஒரு தேசிய இனத்தைக் குறிக்காது. எனவே, மனுவியத்தின் அரசியல் வடிவமான இந்தியத்தேசியமும், அதன் சார்பு ஆற்றலான திராவிடமும் மூலத்தமிழுக்கும், அதுசார்ந்த தமிழ்த்தேசியத்திற்கும் வரலாற்றுப் பகை ஆகும். இது கணக்குத் தீர்க்கப்படவேண்டிய முதன்மை யானதும், வலுவானது மான தொடர்முரண்பாடு ஆகும்.

## 5. தமிழர் வீழ்ச்சி

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், தமிழர்க்கு இருந்த விரிந்து பரந்த வாழ்நிலத்தாலும், ஏற்பட்டிருந்த பல்லாயிரம் குழுக்களாலும், எல்லாக் குழுவினரும் அந்தந்தப் பகுதியில் ஆட்சி உரிமை வாய்ப்பும், மிகுவலிமையுள்ள குழுவினர் மேலாளுமை வாய்ப்பும் பெற்றிருந்தனர். அந்த வகையில் இன்றைய தமிழகத்தில் வாழும் எந்தக் குழுவினரும் ஆண்ட பரம்பரையினரே. பண்டைத் தமிழகத்தில் நிலவிய தன்முனைப்பும், தன்மேலாளுமையும், உட்பகையும், காட்டிக்கொடுப்பும் கொண்ட பண்பு நிலை, தமிழர் ஒற்றுமையைக் குலைத்து, மனுநெறியர் வால் நுழைக்க இடந்தந்தது; அம் மனுநெறியர் மதத்தாலும், சாதியத்தாலும் தமிழரைப் பிறப்பு

படிப்பகம்

www.padippakam.com



வழியில் நிலையாகப் பிரிக்கவும், உயர்வு-தாழ்வு அடிப்படையில் நிலையாக முரண்படச் செய்யவும் முடிந்தது.

எனவே, தமிழர், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பிற மொழியினருக்கு (சமற்கிருதம், தெலுங்கு, கன்னடம், மராட்டியம் முதலியன) அடிமையாக நேர்ந்தது. அதன் விளைவால், மதமும் சாதியும் இறுகின. மேலும் தமிழர் ஒற்றுமை குலைந்தது. தமிழர் நிலத்தையும், தொழிலையும், போராடும் ஆற்றலையும் இழந்தனர். கூடவே தாழ்வு மனப்பான்மையும், அடிமை வேட்கையும், போர்க்குண இழப்பும், மானஇழப்பும், காட்டிக்கொடுப்பும், தன்னலவெறியும் தமிழரிடையே நிலையாகக் குடியேறின. அதனால் தமிழர் கட்டுக்குலைந்த இனத்தவர் ஆயினர். இதன் விளைவாகத் தமிழர் வாழ்நிலம் சுருங்கி வரத்தொடங்கியது, சுருங்கிய தமிழ்நிலமும், தெலுங்கருக்கும், கன்னடியருக்கும், மராட்டியர்க்கும், உருது முகமதியர்க்கும், ஐரோப்பியர்க்கும், தில்லி மனுநெறியர்க்கும் அடுத்தடுத்து, அடிமை ஆயிற்று. தமிழரும், தமிழராக அடையாளம் கொண்டு வாழ்வது இழிவென்று கருதித் தெலுங்கு,கன்னட, மராட்டிய மொழியினராகவும் ஆங்கில, இந்தி மொழியினராகவும் கடந்த சில நூற்றாண்டுகளாக மாறி வருகின்றனர். நிலவுடைமை யையும், ஆட்சியையும் இழந்து, மீதியாய் இருக்கிற தமிழர்களுக்கும் மொழியுரிமை, கல்வியுரிமை, வழிபாட்டுரிமை, ஆற்றுநீர் உரிமை, கனிமவுரிமை முதலியன மறுக்கப்பட்டுச் சிறுகச் சிறுகத் தமிழர்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். மேலே கண்ட உரிமைகளுக்கு எவரேனும் குரல் கொடுத்தால், அவர்களும் அழிக்கப்படுகின்றனர். முதற்சான்று: 1965 இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில், 500 தமிழர்கள் கொல்லப்பட்டனர். அடுத்த சான்று: காவிரிச்சிக்கல் தீர்ப்பையொட்டிக் கருநாடகத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர்



கொலை செய்யப்பட்டதும், அது தொடர்பாக எந்தக் கொலைஞர் மீதும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும்தான்; இன்னும் பல. இன அழிப்பின் கொடுமுடிதான், முள்ளிவாய்க்கால் பேரவலம். ஒன்றரை இலக்கம் தமிழர் கொலை, பேரவலம் எனின், மீப்பெரும் பேரவலம் அந்த இனப்படுகொலைக்கு எதிராக இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் 8 கோடித் தமிழர்கள் உரிய எதிர்வினை செய்ய இயலாமல் இருப்பதே.

## 6. தமிழர் வீழ்ச்சிக்குரிய துல்லியமான பின்புலம்:

### ஆங்கிலேயர் வருமுன்

ஆங்கிலேயர் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வருமுன்னர், அது பெரும்பாலும் திராவிடர்களாலும் (தமிழிலிருந்து திரிந்த வடதிராவிடர்+ தென்திராவிடர்), சிறுபகுதி முகமதியர்களாலும் ஆளப்பட்டு வந்தது. இந்திய ஒன்றியத்தின், வடதிராவிட ஆட்சிப்பகுதி மக்கள், அரசியலில் தங்கள் சொந்த மொழி மன்னர்களின் ஆளுமையின்கீழும், சமூகத்தில் மனுநெறியர் ஆளுமையின்கீழும், தங்கள் சொந்த மொழிக்கு இசைந்த சமற்கிருதத்தின் ஆளுமையின்கீழும் இருந்தனர்.

தென்திராவிட மக்களில், மைசூர், திருவிதாங்கூர் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், தங்கள் மொழி மன்னர்களின் ஆளுமையின்கீழும், தங்கள் மொழிக்கு இசைந்த மனுநெறியர் மொழியின் ஆளுமைக்குக் கீழும் வாழ்ந்தனர்.

சென்னை மாநில மக்கள் மட்டுமே, தங்கள் சொந்த மொழி (தமிழ்) அல்லாத தெலுங்கு, மராட்டிய மன்னர்கள் ஆட்சியில் அடிமைப்பட்டனர். சமூகத் தளத்தில், தங்கள் மொழிக்கு முற்றிலும் முரணான சமற்கிருதத்திற்கும், அம்மொழி போற்றும் மனு

படிப்பகம்

www.padippakam.com



நெறிக்கும் அடிமைப்பட்டு உழன்றனர். அதனால், தமிழும், தமிழரும் சிதைந்து, அடையாளமிழந்து, இனமற்று உதிரிகளாய்க் கிடந்தனர்.

## ஆங்கிலேயர் வந்தபின்

ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர், திராவிட மன்னர்கள் ஆட்சித் தலைமை இழந்தனர். மனுநெறியர் சமூகத் தலைமை இழந்தனர். தமிழர்கள், தங்கள் மொழி விழுமியங்களை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. மனுநெறியர்கள், படை மறவர் கலகத்தைத் (1857) தூண்டி, விக்கிற்றோரியா பேரரசியின் ஆவணத்தின் மூலம், மதத் தலைமைக் காப்பும், அரசு வேலை முன்னுரிமையும் பெற்றனர். தொடர்ந்து, பேராயக் கட்சி மூலம் அரசியல் தலைமைக்கும் முயன்றனர்.

இந்தப் பின்னணியில்தான், திராவிட வடுகர்களுக்கும், மனு நெறியர்களுக்கும் அரசியல் தலைமை, அரசு பணிகள் தொடர்பாகப் போட்டி ஏற்பட்டது. சென்னை மாநிலத்தில், பெரும்பான்மைத் தமிழர்களின் தோள்களில் ஏற்கெனவே, ஏறிக் குந்தியிருந்த திராவிடர்கள், அரசியல் ஆளுமையை நீதிக்கட்சி வாயிலாய்க் கைப்பற்றினர். தொடர்ந்து அரியணையில் எப்போதும் இருப்பதற்காகச் சமூக மேல்நிலையில் இருந்த மனுநெறியர்களை, அந்நிலையிலிருந்து அப்புறப்படுத்தவும், பெரும்பான்மைத் தமிழர்கள் ஆதரவு, தொடர்ந்து வேண்டுமென்பதற்காகவும் திராவிடரோடு தமிழரும் பயன்பெறும் வண்ணம், வகுப்புவாரி இடஒதுக்கீட்டுக் கொள்கையை முன்னெடுத்தனர். இடஒதுக்கீட்டுக் கொள்கைப் பயன்பாட்டில், இந்திய அரசமைப்புச் சட்டப்படி, சமூக நிலையில் ஆளும் தரப்பில் இருந்த தெலுங்கர்கள் இடம் பெற்றிருக்கக்கூடாது. ஆனால் தெலுங்கர்கள் இட ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்டு, அவர்கள்



சமுதாயத்தில் மேனிலைக்காரர்கள் என்பதால், அவர்கள் பங்குக்குரிய பயனைவிடப் பெரும் பயன் துய்த்து வருகிறார்கள். இந்த உண்மையை, தெலுங்கர்கள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுக்குத் தலைமை தாங்குவதிலிருந்தும், அமைச்சரவையில் பேரளவில் இடம்பெறுவதிலிருந்தும் சரிபார்த்துக்கொள்ளலாம்.

அதேவேளை கவனமாக, சித்தூர், நெல்லூர், திருப்பதி முதலிய தமிழர் மாவட்டங்களில் தமிழ்ப் பள்ளிகளைத் தெலுங்குப் பள்ளிகளாக மாற்றி, அம் மாவட்டங்கள் தெலுங்கு மாவட்டங்கள் ஆக்கப்பட்டன. அரசாட்சி, தெலுங்கர்களிடமிருந்து, மனு நெறியர் (அரசகோபா லாச்சாரி) கைக்கு மாறியவுடன், ஆட்சியைப் பறிகொடுத்த ஆந்திரத்தெலுங்கர்கள், விசால ஆந்திரா அமைக்கத் தெலுங்குதேசம் போய்விட்டனர். தமிழ்நாட்டில் சாதிக் கொடுமைகளையும், சமற்கிருத மேலாளுமையையும் புகுத்தி, நிலைநிறுத்திய கிருட்டிணதேவராயர் காலத்திலிருந்தே, தமிழர் நிலங்களைப் பறித்துத் தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்த திராவிடர்கள் மட்டும், இராசாசி இந்தியைத் திணித்தபோது, அதை எதிர்த்துத் 'தமிழ்நாடு தமிழர்க்கே', என்று நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் ஆகியோர் தலைமையில் திரண்டபோது, அவர்களை ஆதரிக்கிறாற்போல ஆதரித்துப் பின், தங்களுடைய, தமிழரைத் தொடர்ந்து அடிமைப்படுத்தும் திட்டத்தின்கீழ், அண்ணல்தங்கோ முயற்சியினால் முகிழ்த்த தமிழர் கழகத்தை முறியடித்துத் திராவிடர் கழகத்தை நிறுவினர்; திராவிட நாட்டு முழக்கத்தை முன்னெடுத்தனர். தமிழர் அறிவையும் தன்மானத்தையும், மீட்டெடுப்பதாக முழங்கிக்கொண்டு, "தமிழ் அறிவியல் அற்ற மொழி; அதை வாழ்வியலிலிருந்து தலை முழுகிவிடுவதே அறிவுடைமை", என்று பகுத்தறிவுப் பரப்புரையும்,

படிப்பகம்

www.padippakam.com



தன்மானப் பரப்புரையும் செய்தனர். தமிழை வாழ்வியலில் இருந்துத் தவிர்க்கச் சொல்லிவிட்டு, தமிழ்வழிப்பட்ட தமிழ்த்தேசிய முழக்கமான "தமிழ்நாடு தமிழர்க்கே",என்ற செயல்திட்டமற்ற வெற்று முழக்கத்தை அடையாளமாக முன்வைத்துக்கொண்டே, "அறிவியல் மொழியான ஆங்கிலமே, தமிழர்க்கு மதிப்புமிக்க நல்வாழ்வு தரும்", என்று பேரளவில் பரப்பினர். தமிழர்களை ஆங்கில மோக வலைக்குள் வீழ்த்தினர். மேலும், மூடநம்பிக்கை ஒழிப்பின் பெயரால், சில வரலாற்றுச் சான்றுகளையும், பல வாழ்வியல் விழுமியங்களையும் தாங்கி நிற்கிற தமிழ் இலக்கியங்களிலிருந்து, தமிழர்களை அயன்மைப்படுத்தினர். தமிழர் என்ற அடையாளம் இழிவுபடுத்தப்பட்டு,மழுங்கடிக்கப்பட்டது.

## ம.பொ.சி.

பேராயக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிலம்புச் செல்வர் ம.பொ.சி., முழு இறையண்மையுள்ள நிகர்மைத் தமிழ்த்தேசக் குடியரசைச் குறிக்கோளாகக் கொண்டு, தமிழரசுக் கழகத்தை நிறுவினார். திராவிடநாட்டு விடுதலையைப் போலித்தனமாக முன்னெடுத்த திராவிட இயக்கத்தின் கூப்பாட்டுக்கு முன்னால், ம.பொ.சி.யின் தமிழ்த் தேசியக் குரல் எடுபடாமல் போயிற்று. தமிழ்நாட்டைச் சுற்றிலுமிருந்த திராவிடர்கள், மாநிலப் பிரிவினையின்பேரால், தமிழ்நாட்டுக்குள் இருந்த திராவிடர்கள், இந்தியத்தேசியத் தாசர்கள் ஆகியோர் ஒத்துழைப்பால், தமிழ்நிலப் பகுதிகளைப் பறித்தபோது, மங்கலங்கிழார், நேசமணி முதலிய முன்னணிப் போராளிகள் துணையோடு, ஒருபகுதித் தமிழ்நிலத்தை மீட்டு, ம.பொ.சி. அவர்கள் வரலாற்றில் நல்லிடம் பெற்றார்.

திராவிடத்தை எதிர்த்துப் போராடிய ம.பொ.சி., திராவிடத்தைப் பெற்றெடுத்த மனுவியத்தை எதிர்த்துப் போராடும் தெளிவற்றுப் போனார். அதனால், தமிழைச் சிதைத்த சமற்கிருதத்தை மதித்தும், மும்மொழித் திட்டத்தை ஏற்றும், இந்திய ஒருமைப்பாட்டை உயர்த்திப் பிடித்தும், ம.பொ.சி., மாண்புகுன்றிப் போனார். தமிழீழ மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்த அரசீவ் காந்தி முன்னிலையில், பேராயக் கட்சியில் சேர்ந்ததன் மூலமாகப் பெரும்பிழையைச் செய்தவரானார், ம.பொ.சி.



## சி.பா. ஆதித்தனார்

திராவிடம் தன் பொய்முக மறைப்பிற்காகவும், தமிழர்களிடையே பேராயக்கட்சிக்கு எதிராகப் பேராதரவு திரட்டுவதற்காகவும் தமிழ்மீது பெரிய பாசம் இருப்பதாக மேடைகளில் முழங்கியது. "தமிழுக்குக் காப்பு, இருமொழித் திட்டமே", என்று அறிவித்த திராவிடம், தமிழ்நாட்டுக் கல்வித்திட்டத்தில் முதன்மை மொழியாகத் தமிழ்மொழியை அறிவிக்காமல், தாய்மொழி என்று அறிவித்துப் பிற திராவிட மொழிகளின் ஆக்கத்திற்கு வழிவகுத்தது. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை அறிவித்து, எல்லா மாணவர்களும் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்கும் சூழலை ஏற்படுத்தியது. 1967இல், ஐந்து ஆண்டுகளுக்குள் உயர்கல்வியில் தமிழைக் கொணர்வோம் என்று அறிவித்த திராவிடம், காலப்போக்கில் அதனைக் கைவிட்டது. அந்தச் சூழலில், தூத்துக்குடி மாவட்டம் தந்த, தமிழ்முத்து சி.பா. ஆதித்தனார் அவர்கள், தமது அயர்லாந்து விடுதலைப் போராட்டம்பற்றிய நேரடி விடுதலைப் பட்டறிவையும், இங்கிலாந்து நாட்டில் பெற்ற உயர்ந்த சட்ட அறிவையும் பயன்படுத்தி, "ஒரு மொழிக்கு ஒரு நாடு, தமிழுக்கு வேண்டும் தனிநாடு", என்றும், "உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு", என்றும், "முழு இறையாண்மை உள்ள தமிழப் பேரரசு அமைப்பதே எம் குறிக்கோள்", என்றும்

படிப்பகம்

www.padippakam.com



முழங்கி, 1958ஆம் ஆண்டு நாம்தமிழர் இயக்கத்தை நிறுவினார். இயக்கப் பணிகளுக்காகத் தமிழன், தமிழ்க்கொடி இதழ்களை நடத்தி வந்தார். தமிழர்தம் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையில் சிலம்பம், களரி, சடுகுடு முதலிய தமிழர் விளையாட்டுகளை இளந்தமிழர்களிடையே ஊக்குவித்து வந்தார். தமிழர்களின் போராட்ட ஆற்றலைப் பெருக்கும் வகையில், தமிழன் துணி ஆலை, தமிழர் கோழிப் பண்ணைகள் போன்ற பொருளாதாரப் பணிகளுக்கு வடிவம் கொடுத்தார். போராடும் மக்களின் எண்ணிக்கை வளரும் வகையில், அதிக மக்களைப் பெற்றெடுக்கும் பெற்றோர்களுக்குப் பெருந்தொகைகளைப் பரிசாகக் கொடுத்து ஊக்குவித்தார். 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறைசென்றார். மன்னார்குடியில், தமிழ்நாட்டு விடுதலைக்காக மாநாடு நடத்தியதை முன்னிட்டும் சிறைத் தண்டனை பெற்றார். எளிய தமிழைத் தம் இதழ்ப் பணி மூலமாக, நாடெங்கும் பரப்பினார். "தமிழப் பேரரசு", என்ற அரிய தமிழ்த் தேசிய நூலை எழுதியுள்ளார். மேற்கண்டவாறு, விடுதலை இயக்கத்தவர்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரிகளைப் படைத்த வகையில், வரலாற்றுப் புகழ்பெற்றார்.

அரும்பெரும் தமிழ்த் தேசிய விடுதலைப் பணிகளை ஆற்றிய ஆதித்தனார் அவர்கள், 1967இல் திராவிட இயக்கம் மேடைகளில் முழங்கிய முழக்கங்களை நம்பி, "திராவிடம், தமிழின நலனுக்கு உண்மையான தொண்டு செய்யும்",என்றும், "இந்தியத் தேசியத்தை விட்டுக்கொடுப்பிற்கு இடமின்றித் தன்னலம் துறந்து போராடும் ", என்றும் தவறாகப் புரிந்துகொண்டு, தம்மைத் திராவிட இயக்கத்தில், நாம் தமிழர் இயக்கத்தைக் கலைத்துவிட்டு, தம் தொண்டர்களோடு இணைத்துக்கொண்டார். அதனால், தமிழ்த் தேசியக் கோட் பாட்டிற்குப் பெரும் தீங்கைச் செய்தவரானார்.



## தமிழர்தேசியப் பெருந்தலைவர் மேதகு வே. பிரபாகரன்

இக்காலத்தோடு இணைந்த சமகாலத்தில், ஈழத்தைச் சேர்ந்த திராவிடமாம் சிங்களம், தமிழர்மீது அரச பயங்கரவாதத்தை ஏவி, அழித்து வந்தது. அதை எதிர்த்துப் போராடிய தந்தை செல்வாவிற்குத் திராவிடம், சிங்களத்திடம் பணிந்து போகுமாறு அறிவுரை கூறியது. தமிழ்நாட்டிற்குள், "தமிழ்நாடு தமிழர்க்கே", என்று தான்தான் முழங்குவதாக உரிமை கொண்டாடிய திராவிடம், "நானே அடிமை; இன்னொரு அடிமைக்கு உதவுவது எப்படி?", என்று வினவி, கைவிரித்தது. வாக்கு அரசியல் திராவிடமோ, தில்லிக் கும்பல் போட்ட தாளத்திற்கு ஏற்றவாறு, முன்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துப் பின்பகுதியில் இந்தியம், சிங்களத்தோடு சேர்ந்து ஈழத்திற்குக் குழிதோண்டியது. இந்தியத் தேசியக் கட்சிகள் அனைத்தும், மனுவிய வெறியோடு (வெவ்வேறு அளவுகளில்) தமிழீழ விடுதலையை முற்றிலும் எதிர்த்து நின்றன: நிற்கின்றன.

பகுதிவாதத் தமிழ்க்கட்சிகள் திராவிடக் கட்சிகளின் காலடியில் விழுந்து, அவற்றோடு இணைந்து ஈழத்திற்கு இரண்டகம் செய்தன. "தமிழீழத்திற்கு முக்கால ஆதரவு", என்று முழங்கிய திராவிடத்தின் போலிமையை, முள்ளிவாய்க்கால் முழுமையாகத் தோலுரித்து அம்பலப்படுத்தியது. "கிருட்டிண தேவராயர் காலத்திலிருந்து, தமிழர்களை மேலாளுமை செய்துவரும் திராவிடர்கள், தமிழர்களுடைய துன்பங்களுக்கு இடம்,பொருள், ஏவல் பார்த்துக் குரல் கொடுப்பார்களேதவிர, பயன்தரும் வகையில் போராட முன்வரமாட்டார்கள்; ஏனெனில் தலைமை போய்விடும்", என்ற தெளிவினை, வரலாறு ஆதித்தனார் போன்றவர்களுக்குத்

படிப்பகம்

www.padippakam.com



தராதபோதிலும், ஆதித்தனாரின் பேரன்களுக்கு அந்தத் தெளிவினை, வரலாறு முள்ளிவாய்க்கால் மூலம் அளித்திருக்கிறது.

இந்தக் கொடுமையான சூழலில், தமிழின வரலாற்றில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தமிழர் தலைவனாகத் தமிழினத்தை மீட்கத் தோன்றிய தோன்றல், மாவீரன் பிரபாகரன்.

* தமிழீழத் தாயகக் குறிக்கோளே, தம் இயக்கக் குறிக்கோள் என்றவன்.
* தமிழீழத்திற்கு எதிரியாகத் தலைவரே மாறினாலும், அவரையும் அழிப்பவனே உண்மையான தமிழீழப் போராளி என்றவன்.
* உலகமே எதிர்த்தபோதும், உள்ளம் சிதையாது களத்தில் நின்ற காவல் தெய்வம்.
* உலகே விலையாகத் தரப்படினும், விலைபோகாக் கொள்கை மறவன்.
* உள்ளம் நிறைந்தவர் மறைந்தபோதும், உள்ளம் சோர்ந்திடா உரவோன்.
* உளமாரத் தாயக விடுதலைக்குத் தன் குடும்பத்தையே ஒப்படைத்த ஒப்பற்றவன்.
* விடுதலைக் களத்தில் தம்பியாய் நுழைந்து, இனத்திற்குத் தாயாய்த் தந்தையாய் வளர்ந்தவன்.
* கெடுதலைப் போரை அறம்பிறழாது, எதிர்கொண்ட ஏந்தல்.



* போர்க்கலைக்குப் புதுப்பாடங்கள் தந்த பேராசான்.
* போரிடையே ஏற்ற, ஆட்சிக்கலைக்கு மாட்சிமை கூட்டியவன்.
* விடுதலைப்போர் வெப்பில், இனக்குப்பைகளாம் சாதி, மதங்களை எரித்தவன்.
* விடுதலைப் பெண்புலி அமைப்புக் கட்டி, பெண்ணுரிமை நாட்டியவன்.
* முழுவாழ்வு தரும் தமிழை, வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் நிலைநாட்டியவன்.
* முழுமைத் தமிழ்த் தேசியத்தை முன்மொழிந்து, செயற்படுத்தியவன்.
* அழிவின் விளிம்பிலும் கடைசி வரை களத்தில் நின்றவன்.
* அழிவு தந்த இரண்டகரை மட்டும், இன்னும் எதிர்த்துக் களமாட வேண்டியவன்.

ஆகிய அரும்பெரும் கூற்றுகளுக்கு முற்றிலும் உரியவரான, தமிழர் தேசியப் பெருந்தலைவர், தமிழீழப் போராட்டத்திற்கு எதிராகத் தமிழர்களின் இன எதிரியான இந்தியா, தனது எதிரிகளான சீனா, பாக்கித்தான் ஆகிய நாடுகளின் துணையோடுகூட, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளிய நாடுகளையும், கியூபா, வெனிசுலா போன்ற நிகராண்மை நாடுகளையும் உள்ளடக்கிய அனைத்து உலக நாடுகளையும், ஒத்துழைப்பிற்கு அழைத்துக்கொண்டு, தமிழர்கள்மீது தாக்குதல்

படிப்பகம்

www.padippakam.com



நடத்தியபோது, தமிழர்களின் ஒத்துழைப்பில்லாத இரண்டகத்தால், பேரழிவைச் சந்திக்க நேர்ந்தது; தமிழீழ விடுதலைப் போராட்டம், தன் இலக்கு நோக்கிய தொடர்ச்சியை இழந்து தவிக்கிறது. தகுதியான எந்த உதவியும், எங்கிருந்தும் இல்லாத ஒரு வெறுமை நிலவுகிறது.

## 7அ. நாம்தமிழர் கட்சி

இந்த வெறுமையை உடைத்தெறிந்து, தமிழர், உலக அரங்கில் மானத்தோடு வாழும் நிலையை உருவாக்கிட, விடுதலை வேட்கையும், வீரமும், மானமும், ஈகமும், ஒப்படைப்புணர்வும், உழைப்பு விழைவும்,உண்மையும், நேர்மையும் ஒழுக்கமும், ஒற்றுமைப் பண்பும், தன் விளம்பரத் தவிர்ப்பும், தன்னுறுதியும், இனநலப்பற்றும், இனவிடுதலைக் குறிக்கோளில் உறுதியும், உடல் வன்மையும், உளத் திண்மையும், பொறுமையும், போர்மையும், அறிவார்ந்த சிந்தனையும், தகவார்ந்த செயல் திறனும் கொண்ட தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்கிற தன்னிகரில்லாப் பேரியக்கமே 'நாம்தமிழர் கட்சி. அது தமிழர்க்காகத் தமிழர்களால் நடத்தப்படும் 'தமிழரின் கட்சி.

## 7ஆ. நாம்தமிழர் கட்சிக் கொடி

ஆட்சி இன்பக் காட்சிகளைக் கனவிலும் கருதாது, மீட்சித் துன்பக் கோலங்களைப் போட்டிபோட்டு ஏற்றுக்கொள்ள எண்ணங்கொண்டவர்கள்,

உலகில் பிற இனத்தவர்களை ஆள நினைக்காமல், உலகில் பிறரைப்போல் உரிமையுடன் வாழ விழையும் விழைவினை நெஞ்சில் ஏந்திய வீரர்கள் நாம் தமிழர் கட்சி மறவர்கள்; அவர்கள் கையில் பெருமையுடன் ஏந்தும் புலிக்கொடி, வையம் வியந்து பாராட்டும்



கல்லணையைக் கட்டிய கரிகாலன் ஏந்திய கொடி; கீழைக் கடலைச் சோழர் கடலாக்கி, அந்த ஆழக் கடலை அணைத்து நின்ற 25 பெருமைமிகு நாடுகளை வென்று ஆண்ட அருண்மொழித் தேவனாம் இராசராசன் ஏந்திய கொடி; பண்டைத் தமிழ் ஆண்ட பண்டையராம் பாண்டியரின் மீன் கொடிக்கும், உயரம் அதுவே என உயர்ந்து நிற்கும் இமயத்தின் உயரே பறந்த வில் அம்புக் கொடிக்கும் உடன்பிறப்பு உறவு கொண்ட புலிக்கொடியே, நாம் தமிழர் கட்சியின் ஓங்குபுகழ்க்கொடி.

கட்சிக்கொடியின் நீளமும் அகலமும் மூன்றிற்கு இரண்டு என்ற அளவுறவு கொண்டவை.

கொடியின் செவ்வண்ணப் பின்புலம் நம் இனத்தையும் மொழியையும் நாட்டையும் மீட்கும் போரில் செம்மாவீரர்கள் சிந்திய செங்குருதி வெள்ளத்தைக் குறிக்கிறது; இறுதி இலக்கினை நாம் அடையும் முன், இன்னும் நாம் சிந்த வேண்டிய செங்குருதியையும் அச் செவ்வண்ணம் சேர்த்துக் குறித்துச் செம்மாந்து பறக்கிறது.

புலித் தலையைச் சூழ இருக்கும் கருவட்டம் , நம் மக்களை அடர்வாய்ச் சூழ்ந்திருக்கும் அடிமை இருட்டையும், அறியாமை இருட்டையும் குறிக்கிறது.

அடிமைத் தளை அறுத்து, மிடிமை நிலை முறிக்கப் பாய்ந்தெழும் இளந்தமிழ்ப் புலிகளை-

விலங்குகளிலேயே விட்டுக்கொடுப்பில்லா புலிவிலங்கு, வீழ்த்தப்பெறும் இரைகளில் வலப்பக்கம் வீழும் இரைகளை மட்டுமே உண்பது என்ற நிலைப்பாடுகொண்ட மானப்புலி விலங்கு, தாக்குதல் எனில் பாய்ச்சலே தாக்குதல் என்ற சூழ்திறன் கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



புலிவிலங்கு, அரிமாவையே வெல்லும் வலிமைகொண்ட புலிமா குறிக்கிறது.

பன்னூற்றுவராய், பல்லாயிரவராய் எம் இனத்தமிழர் எழுந்து, 360 பாகைத் திசை எங்கும் பகைமுகம் நோக்கிப் பாய்வதை, வட்டமெங்கும் கிளைத்துக் கிளம்பிப் பாயும் இளங்கதிர்வீச்சுக் குறியீடுகள் குறிக்கின்றன.

இளமஞ்சள் வண்ணத்தோடு எழும் கதிர்வீச்சுகளில், 26 எண்ணிக்கைகொண்ட பெருங்கதிர்த் தொகுதி, பெருமைமிகு நம் தமிழர்த் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் பிறந்த நாளாம் நவம்பர் 26ஐக் குறித்து, அப்பெருமகனைப் பெருமையுடன் மதித்துப் பறக்கிறது.

பளிச்செனப் பாயும் 27 எண்ணிக்கைகொண்ட இளமஞ்சள் சிறுகதிர்த் தொகுதி, நம் இன விடுதலைக்குக் களமாடி, நம் உளப்புலத்தில் வித்தாகிய மாவீரர்கள் வணக்க நாளாம் நவம்பர் 27ஐக் குறித்துப் புகழ்பாடியும், நம் கடனை நினைவூட்டியும் பறக்கிறது.

கட்சிக்கொடி, நெய்ப்பட்டு(நைலான்)க் கயிற்றோடு இணைத்து மூன்று இடங்களில் கட்டப்பட வேண்டும்.

கொடி ஏற்றும்போதும், இறக்கும்போதும் கொடிப் பாடலை (பிற்சேர்க்கையில், ‘இ’ பகுதியைக் காண்க.) இசைத்த வண்ணமே உரிய வணக்கத்தோடு, ஏற்றவும், இறக்கவும் வேண்டும்.

கொடிக்கம்பம், சிவப்பு, மஞ்சள் ஆகிய இரு வண்ணங்களால் பூசப்பட வேணடும். அடியிலிருந்து தொடங்கி, ஓரடி உயரத்திற்குச் செவ்வண்ணம், அடுத்து 4 அங்குல உயரத்திற்கு மஞ்சள்



வண்ணம், அடுத்து ஓரடி செவ்வண்ணம், அடுத்து 4 அங்குலம் மஞ்சள் வண்ணம் என்றவாறு, முழு உயரத்திலும் இரு வண்ணங் களையும் மாற்றி மாற்றிப் பூச வேண்டும். கொடிக்கம்பத்தின் உயரம் குறைந்தது 16 அடி இருக்க வேண்டும். அதற்குமேல் உயரம், 16 அங்குலங்களின் மடங்குகளாகக் கூட்டி அமைக்கப்பட வேண்டும்.

## 8. தமிழர் குமுகம் (சமூகம்)பற்றிய மதிப்பீடு

அமெரிக்க முற்றாளுமையாலும், (ஏகாதிபத்தியத்தாலும்) தாராளமயப் பொருளியலாலும் பாதிக்கப்படுகிறதும், அரை-நிலவுடைமை, அரை முதலாளிய, பன்னாட்டுப் பெருவணிக வல்லாண்மைக்குட்பட்டதும் ஆன இந்திப்பேரின ஒடுக்கு முறைக்கும், வந்தேறி(மனுநெறியர் + திராவிடர்)ப் பிறமொழி இன ஒடுக்கு முறைக்கும் ஆட்பட்டதாக, மனுவியத்தால் குமுகாய, மொழிப் பண்பாடு சிதைக்கப்பட்டுப் பெரிதும் உரிமைகளற்றதாக, (வழிபாட்டு மொழி, வழக்குமொழி, கல்விமொழி, பாராளுமன்ற மொழி முதலிய மொழிஉரிமைகள் அற்றதாக), திராவிடத்தால், உள்ளும், புறமும் தமிழ்நிலங்களைப் பறி கொடுத்ததோடு, ஆற்றுநீர் உரிமைகளையும், அதிகாரமற்ற தமிழ்நாட்டு ஆட்சியைக்கூட ஆளும் உரிமையையும் இழந்ததாக , தாழ்வு மனப்பான்மையுற்றதாக, ஒருமைப் பண்பற்றதாக, அடிமைக் குணமுள்ளதாக உள்ளது, நம் தமிழர் தேசியக் குமுகாயம். வந்தேறித் திராவிடத்தால், 16ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் உட்பகுதி நிலங்களைத் தெலுங்கர், மராட்டியரிடம் இழந்தோம். பின்னர் எல்லையோர நிலப்பகுதிகளை, அண்டை மாநிலங்களிடம் இழந்தோம். அதனால், பொருளியல் கட்டுமானங்களையும் இழந்தோம். விளைவாக, தமிழ்நாட்டு ஆட்சியையே திராவிடர்களிடம் இழந்தோம். தொடர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



இன்றுவரை, திராவிடர்களிடம் அடிமைகளாக இருந்து வருகிறோம், என்ற அறிவும் மானமும் அற்றவர்களாக இருக்கிறோம். மேலும், "நம்முடைய முந்தைய ஆண்டைகளான முகமதியர்கள்,விசயநகர நாயக்கர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியோருடைய அரசியல் அதிகாரம் நீங்கினாலும், அவர்களுடைய ஆளுமைச் சின்னங்கள் அகற்றப்படவில்லை; அவர்களுடைய பொருள் ஆளுமைகளும் (நிலவுடைமை, தொழிலுடைமை) நீக்கப்பட வில்லை; கட்டுப்படுத்தப்படவுமில்லை", என்ற புரிதல் அற்றவர் களாக இருக்கிறோம். தொடர்வினையாக, பிற மாநிலத்தவர்க்கும், பிற நாட்டினர்க்கும் வேட்டைக் காடாய் தமிழ்நாடு மாறி வருகிறது. "தமிழ், தமிழரை வாழவைக்காது"', என்று தமிழர்கள் கருதி, தன்னம்பிக்கை இழந்து, தமிழர்கள் ஆங்கிலத்திற்கும், பிற மொழிகளுக்கும் ஒரு பேரச்சத்தோடு அடிமையாகி வருகின்றனர். சில வேளைகளில் தமிழில் பேசினாலும், பெரிதும் பிறமொழிகள் கலந்தே பேசுகின்றனர்.

ஆங்கிலேயர் காலம் தொடங்கி இன்றுவரை ஏற்பட்டிருக்கிற கல்விப் பரவலாலும், அரசியல் சமூக விழிப்புணர்ச்சியாலும், ஒடுக்கப்பட்ட தமிழர்களின்(அயோத்திதாசர், இரட்டை மலையார், ஐயா வைகுண்டர் முதலியோரின்) நீண்டகாலப் போராட்டங்களாலும், மனுவியத்தால் தாம் இழிவுபடுத்தப்படுவதைப் போலத் தம்மைச் சார்ந்தோரும் இழிவுபடுத்தப்படுவதை எதிர்த்துப் போராடிய அம்பேட்கர், பெரியார் முதலியோர் போராட்டங்களாலும் சாதிக் கொடுமைகள் குறைந்திருந்தாலும், பற்றாக்குறை களுக்கிடையே நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முழுமையற்றதும், பொருளற்றதும், மாநில உரிமையையும், மகளிர் உரிமையையும் பற்றிக் கவலைப்படாததும் ஆன சாதிவாரி ஒதுக்கீட்டினால், தமிழ்ச்



சாதிகளுக்கிடையே முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முரண்பாடுகள் முற்றி வருகின்றன. ஆளுமைச் சாதியர் பறித்த நிலங்களை மீட்கும் பணியையும், தமிழர் இனக்கட்டுமானப் பணிகளையும் இணைத்துக் கொள்ளாத வெறும் சாதி ஒழிப்புக் கூப்பாடுகள் கொஞ்சமும் பயனற்றுப் போயின.

"தமிழ்நாட்டில் தமிழர்மீது மேலாண்மை செய்வதில்தான், மனுவியத்திற்கும், திராவிடத்திற்கும் போட்டியேதவிர, கோட்பாட்டில் இல்லை. கோட்பாட்டு அடிப்படையில் திராவிடம், மனுவியத்தை முழுமையாக எதிர்ப்பது உண்மையானால், மனுவிய மொழிச் (சமற்கிருதம்) சொற்களை, தாங்கள் பேசும் மொழிகளிலிருந்து நீக்கிவிட்டுத் தாய்த் தமிழுக்குத் திரும்பியிருக்கும்", என்ற தெளிவு பெரும்பான்மைத் தமிழருக்கு இன்மையால், "மனுவியமும், திராவிடமும் ஒரே தன்மையான இரண்டு எதிரிகள்", என்பதை அறியாமல் இருக்கிறார்கள். உண்மை என்னவெனில், இரண்டும் இம்மண்ணிற்கு வந்து குடியேறிய தன்மையன. தமிழியம், தமிழ் ஆகியவற்றின் திரிபு வடிவத் தன்மையன. தமிழ்த் திரிபு வடிவமான சமற்கிருதத்தால் நிலைப்பன. சமற்கிருதத்தாலும், இந்தியாலும், ஆங்கிலத்தாலும், தெலுங்கு, கன்னடம், மலையாளத்தாலும் தமிழைத் தொடர்ந்து அழித்துவருவன. மொழிவழிப்பட்ட தனித் தேசிய இனம் அற்றன. மனுவியமும், மனுவிய மொழியும், பண்பாடுமே இந்தியத் துணைக்கண்டத்தில் தொன்மையானவை என்றும், மற்றவையெல்லாம் அவற்றைச் சார்ந்தவை என்றும் பொய்யாக மனுவியம் முன்மொழியும். "தமிழர்க்கென்று தனி வரலாறுமில்லை; பண்பாடும் இல்லை; தமிழர்க்கு இருப்பதெல்லாம், மனுவியம் சார்ந்த வரலாறும், இலக்கியமும், பண்பாடுமே", என்று திராவிடம் வழிமொழியும். பிறப்பு சார்ந்த உயர்வுதாழ்வு கற்பிக்கும்

படிப்பகம்

www.padippakam.com



இந்து மதத்தைத் தூக்கிப்பிடிக்கும் மனுவியம்; இந்து மதத்திற்கு மாற்றாகத் தமிழியத்தை முன்னிறுத்தாமல், திராவிடம் இந்துமதச் சீர்திருத்தம் பேசும்; சாதியின் அடிப்படையிலேயே நீண்டகாலத் தீர்வுகளைக்கூடத் தேடும். மனுவியமும், திராவிடமும் தன்னலம் சார்ந்து மட்டும் இயங்குபவை; வெவ்வேறு சூழல்களில், தன்னலத் தேவைக்கேற்ப இரண்டும் ஒன்றுக்கொன்று முரணிக்கொண்டு மோதுபவை; அதைப்போலவே, தன்னலத் தேவைக்காக இரண்டும் இணங்கிப் பிணைந்து கொள்பவை. தமிழரை அடிமைப்படுத்துவன; மறுத்தால் அழிப்பன. மேற்கண்டத் தெளிவின்மையால் "மனுவியத்திலிருந்து, திராவிடம் தமிழர்களைக் காக்கும்", என்று பலர் தவறாக நம்பி, திராவிடத்தின் பின்னே அணிவகுத்துக் கிடக்கிறார்கள். சிலர், " திராவிடத்திலிருந்து, தமிழர்களை மனுவியம் காக்கும்" , என்று நம்பி மனுவியத்திற்குத் தொண்டு செய்கிறார்கள். மேலும், தமிழகச் சூழலிலும், ஏன் இந்தியச் சூழலிலும்கூட நிலவிவரும் கோட்பாட்டு முரண்பாடு, தமிழியத் திற்கும் தமிழியம் அல்லாதவற்றிற்குமான முரண்பாடே தவிர வேறு எதுவுமில்லை என்ற தெளிவு தமிழரிடையே இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

நடப்புக்காலத் திராவிடம், தனது தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத் தமிழர்களுக்கு மது ஊட்டி, அவர்களுடைய அறிவையும், விழிப்புணர்வையும் அடியோடு அழித்து வருவதோடு, தமிழர்களிடமிருந்து, பெருந்தொகையைப் பிடுங்கிக் கொள்கிறது. பிடுங்கிய தொகையில் ஒரு பகுதியை, இலவயத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவய அரிசி, மின்விசிறி, மின்கலக்கி, மாவாட்டி முதலிய பொருள்களைக் கொடுப்பதற்காகச் செலவழித்து, தமிழர்களிடையே உழைக்க விரும்பாப் பண்பையும், பிறரைச் சார்ந்திருக்கும் மனநோயையும் உண்டாக்கி வருகிறது. சாரமாக, துய்ப்புப் பண்புள்ள வெறும் விலங்குகளாகவே தமிழர்களை, இன்றையத் திராவிடம் மாற்றியிருக்கிறது.



## 9. இந்திய அரசு பற்றிய மதிப்பீடு

மாநில அதிகாரங்களைப் பறித்து நடுவில் குவித்து வைத்துக்கொண்டு, தாராளப் பொருளியலுக்கும், அமெரிக்க முற்றாளுமைக்கும் ஆட்பட்ட தரகு முதலாளிய, மனுவிய (ஆரியப் பார்ப்பனிய) இந்திப் பேரின வல்லாளுமை அரசாக நடுவணரசு நிலவுகிறது. இந்தித் தேசிய இனம், தன்னை ஆளும் இனமாகவும், பிற தேசிய இனங்களை அதன் காலடியில் விழுந்துகிடக்கிற தேசிய இனங்களாகவும் கருதிக் கொள்கிறது. குறிப்பாகத் தமிழ் இனத்தை அடிமை இனமாக நடத்துவதோடு, அழிக்கப்பட வேண்டிய இனமாகவும் தீர்மானித்து, இந்தி மனுவிய அரசு செயற்பட்டு வருகிறது.

தமிழீழச் சிக்கலில் வெகுண்டெழுந்த தமிழக மக்களின் போராட்டத்தையோ, தமிழக சட்டமன்றத் தீர்மானத்தையோ, முதலமைச்சர் மடலையோ பொருட்படுத்தாமல் காலில் போட்டு மிதித்தது இந்திய நடுவணரசு. தமிழ்த்தேசிய இனச்சிக்கல்களின் தீர்வுகளுக்கும், தமிழீழத்திற்கும் எதிராக இருந்து, தமிழீழத்தில் தமிழர்களை ஒரேயடியாய் அழித்தது. தமிழக மீனவர்களைப் படிப்படியாய் அழித்து வருகிறது. தமிழக நீராதாரங்களைப் பிற மாநிலங்களுக்குப் பிடுங்கிக் கொடுத்து, வேளாண் தமிழர்களை மெல்ல மெல்லக் கொல்கிறது. அணுமின் நிலையங்களைத் தமிழகத்தில் அடாவடியாய்த் திறந்து, தமிழர்களை அழிக்கத் திட்டமிடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## 10. திராவிடம்பற்றிய மதிப்பீடு

2000 ஆண்டுகளுக்கு மேலாக, வள்ளுவர் தொடங்கி வள்ளலார் ஊடாக மனுவிய எதிர்ப்பு மரபினைப் போற்றி வந்த அறிவுநெறிப் பொதுமைத் தமிழர் ஏற்றுக்கொள்ளும் வகையில், தமிழர்க்குத் தலைமையாய் உட்கார்ந்துகொண்டே திராவிடத்தின் குமுகாயத் தளம், மனுநெறியர் ஆளுமை எதிர்ப்பு, மனுவிய மடமை எதிர்ப்பு, சாதிய இட ஒதுக்கீடு, சமனியம், பெண்ணுரிமை ஆகிய தளங்களில் எண்ணற்ற தமிழர் ஒற்றுமையுடன் பாடாற்றித் தமிழர்கு அறிவும் மானமும் ஊட்டி, அரசியல் விடுதலையும், பொருளியல் விடுதலையும் வாங்கித் தருவதாய் ஓங்கி உரைத்தது.

திராவிடத்தின் அரசியல் தளமும், தமிழர்க்கு அரசியல், பொருளியல் சார்ந்த முழு உரிமையைப் பெற்றுத் தந்துத் தமிழுக்கும் தமிழர்கும் பொற்கால நல்வாழ்வு படைப்பதாகச் சொல்லி தலைமுறை கோடிகண்ட தலைமொழியாம் தமிழின் புகழ் பாடி, தமிழர்க்குத் தமிழின்ப உணர்வு ஊட்டியது. நூற்றாண்டுப் பெருமைகொண்டாடும் திராவிடத்தின் இரு தளங்களும் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வினைத் தீர்மானிக்கும் மேற்கட்டுமானக் கூறுகளோடு தங்கள் சீர்த்த பணிகளை நிறுத்திக்கொண்டு, அடிக்கட்டுமானக் கூறுகளான தமிழர் அரசியல் விடுதலை, பொருளியல் விடுதலை என்பவற்றில் உளதுபோலக் காட்டி, இலதாக நாட்டும் இரண்டக நிலை கொண்டனர். முடிவு, முள்ளி வாய்க்காலில் தமிழினப் படுகொலையாய் முடிந்தது; கீழைக் கடலில் மீனவத் தமிழரின் தொடர்கொலையாய் முடிந்தது; தமிழ்நாட்டு ஆறுகளின் உயிரோட்டம் முடிந்தது; தில்லியர்க்கும் திராவிடர்க்கும் தீரா அடிமைகளாய் ஆகும் வகையில் தமிழர் வாழ்வு தள்ளப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் உள்ள திராவிடம், தமிழர்களைத் தொடர்ந்து தனது ஆளுமையின்கீழ், கடந்த ஐந்நூறு ஆண்டுக் காலமாக வைத்திருக்கிறது. கொஞ்சமும் வெட்கமின்றி, இந்த மக்களாட்சிக் காலத்திலும், தொடர்ந்து அடிமையாக வைத்திருக்க விரும்புகிறது. அதனால், தமிழ்நாட்டைத் திராவிட நாடாகவே நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழர்களுக்கு, தமிழர்களின் இன்னொரு எதிரியும், மூல எதிரியுமான மனு நெறியர்கள்பற்றித் தொடர்ந்து, திராவிடம் பூச்சாண்டி காட்டி வருகிறது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கருத்தியலை மனமார ஏற்காததோடு, தமிழ்த்தேசிய இன உருவாக்கம் உருவாகாமல் கவனமாகப் பார்த்து வருகிறது. திராவிடம் நடத்தும் பல்வேறு அமைப்புகளில் தமிழ், தமிழர் ஆகிய முன்னொட்டுகள் அமையாமலும், திராவிட முன்னொட்டுகள் அமைவதையும் மிக எச்சரிக்கையுடன் பேணி வருகிறது. அதேவேளை, மனு நெறியர்களோடு பங்கு போடுவதில் சிக்கல் வரும்போதெல்லாம், திராவிடம் அவர்களை எதிர்க்கும். மற்ற, ஆதாயம் வரும் வேளைகளில், அது மனு நெறியர்களோடு கொஞ்சிக் குலாவும்; கூட்டணியாகச் சேர்ந்துகொண்டு, தமிழர்களை ஆளும்; அழிக்கும். தமிழர்களுக்கு, மனு நெறியர் களாலும், பிற பகுதித் திராவிடர்களாலும் தீங்கு நேரும்போது, தமிழர்களுக்கு உதவும் வகையில் குரல்கொடுத்து நடிக்கும். நெருக்கடி முற்றும்போது, மனு நெறியர்களோடும், பிற திராவிடர் களோடும் சேர்ந்து, தமிழர்களை ஒழிக்கும் அல்லது பாராமுகமாய்ப் பதுங்கும். திராவிடம் ஆட்சியில் இருக்கும்போது, தமிழர் உரிமைகளுக்காகப் பலவற்றைச் செய்ய விளம்பர முன்னேற்பாடு களோடு முன்வரும்; மூல எசமானனான இந்தியத் தேசியம் மறுத்தால், முணுமுணுப்புக்கூடச் செய்யாமல் முடங்கிக்கொள்ளும்; செய்யும் சிலவற்றைக்கூட அரைகுறையாகச் செய்யும். ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



அதே வேளை, மனு நெறி இந்தியத்திற்கு கங்காணி வேலையைச் சரியாகப் பார்க்கும். ஆட்சியில் இல்லாத நிலையில், தமிழர் சார்பாகப் போர்க்குரல் எழுப்பும்.

## 11. உடனடி இலக்கு

இந்தியாவில் அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநிலத்தவரே ஆளும் நிலையில், தமிழ்நாட்டில் தமிழர் ஆளமுடியாத நிலை தொடர்ந்து நிலவுவதை மாற்றி, தமிழரை ஆட்சிப் பீடத்தில் ஏற்றுவதே உடனடி இலக்காகும்.

## 12. அடுத்த இலக்கு

தமிழினம் தன் அரசியல், பொருளியல், குமுகாய (சமுதாய), மொழி, பண்பாட்டு உரிமைகளை இழந்ததால்,தன் அடையாளத்தையே இழந்து நிற்கிறது. தமிழ்நாட்டு இயற்கை வளமும் மாற்றாரால் சூறையாடப்பட்டு வருகிறது. தமிழரின் இன, மொழி நலத்தையும், நாட்டு வளத்தையும் பேணுவதற்காகப் பொருளியல், சாதி மத ஏற்றத்தாழ்வுகளைத் தாண்டி, தமிழர்களைத் தமிழர்களாகத் தமிழாலும், தமிழர் என்ற இன உறவாலும் ஓரணியில் திரட்டியும், மற்ற மாநிலங்களின் ஒத்துழைப்போடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்து, இந்திய ஒன்றிய இறையாண்மைக்குட்பட்ட முழுத் தன்னாட்சி உரிமைகொண்ட மாநிலங்களின் உண்மையான கூட்டாட்சி ஒன்றியத்தை நிறுவுதலே நாம்தமிழர் கட்சியின் அடுத்த திட்டமாகும்.

## 13. வழிகாட்டி மெய்ம்மம்

நாம்தமிழர் கட்சி, நடப்பு வாழ்க்கைக்குப் பொருந்துகிற தமிழர்தம் வாழ்வியல் விழுமியங்களைத் தமிழியப் பேராசான்



களான தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகியோரிடமிருந்தும், மற்ற பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பெருமித உணர்வோடு பெற்றுக்கொள்ளும். கட்சி தனது, மொழிமீட்சிக் கருத்தியலைத் தனித்தமிழ் இயக்கங்கண்ட மறைமலையடிகளார், பாவாணர், தமிழியக்கம் கண்ட பாவேந்தர் முதலியோரிடமிருந்தும், விடுதலைக் கண்ணோட்டத்தை நாவலர் சோமசுந்தர பாரதியார், அண்ணல் தங்கோ, சாலை இளந்திரையனார், பெருஞ்சித்திரனார், புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன், தமிழர் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முதலியோர்களின் கொள்கைகளிலிருந்தும் பொருளின வேறுபாடற்ற (வர்க்கபேதமற்ற) கண்ணோட்டத்தை, வள்ளுவம், மார்க்கிசியம், இலெனினியத்திடமிருந்தும், பகுத்தறிவுக் கொள்கைகளையும், சாதி ஒழிப்பையும் திருவள்ளுவர், தமிழ்ச்சித்தர்கள், வள்ளலார், அத்திவாக்கம் வெங்கடாசலம், பெரியார், குத்தூசி குருசாமி, அய்யாவழி வைகுண்டர், அயோத்திதாசப் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், சிவகங்கை சு. இராமச்சந்திரனார், அண்ணல் அம்பேட்கர் முதலியோரிடமிருந்தும் பெறுகிறது.

அனைத்திற்கும் மேலாக, திருக்குறளைத் தமிழர் இனமீட்சிப் புரட்சி நூலாகவும், தமிழர்க்கான வாழ்வியல் வழிகாட்டி நூலாகவும், தமிழர் தேசிய நூலாகவும் நாம் தமிழர் கட்சி மதித்துப் போற்றும்.

## 14. தமிழ்த்தேசிய இனம்

தமிழர்கள் ஒரு தேசிய இனம் எனும் தகுதியுடைய இனம். இவ்வினத்திற்கான பொதுமொழி, தொடர்ச்சியான நிலப்பரப்புடைய பொதுவான வாழும் பகுதி, பொதுப்பொருளாதார வாழ்வு, ஓரினமென்ற மன இயல்பு ஆகிய கூறுகளுடன் வரலாற்று அடிப்படையில் உருவான நிலையான மக்களினம், தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



குமுகாயமாகும். தனக்கென அரசியல், பண்பாட்டு வாழ்வியல் உரிமைகளோடும், இறையாண்மையோடும் இருந்த, இருக்க வேண்டிய ஓர் இனம், தமிழினம் ஆகும்.

மெய்நடப்பில் பார்க்கப்போனால், தமிழர்க்குப் பொது மொழியாக இருக்கிற தமிழ்மொழி, தமிழரின் வாழ்வியல் மொழியாக இல்லை. வாழ்வில் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிற தமிழ்கூடத் தமிழாக இல்லை. பிறமொழிகள் கலந்தும், திரிந்தும், சிதைந்தும் குற்றுயிரும் குலையுயிருமாகக் குன்றிக் கிடக்கிறது. தமிழர்க்குத் தம் மொழி, கல்வியிலும், ஆட்சியிலும், வழிபாட்டிலும், இன்னபிற துறைகளிலும் இடம்பெறவில்லையே என்ற தன்மான உணர்வு இல்லை. மணவிழாக்களில்கூட, அழைப்பிதழும், நுழைவு வாயில் பதாகையும் ஆங்கிலத்தில் எழுதப்படுவதைப் பெருமையாகக் கொள்ளும் இழிவு நிலவுகிறது. தமிழரின் இத்தகைய உளநிலை மாற்றப்பட்டு, தமிழ் மீட்கப்பட்டால்தான் தமிழினக் கட்டுமானம் உருப்பெறும்.

தமிழர்க்குத் தொடர்ச்சியான நிலப்பரப்புடைய பொதுவான வாழும் பகுதி இருப்பினும், நாட்டின் உட்பகுதியிலேயே பிற மொழியினர், குறிப்பிடத்தக்க நிலப்பகுதிகளைக் கைப்பற்றி யுள்ளனர். நாட்டின் எல்லைகளைச் சுற்றிலும், இப்போதைய தமிழ்நாட்டின் நிலப்பரப்பிற்குச் சமமான நிலப்பகுதிகள் அண்டை மாநிலங்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. இழந்த நிலப்பகுதிகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற உறுதியினையும், செயல்நோக்கிய உந்துதலையும் தமிழர்க்கு ஊட்ட வேண்டும். மேலும், தமிழர்கள் ஒரு பொதுப் பொருளாதாரத்தின்கீழ் இருப்பினும், அப் பொருளாதாரம் அயலவர் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்ற உண்மையைத் தமிழர்க்கு ஊட்ட வேண்டும்.



அடுத்தது, மிகவும் அடிப்படையானது. தமிழர்க்குத் தாம், தன்னிகரில்லாத் தொன்மொழியாம் தமிழ்மொழி சார்ந்த ஓர் இனம் என்ற உணர்வு மிகவும் மேலோட்டமாக இருக்கிறது. ஆனால், சாதிவழி சார்ந்த இனம் அல்லது மதவழி சார்ந்த இனம் என்ற உணர்வு ஆழமாக இருக்கிறது. தமிழரின் மொழிவழி இன உணர்வு, அவர்களுக்குப் பெருமிதம் ஊட்டித் தன்னம்பிக்கை தரும் நிலையில், இன்று வலுவாக இல்லை. எனவே, உரிய வரலாற்றுத் தெளிவுகளை ஊட்டியும், இனநலம்தரும் பயன்களை எடுத்துக்காட்டியும் இனவழிப்பட்ட உள்ளத்து ஓர்மையை ஏற்படுத்துவது, தேசிய இனக்கட்டுமானத்திற்குத் தேவையான முதற்பணியாகும்.

இன ஓர்மையை உள்ளத்தில் பெற்றவர்கள், இனத்தையும், தங்களையும் மேம்படுத்தும் பணிகளில் ஒற்றுமையோடு, இணைவதும், இடையறாது பணியாற்றுவதும் இரண்டாம் பணியாகும். அப்போதுதான், இன ஒற்றுமையின் வலிமையை உணரும் வாய்ப்புக் கிட்டும். வலிமையை உணர்ந்த தமிழ்த்தேசிய இனம், "நாம் தமிழர்", என ஒருசேர முழங்கித் தன் உரிமையை மீட்க எழுந்து போராடும்.

## 15. பிறமொழியாளர்கள்

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள், பிற மொழியாளர்கள். அவர்கள் தமிழ்நாட்டுக் குடியுரிமையுடன் மொழிச் சிறுபான்மையோராக, வாழத் தகுதி பெற்றோராவர். அவர்களது நலன், பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்படும். பிறமொழியாளர்கள், பிறமொழியாளர்களாகவே தொடர்ந்து வாழ்வதும் அல்லது அந்தப் பிறமொழிகளுக்கும் தாய்மொழி தமிழே, என்று உணர்ந்தறிந்து, தமிழை வாழ்வியல்

படிப்பகம்

www.padippakam.com



மொழியாகவும், அடுத்து, வழிவழியாகத் தாய்மொழியாகவும் ஏற்றுத் தமிழராக வாழ்வதும் அவர்களுக்குள்ள உரிமை.

## 16. உறுப்பினர் தகுதி

கட்சிக் குறிக்கோளையும், கொள்கைகளையும் ஏற்றுச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதாக உறுதி தரும், 18 அகவை (வயது) நிரம்பிய, இந்திய ஒன்றியக் குடிமக்களான ஆண், பெண், திருநங்கையர் ஆகிய முப்பாலினத்தவர் மட்டும்,

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தால் அல்லது தமிழை வாழ்வியல் மொழியாக ஏற்றுத் தாய்த் தமிழ்மொழிக்குத் திரும்பியிருந்தால்,

உழைப்புச் சுரண்டலையும், பிறப்புவழி உயர்வு, தாழ்வு கற்பித்துத் தமிழினத்தைத் துண்டாடுவதையும், தமிழ்மொழியை இழிவுபடுத்தியும், திரித்து வேறாக்கியும் தமிழினத்தை அழிப்பதையும் ஞாயப்படுத்தும் மனுவியத்தை (வருணாசிரமக் கொள்கைகளை) மறுத்து, இயற்கை, உலகப் பொதுமை, உயிரி நேயம், அறிவியம் ஆகியவை தழுவிய முழுமை வாழ்வியலான அறம், பொருள், இன்பம் ஆகிய தமிழிய நெறிகளை ஏற்று வாழும் நிலையிலும்,

தமிழ்மொழியையும், தமிழ் மண்ணையும், தமிழ்நாட்டு மக்கள் உரிமைகளையும், நலன்களையும் போற்றிப் பாதுகாத்து, அதற்காகப் போராடுகின்ற நிலையிலும்,

உறுப்பினர்களாகச் சேரத் தகுதி உடையவர்கள்.

அவர்கள், தமிழ்நாட்டிலோ அல்லது பிற மாநிலங்களிலோ வாழ்பவர்களாக இருக்கலாம்.வெளிநாட்டில் வாழ்பவராக



இருப்பின், இந்திய ஒன்றியத்தின் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வெண்டும்.

## 17. கட்சிப் பணியின் அடிப்படையும், நடைமுறையும்

தமிழர் தேசிய அரசியலின் முன் தேவையான தமிழர் இனக்கட்டுமானமும், கட்டுமானம் சார்ந்த தமிழர் ஒற்றுமையும், ஒற்றுமை சார்ந்த வலிமையும், வலிமை சார்ந்த, தமிழர் இறையாண்மைக் குறிக்கோள்மீதான பற்றுறுதியும், பற்றுறுதி சார்ந்த இயக்கச் செயற்பாடுகளுமே, நாம்தமிழர் கட்சியின் அடிப்படையிலும் அடிப்படை.

"அவரவர் நாட்டில், அவரவர்க்கு உரிமை", என்ற உலகளாவிய இயற்கை நெறியே, "தமிழர் தாயகத்தில் தமிழர்க்கு உரிமை", என்ற கொள்கைக்கு அடிப்படை.

"தமிழர் உரிமை மீட்சி", என்ற குறிக்கோளே நாம் தமிழர் கட்சியின் மெய்ப்பாட்டியல் தலைமை என்ற ஏற்பு, ஒரு முகாமையான அடிப்படை.

அரசியல் அதிகாரம் மீட்டல்,பொருள் சுரண்டலை ஒழித்து, பொதுவுடைமையை நிலைநாட்டுதல், தமிழ்மொழியின் மீதான அழிப்புச் செயல்களை நீக்கி, அதைத் தூய மரபுவழியில் வளர்த்தெடுத்தல், சாதிக் கொடுமைகளை ஒழித்து, சமஉரிமையை நிலைநாட்டல், அனைவர்க்கும் கல்வி, வேலைவாய்ப்பு முதலியவற்றில் உரிய பங்குகளை உறுதி செய்தல், மக்களிடையே நிலவும், மூடநம்பிக்கைகளை ஒழித்து, பகுத்தறிவுப் பார்வையை வளர்த்தெடுத்தல் முதலிய அனைத்தும் தவிர்க்க முடியாத தமிழ்த்

படிப்பகம்

www.padippakam.com



தேசியக் கூறுகளே. நாம்தமிழர் கட்சி, மேலே கண்டவற்றில் ஒரு பகுதியையோ அல்லது சில பகுதிகளையோ மட்டும் வைத்துக் கொண்டு, குறிக்கோள் நோக்கிய திட்டங்களை வகுக்காது. தமிழ்த்தேசியத்தைத் தீர்மானிக்கும் அனைத்துப் பகுதிகளையும் ஒன்றிணைத்துச் சிந்திக்கும் முழுமைத் தமிழ்த் தேசியக் கருத்தியல், கட்சியின் வலிமையான அடிப்படை.

தீவிரப்புலனாய்வும், தேடித் தேர்ந்திடும் செய்திகளைத் திரட்டலும், ஆழ்ந்த பகுப்பாய்வும், அறிவார்ந்த ஏரணமும் (தருக்க நெறியும்) சரியான முடிவுகள் எடுப்பதற்கு அடிப்படைகளாகக் கொள்ளப்படும். விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் எம் முடிவும் எட்டப்படமாட்டா.

முடிவுகள், மக்களாட்சி நெறிப்படிப் பெரும்பான்மையின் அடிப்படையில் எடுக்கப்படும்.

படை ஒழுங்குப்படி, முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழர்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களில் இணைந்து, தொண்டு செய்வதன் மூலம் அவர்களோடு நெருங்கிய உறவை மேம்படுத்திக் கொள்வதும்,

கட்சிக் கொள்கைகளை, உரிய கல்வி, பயிற்சியின் மூலம் அணியினர், மக்கள் ஆகியோரிடையே நிலவும் நடைமுறைகளிலிருந்து, குறிக்கோள் நோக்கி முன்னெடுப்பதும்,

பொதுத் திறனாய்வு, தன் திறனாய்வு எனும் முறைகளின் மூலம் கட்சியில் கட்டுப்பாட்டையும், இயக்க ஒழுங்கையும் அடிக்கடி செப்பம் செய்துகொள்வதும் சிறந்த நடைமுறைகளாகப் பேணப்படும்.



கட்சி இயக்கமுறை, அனைத்துத் தரப்பினரையும் உள் வாங்கி, அன்புடன் அணைத்து, குறிக்கோள் நோக்கிய கருத்தொற்றுமை உடையதாக நடைமுறைப்படுத்தப்படும்.

## 18. முரண்பாடுகள்

தமிழ்நாட்டில் நிலவும் சில முகாமையான முரண்பாடுகள் வருமாறு-

1அ. தமிழ்த் தேசிய இனத்திற்கும், இந்தியத் தேசிய இனத்திற்கும் இடையே முரண்பாடு.

ஆ. தமிழ்த் தேசிய இனத்திற்கும், திராவிடத் தேசிய இனத்திற்கும் இடையே முரண்பாடு.

2. தமிழிய (ஆசீவகம், உலகாய்தம், வள்ளுவம், வள்ளலாரியம் முதலிய தமிழ் நெறிகளின் தொகுப்பு) நெறிக்கும், மனுவிய நெறிக்கும் இடையே முரண்பாடு.

3. தமிழியத்திற்கும் முகமதியத்திற்கும், தமிழியத்திற்கும் கிறித்துவத்திற்கும் இடையே முரண்பாடு.

4. தமிழ்த்தேசிய முதலாளிக்கும், பிறதேசிய முதலாளிக்கும் இடையே முரண்பாடு.

5. நிலவுடைமையாளருக்கும், உழவுத் தொழிலாளருக்கும் இடையே முரண்பாடு.

6. முதலாளிக்கும், தொழிலாளிக்குமிடையே முரண்பாடு.

7. மேற்சாதி-கீழ்ச்சாதி, தீண்டாமைக்காளானோர் - தீண்டாமை புரிவோர் இடையே முரண்பாடு.

படிப்பகம்

www.padippakam.com



8. ஆணாளுமை - பெண்ணடிமை முரண்பாடு.

9. நகர்ப்புறத்தார் - கிராமப்புறத்தார் முரண்பாடு.

10. ஆலைத்தொழிலாளி - வேளாண் கூலி, கற்றோர் - கல்லாதோர், அரசு - தனியார், பன்னாட்டு - உள்நாட்டு தொழிலாளர் ஆகியோரிடையே நிலவும் ஊதிய வேற்றுமை முரண்பாடு.

இத்தனை முரண்பாடுகளும் களையப்பட வேண்டியவையே. கருத்து வேற்றுமை இல்லை. ஆனால், ஒரே சமயத்தில் அனைத்தையும் களைய முடியாது என்பதும் உண்மையே.

இவற்றுள் அடிப்படை முரண்பாடுகள் யாவை? முதன்மை முரண்பாடுகள் யாவை? என முடிவெடுப்பது தேவையாகும்.

வாழ்க்கையின் அடிப்படையையும், வளர்ச்சிப்போக்கின் அடிப்படையையும் தீர்மானிக்கிற, பொருள் உருவாக்கத்தில் உள்ளடங்கிய கூறுகளுக்கு இடையிலான முரண்பாடுகள், அடிப்படை முரண்பாடுகள் ஆகும்.

ஒரு காலக்கட்டத்தில், மற்ற முரண்பாடுகளின் வாழ்வு மீதும், வளர்ச்சியின் மீதும் ஒரு குறிப்பிட்ட செல்வாக்கும், உறுதியான பங்களிப்பும் செலுத்துவதை, முதன்மை முரண்பாடு எனத் தீர்மானிக்கலாம்.

முதலாம் முரண்பாட்டின் இருகூறுகளும் முதன்மை முரண்பாடாகும். இந்த முரண்பாடு தீர்க்கப்பட்டு, அயலார் ஆளுமையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் தமிழர்கள் முதலில் உரிமைபெற்றுத், தமிழ்த்தேசிய இனத்தின் உரிமை நிலை நாட்டப்பட்டால்தான், அடுத்த கட்டமான சமனியப் (சமதருமப்) புரட்சிக்கு வழி திறக்கும். ஆகவே,பாதுகாப்பு, வெளியுறவு, நாணயம் ஆகிய மூன்று அதிகாரங்கள் போக எஞ்சிய அதிகாரங்கள் யாவையும் பெற்று, இந்தியக் கூட்டாட்சி ஒன்றியத்தில் தமிழ்நாட்டு மாநிலமும் ஓர் உறுப்பாக இடம் பெறும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைத் தனது திட்டமாகக் கட்சி ஏற்றுள்ளது.



2ஆம் முரண்பாடு என்பது, முதலாம் முரண்பாட்டின் நெறியியல் தளமே ஆகும். மனுவியத்தின் நடைமுறை வடிவமான இந்து மதம், சட்டப் பாதுகாப்புகளாலும், மன்னர்கள் வழிவந்த சொத்துடைமை களாலும் வலுப்பெற்று, இந்தியத் தேசியத்தைத் தாங்கிப்பிடிக்கும் முரண்பாடாகும்.

3ஆம் முரண்பாடுகளான முகமதியமும், கிறித்தவமும் தமிழ்த் தேசியத்தை ஒவ்வொரு காலத்தில் ஆளுமை செலுத்தியவை; சட்டப்பாதுகாப்பும், சொத்துடைமை வலுவும், பன்னாட்டுப் பின்புலமும் கொண்டு, மதவழித் தனி இனக்கட்டுமானம் கொண்டவை; முகமதியத் தமிழரும், கிறித்தவத் தமிழரும் தங்களுடைய முதன்மை அடையாளம், தமிழ்த் தேசிய அடையாளமே என்று உணர்ந்தறிந்து வருவாராயின், நட்பு முரண் வகையிலும், அல்வழிப் பகைமுரண் வகையிலும் இடம்பெறுவர்; இவர்கள் எச்சரிக்கையோடும் விழிப்போடும் அன்போடும் கையாளப்பட வேண்டிய தரப்பினர்.

4ஆம் முரண்பாடு, ஒரு பொருள் இனத்திற்கு உள்ளேயே ஏற்படும் குழுக்களுக்கிடையே உண்டாகும் முரண்பாடு. இந்த முரண்பாட்டைச் செவ்வையாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தேசிய முதலாளிகளை நட்பு ஆற்றலாக மாற்றியமைக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



5, 6ஆம் முரண்பாடுகள், அடித்தளம் பற்றிய முரண்பாடுகள். தொலைநோக்கான சமனிய (சமதர்ம)ப் புரட்சியின் மூலம் மட்டுமே எட்டப் படக்கூடியவை.

இவற்றுள் 7, 8ஆம் முரண்பாடுகள், மேற்கட்டுமானம் பற்றியதாகக் கருதப்படும் முரண்பாடுகள். இவை, தமிழ்நாட்டுச் சூழலில் பேரளவில் தமிழ்த் தேசியக்கட்டுமானத்தையும், பொருள் கட்டமைப்பையும் பாதித்து வருகிறது என்பதைக் கட்சி உணர்கிறது. சாதியத் தீண்டாமை முரண்பாடுகளைத் தீர்க்கும் பரப்புரைகளும், ஒடுக்கும் ஆற்றல்களுக்கு எதிராக உரிய போராட்டங்களும் மேற்கொள்ளப்படும். தமிழினம் பிளவுபடும் எந்தப் போக்கையும் கட்சி ஏற்காது.

9,10 நட்பு முரண்பாடுகள். சந்துசெய் (சமரசத்) திட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் மூலம் தீர்க்கப்படக் கூடியவை.

## 19. பொதுத்திசையும், பொதுவழியும்

தமிழர் உரிமை மீட்சி என்ற இலக்கு, தமிழர்களின் இன்றைய இருப்பு என்ற நிலையிலிருந்து, எந்தத் திசை நோக்கி இருக்கிறதோ, அந்தத் திசையே கட்சியின் பொதுத் திசை என அறியப்படும். பொதுத் திசையைக் கருத்தில்கொண்டு, இலக்கு நோக்கி நாம் மேற்கொள்ளும் வழி, பொது வழி என அறியப்படும். பொதுவழி ஊடான இயக்கம், பலகட்ட நகர்வுகளை உள்ளடக்கியது. சில வேளைகளில், ஒரு நகர்வுக்குப்பின் அடுத்த நகர்வு என்றும், மற்ற சில வேளைகளில், சில நகர்வுகளை இணையாக எடுத்துச் செல்வது என்றும், இயக்கச் செயற்பாட்டுத் திறன் அடிப்படையில் அமையும். மேலும், கட்சியின் குறிக்கோளை குறைந்த இழப்பில், விரைந்து அடைவதற்கு எந்த உத்திகள் (கட்சியின் தனிச் செயற்பாடு, பிற கட்சிகளுடன் கூட்டுச் செயற்பாடு, நம் கட்சியே ஓரணியாய்ச் செயற்படுதல், பல அணிகளாய்ப் பிரிந்து செயற் படுதல், போராட்டங்களைப் பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தல் போன்றவை) பயன்படுமோ, அந்த உத்திகள் கட்சியின் நகர்வு களைத் தீர்மானிக்கும்.





## 20. கட்சியின் வலிமை ஆய்வு

முதன்மை வலிமைகள் : தமிழின உணர்வூட்டப் பெற்ற நடுத்தர மக்கள், உழவர்கள், பலதுறைசார்ந்த தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட ஒடுக்கப் பட்ட அனைத்து மக்கள், இளைஞர்கள், சிறு வணிகர்கள்.

கூட்டாளி வலிமைகள் : தமிழ்த் தேசிய முதலாளிகள், தமிழக வணிகர்கள்.

நேரடி உதவிகள் : பிற மாநிலங்களிலும்,வெளிநாடுகளிலும் உரிமைகளுக்காகப் போராடும் மனித உரிமை இயக்கங்கள் போன்ற பொது அமைப்புகள்.

மறைமுக உதவிகள் : வல்லாண்மை ஆற்றல்களின் (ஆதிக்க சக்திகளின்) உள்முரண்பாடு, கட்சி வளர்ச்சிக்கு மறைமுகமாகப் பயன்படும்.

பகை வலிமைகள் : கந்துவட்டிக்காரர்கள், குமுகாயக் கேடர்கள், சுரண்டும் நிலக்கிழார்கள், மக்கள் நலனுக்கெதிரான தன்னல அதிகாரிகள், தமிழர் மொழி, இன

www.padippakam.com



நலனுக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாய் உள்ளவர்கள்.

விளக்கி, இணைக்க

வேண்டிய வலிமைகள்: சாதி, மத அமைப்புகளிலும், பிற கட்சி களிலும், அமைப்புகளிலும் உள்ள தமிழர்.

அடிப்படை வலிமைகள்: கட்சியினரின் உரிமை வேட்கை, ஒற்றுமை, ஒப்படைப்பு முதலியவை.

## 21. கட்சிச் சார்பு அமைப்புகள்

கட்சி அணியினர், இயக்கக் கல்வி பெறுவதற்குத் துணை செய்யும் வகையில், கட்சியின் பல்வேறு மட்டங்களில் தமிழ்த் தேசியச் சான்றோர்களின் பெயர்களால், படிப்பகங்களும், நூலகங்களும் தொடங்கக் கீழ்க்காணும் சான்றோர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. தமிழ்த் தேசியச் சான்றோர் பட்டியலில், தக்கார் பெயர் ஏதேனும் விடுபட்டிருந்தால், தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்து சேர்த்துக்கொள்ளலாம்.

### தமிழ்த்தேசிய வழிகாட்டிகள்

நிலந்தருதிருவிற் பாண்டியன், கரிகாற்பெருவளத்தான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள், இராசராச சோழன், இராசேந்திரசோழன், வள்ளல் பாண்டித்துரையார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், அண்ணல்தங்கோ, கி.ஆ.பெ. விசுவநாதம், சாலை இளந்திரையன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன், தமிழர் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முதலானோர்.



### தமிழறிஞர்கள்

தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், கம்பர், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரனார், ந.சி. கந்தையா, கதிரைவேலனார், மனோன்மணியம் சுந்தரனார், உ.வே. சாமிநாதனார், பரிதிமாற் கலைஞர், கரந்தை உமாமகேசுவரனார், திரு.வி.க, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், விபுலானந்த அடிகள், மயிலை சீனி வேங்கடசாமி, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, புலவர் குழந்தை, பேராசிரியர் சி. இலக்குவனார், வ.சுப. மாணிக்கம், திருக்குறள் முனிசாமி, அரசமாணிக்கனார், முதலானோர்.

### சமனியப் (சமதர்மப்) புரட்சியாளர்கள்

வள்ளுவர், நந்தி முதல் சட்டைநாதர் வரையிலான பதினெண் சித்தர்கள், தோழர் மா.சிங்காரவேலர், தோழர் ப.சீவானந்தம், தோழர் மாறன், மார்க்கிசு, சேகுவேரா முதலானோர்.

### குமுகாய (சமுதாய) வழிகாட்டிகள்

வள்ளலார், அத்திவாக்கம் வேங்கடாசலம், புரட்சிப் பெரியார், சிவகங்கை சு. இராமச்சந்திரனார், பட்டிவீரன்பட்டி சௌந்தர பாண்டியனார், அறிஞர் அண்ணா, அயோத்திதாசப்பண்டிதர், இரட்டைமலை சீனிவாசனார், அண்ணல் அம்பேட்கர், ஒண்டி வீரன், சமவுரிமைப் போராளி அய்யன்காளி, தோள் சேலைப்போராளி அய்யா வைகுண்டர், இமானுவேல் சேகரன், இதழியத் தந்தை சி.பா. ஆதித்தனார், கண்ணியமிக்க காயிதேமில்லத் இசுமாயில் சாகிபு, எசு.எசு. இராமசாமிபடையாட்சி முதலியோர்.

படிப்பகம்

www.padippakam.com



## போற்றுதலுக்குரிய பெருமக்கள்

மன்னர் பூலித்தேவன், வீரமங்கை வேலு நாச்சியார், மானங்காத்த மருது பாண்டியர், தீரன் சின்னமலை, வீரன் அழகுமுத்துக்கோன், தளபதி ஒண்டிப்புலி, தளபதி சுந்தரலிங்கம், மாவீரன் செண்பகராமன், வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணியசிவா, பாரதியார், தில்லையாடி வள்ளியம்மை, மாயவரம் நாகப்பன், திருப்பூர் குமரன், அஞ்சலை அம்மாள், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், பெருந்தலைவர் காமராசர், நேத்தாசி, பகத்துசிங்கு முதலானோர்.

## மண்ணுரிமை வழிகாட்டிகள்

தமிழ்நாட்டுப் பெயர் ஈகி சங்கரலிங்கனார், மண்,மொழி மீட்பர் மங்கலங்கிழார், சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம், திருத்தணி விநாயகம், திருத்தணி அரசீத்துக்கான், மார்சல் நேசமணி முதலானோர்.

## மொழிப்போர் ஈகியர்

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்ட ஈகியர் நடராசன், தாலமுத்து, சின்னச்சாமி, அரங்கநாதன், மாணவர் இராசேந்திரன் களியக்காவிளை சிதம்பரநாதன், சிவலிங்கம் முதலானோர்.

## தமிழ்த்தேசிய ஈகியர்

அப்துல்ரவூப்பு, முத்துக்குமார், சதாசிவம், சிவப்பிரகாசம், அமரேசன், சீனிவாசன், சோதி, இரவி, சுப்பிரமணி, கோகுல கிருட்டிணன், பாலசுந்தரம், இராசா, சிவானந்தன், இராசசேகர், ஆனந்து இரவிச்சந்திரன், தீபன் செகதீசன், மாரிமுத்து, இலண்டன் முருகதாசு, சண்முகம், செயக்குமார், வீரத் தமிழச்சி செங்கொடி முதலானோர்.



## ஈழப்போராளிகள்

தந்தை செல்வா, தமிழர் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன், ஆன்றன் பாலசிங்கம், சிவக்குமரன், தங்கதுரை, குட்டிமணி, செகன், கரும்புலிமில்லர்,திலீபன், அன்னை பூபதி, தளபதி கிட்டு, சுப. தமிழ்ச்செல்வன், நடேசன், சார்லசு ஆன்றனி, மாலதி, அங்கயற்கண்ணி, புலித்தேவன், விதுசா, தளபதி துர்க்கா முதலியோர்.

# பிற்சேர்க்கை

## அ. ஆவணம்சார்ந்த முன்மாதிரி முழக்கங்கள்

| | |
|---|---|
| நம் மொழி | தமிழ்மொழி |
| நம் இனம் | தமிழர் இனம் |
| நம் தேசம் | தமிழ்த் தேசம் |
| நம் மெய்யியல் | தமிழியம் |
| நாம் தமிழர் | நாம் தமிழர் |
| நாம் தமிழர் | நாம் தமிழர் |
| நாம்தமிழர் ஒன்றாகுவோம் | நாம்தமிழர்வென்றுவாழ்வோம் |
| தமிழ்நாட்டில் எல்லோரும் | வாழவேண்டும்வாழவேண்டும் |
| தமிழ்நாட்டில் தமிழர்களே | ஆளவேண்டும் ஆளவேண்டும் |
| நம்குறிக்கோள்நம்குறிக்கோள் | தமிழர் உரிமைநலம் நம்குறிக்கோள் |
| வெல்லட்டும் வெல்லட்டும் | தமிழ்க்கொற்றம் வெல்லட்டும் |
| உயரட்டும் உயரட்டும் | தமிழ்க்கொடி உயரட்டும் |
| உயரட்டும் உயரட்டும் | புலிக்கொடி உயரட்டும் |
| வெல்கவே வெல்கவே | தமிழீழம் வெல்கவே |

படிப்பகம்

www.padippakam.com



ஈழத் தமிழர் எங்கள் தமிழர்
தமிழீழ நாடு எம் உறவுநாடு
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் முள்ளிவாய்க்கால் மறக்கமாட்டோம்
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் கருணாவை மறக்கமாட்டோம்
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் சோனியாவை மறக்கமாட்டோம்
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் சிதம்பரத்தை மறக்கமாட்டோம்
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் மன்மோகனை மறக்கமாட்டோம்
மறக்கமாட்டோம் மறக்கமாட்டோம் மலையாளிகளை மறக்கமாட்டோம்.
கணக்குத்தீர்ப்போம்கணக்குத்தீர்ப்போம் முள்ளிவாய்க்கால் கணக்குத்தீர்ப்போம்
கணக்குத்தீர்ப்போம்கணக்குத்தீர்ப்போம் அறுநூறு மீனவர் கணக்குத்தீர்ப்போம்
கணக்குத்தீர்ப்போம்கணக்குத்தீர்ப்போம் அமைதிப்படைகணக்குத்தீர்ப்போம்
வேரறுப்போம் வேரறுப்போம் மனுவியத்தை வேரறுப்போம்
வேரறுப்போம் வேரறுப்போம் திராவிடத்தை வேரறுப்போம்
வேரறுப்போம் வேரறுப்போம் இரண்டகத்தை வேரறுப்போம்
மனுவியமும்,திராவிடமும் ஒண்ணு இதை அறியாதார் வாயில் மண்ணு
மீட்டெடுப்போம் மீட்டெடுப்போம் இழந்த மண்ணை மீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம் மீட்டெடுப்போம் கோலாற்றை மீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம் மீட்டெடுப்போம் பெங்களூரைமீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம்மீட்டெடுப்போம் நெல்லூரைமீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம்மீட்டெடுப்போம் நெய்யாற்றை மீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம்மீட்டெடுப்போம் திருப்பதியை மீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம்மீட்டெடுப்போம் சித்தூரை மீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம் மீட்டெடுப்போம் பாலக்காட்டைமீட்டெடுப்போம்
மீட்டெடுப்போம்மீட்டெடுப்போம் இடுக்கியை மீட்டெடுப்போம்
ஒழிப்போம் ஒழிப்போம் தீண்டாமை ஒழிப்போம்
வளர்ப்போம்வளர்ப்போம் சம உரிமை வளர்ப்போம்



வளர்ப்போம் வளர்ப்போம் பொதுவுரிமை வளர்ப்போம்
ஓட்டுவோம் ஓட்டுவோம் சுரண்டலை ஓட்டுவோம்
நாட்டுவோம் நாட்டுவோம் பொதுவுடைமை நாட்டுவோம்
நாட்டுவோம் நாட்டுவோம் சமஉடைமை நாட்டுவோம்
தவிர்ப்போம் தவிர்ப்போம் மொழிக்கலப்பைத்தவிர்ப்போம்
தவிர்ப்போம் தவிர்ப்போம் மொழித்திரிப்பைத்தவிர்ப்போம்
தமிழில் பேசு தமிழில் பேசு தமிழனோடு தமிழில்பேசு
தமிழில்நீ பேசும்போது தமிழ்ச்சொல்லில் பேசுகவே
தமிழில்நீ எழுதும்போது தமிழெழுத்தில் எழுதுகவே
தமிழப்பனே தமிழப்பனே பிள்ளைப்பேர் தமிழில் வை
தமிழ்த்தாயே தமிழ்த்தாயே பிள்ளைப்பேர் தமிழில் வை
மும்மொழிக் கொள்கை முற்றேய்ப்புக் கொள்கை
இருமொழிக் கொள்கை ஏமாற்றுக்கொள்கை
ஒருமொழிக் கொள்கை உரிமைக் கொள்கை
எல்லாக் கல்வியும் தமிழில் கொடு
தமிழில் படித்தோர்க்கே வேலை கொடு
தமிழனே தமிழனே வழிபாட்டில் தமிழை வை
தமிழனே தமிழனே வழக்குமன்றில் தமிழை வை
தமிழனே தமிழனே கல்வியிலே தமிழை வை
தமிழனே தமிழனே ஆட்சியிலே தமிழை வை
தமிழனே தமிழனே இசையிலே தமிழைவை
தமிழனே தமிழனே எழுத்திலே தமிழை வை
தமிழனே தமிழனே பேச்சிலே தமிழை வை
தமிழனே தமிழனே வாழ்விலே தமிழை வை
உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்
தமிழர் உரிமைக்கு வெற்றி கூறுங்கள்

www.padippakam.com



| | |
|---|---|
| அவரவர் நாட்டில் | அவரவர்க்கு உரிமை |
| தமிழர் நாட்டில் | தமிழர்க்கு உரிமை |
| தூக்கிப் பிடிப்போம் தூக்கிப் பிடிப்போம் | முழுமைத் தேசியம் தூக்கிப் பிடிப்போம் |
| தூக்கி எறிவோம் தூக்கி எறிவோம் | பகுதித் தேசியம் தூக்கி எறிவோம் |
| சேதாரமில்லாமல் | நகைசெய்ய முடியாது |
| சிலரேனும் மடியாமல் | பகைவெல்ல முடியாது |
| வாழ்கவே வாழ்கவே | நாம்தமிழர் கட்சி வாழ்கவே |
| வெல்கவே வெல்கவே | நாம்தமிழர் கட்சி வெல்கவே |

## ஆ. ஆவணத்தை விளக்கிடும் உரைவீச்சுத் தெறிப்புகள்

நாம்தமிழர் கட்சி
ஆட்சிக்காக மட்டுமல்ல!
தமிழின மீட்சிக்காக!

நாம்தமிழர் கட்சி!
மக்களை வைத்துப் பிழைக்க அல்ல!
எம் மக்களுக்காக உழைக்க!

நாம்தமிழர் கட்சி
பணத்திற்காக அல்லவே அல்ல!
இனத்திற்காக!

நாம்தமிழர் கட்சி
மற்றுமோர் அரசியல் கட்சி அல்ல!
மாற்று அரசியல் புரட்சி!

நாம்தமிழர் புரட்சி!
தமிழர் உரிமைக்கான
மக்கள்நாயகப் புரட்சி!



நாம்
அரசியல் வாதிகள் அல்லர்!
அரசியல் புரட்சிவாதிகள்!

நாங்கள்
சீர்திருத்தவாதிகள் அல்லர்!

புரட்சிவாதிகள்!
கட்டடத்திற்கு,
வெள்ளையடிக்க வந்தவர்கள் அல்லர்!
அந்தக் கட்டடத்தையே இடித்துவிட்டு,
மறுகட்டடத்தைக்
கட்ட வந்த புரட்சிவாதிகள்!

தமிழர் தேசிய உரிமை மீட்சி என்ற
உயர்ந்த குறிக்கோள் சுமை
நம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

நாம் சிதறாமல் அதேவேளை
பதறாமல் பாடாற்ற வேண்டியுள்ளது.

அடக்கியும் மடக்கியும் வைப்பதற்கு
நாங்கள் குடைகள் அல்லர்!
தமிழ்ப் படைகள்!

நாம், சாதிமத உணர்வுகள் மேற்கொண்டு,
தமிழ், தமிழர் என்ற உணர்வை இழந்ததால்,
தமிழ்த் தேசிய இனம் தன் உரிமைகளை இழந்து,
தன் உடைமைகளை இழந்து, இறுதியில்
இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

நாம் மக்களிலிருந்து மாறுபட்டவர்கள் அல்லர்!
மக்களிலிருந்து வந்தவர்கள்!

படிப்பகம்

www.padippakam.com



அந்த மக்களுக்காகவே வந்தவர்கள்!
மக்களின் வாழ்வுக்காக வீழவும் துணிந்தவர்கள்!

உங்களைப் பிறமொழியாளர் என்று சொல்லி,
உங்களைப் பிறராகப் பார்க்க நாங்கள் விரும்பவில்லை.
உங்களின் மூலத் தாய்மொழியாம் தமிழுக்குத் திரும்பிட
உங்களுக்கு உள்ள முழுஉரிமையை நாங்கள் ஏற்கிறோம்.
நீங்கள் நாங்களென ஏன் இனி இருக்க வேண்டும்?
வாருங்கள் நாம் தமிழராய் ஒன்றாவோம்! உயர்வோம்!

"என் மொழி வரலாறு எதுவாயினும்,
என் மொழி இனமாகவே நான் வாழ விரும்புகிறேன்",
என்பதா உங்கள் நிலைப்பாடு?
மனமார மதிக்கிறோம் உங்கள் உரிமையை.
தனிஇனமாக நீங்கள் வாழ வாழ்த்துகிறோம்; ஆனால் ஒன்று;
தமிழர் தேசத்தில் தமிழர் ஆட்சியை நீங்கள் வாழ்த்துங்கள்!

எம் மண்ணில்
எல்லோரையும்
வாழவைப்போம்!
எம் இனம்
சார்ந்த ஒருவரையே
ஆளவைப்போம்,
என உறுதி ஏற்போம்!
நாம் தமிழர்!
நாம் தமிழர்!

தமிழால் ஒன்றுபடுவதும்
தமிழனை ஆளவைப்பதும்
தமிழை வாழவைப்பதும்
ஒவ்வொரு தமிழனின்
வரலாற்றுக் கடமையாய் மாறி நிற்கிறது.



புரட்சி என்பது,
தலைகீழ் மாற்றம்!
அடிப்படை மாற்றம்!
அமைப்பு மாற்றம்!
அரசியல் மாற்றம்!

ஆய்தப் புரட்சி அல்ல!
அறிவுப் புரட்சி!

கருவி ஏந்திய புரட்சி அல்ல!
கருத்துப் புரட்சி!
அறிவே நமது ஆய்தம்!
மக்கள் நாயகமே நம் பாதை!

சங்கம் வைத்துத்
தமிழ் வளர்த்தோம் அன்று.
எல்லாம் சரியாய் ஆனது!

அதே சங்கம் வைத்துச்
சாதி வளர்த்தோம் இன்று.
எல்லாம் சரிவாய்ப் போனது!

உடன்வாழும் மனிதரை நேசிக்க
முடியாத நாம்,
அடுத்தவர் துயரத்தைத்
துடைக்கப் போராடுவோம்
என்பது போலியானது.

தமிழர் ஒன்றானால்,
அவர்வாழ்வு பொன்னாகும்!
இல்லையேல் மண்ணாகும்!

படிப்பகம்

www.padippakam.com



தமிழர் தேசிய இனத்தை வலுவிழக்கச் செய்து
வீழ்த்திய மூன்று மாபெரும் ஆற்றல்கள்
சாதி, மதம், இனநலமற்ற இரண்டகம் ஆகியவை ஆகும்.

கெட்டவரை நல்லவராக்குவதும்,
நல்லவரை மேலும்
நல்லவராக்குவதும் நம் கடமை!

தன்னை முன்னிறுத்தாது
இம் மண்ணையும், இனத்தையும்
முன்னிறுத்தும் போராளிகளே
நமக்குத் தேவை!

நமக்குள் இருக்கிற சிக்கல்
ஒரு சிக்கலாக ஆனால்,
இனத்தின் சிக்கலைத்
தீர்க்க முடியாது!

இனத்தின் சிக்கலே நமக்கு
ஒரு சிக்கலாக இருக்குமானால்
நமக்குள் ஏற்படுகிற சிக்கல்
ஒரு சிக்கலாகவே தெரியாது!

உளவு ஆற்றலாகவும், பிளவு ஆற்றலாகவும் இல்லாத,
ஒப்படைப்பும், உறவணைப்பும், தாயுள்ளமும் உள்ள
தளபதிகளே நமக்குத் தேவை.

எழுச்சி, புரட்சி, வெற்றி!

சிறை - அதை
நிறை.



எம் இன எதிரிகளின் சட்டத்திற்குட்பட்ட
தேர்தல் பாதையை நாம் விரும்பி ஏற்கவில்லை.
வரலாறு நம்மீது வலிந்து திணித்துள்ளது.

தேர்தல் பாதையில் சென்றவர்களில் பலர்
திருடர்களாக மாறியிருப்பது உண்மையே.
நாங்கள் தேர்தல் பாதையை
ஒரு பெரும் குற்றமாகக் கருதவில்லை.
திருட்டு நோக்கோடு அப்பாதையில் சென்றவர்களையே
நாங்கள் குற்றவாளிகளாகக் கருதுகிறோம்.

நாங்கள் தமிழர் உரிமை மீட்சியை
நோக்கமாகக் கொண்டவர்கள்.
எங்கள்மீது திணிக்கப்படுகிற எந்தப் பாதையையும்
கடந்து இலக்கை அடைந்தே தீருவோம்!

தேர்தல் அரசியலில் பங்கெடுப்போம்.
திராவிட, இந்தியக் கட்சிகளை விரட்டியடிப்போம்.
தமிழ்நாட்டில் தமிழர் ஆட்சியை நிலைநாட்டுவோம்.

தமிழர் தமிழராக இல்லாதபோது
தமிழ்த் தேசிய அரசியல்
தலையெடுக்க முடியாது.

தமிழர் தேசிய அரசியலுக்கு அடிப்படை
தமிழர் தேசிய இனக் கட்டுமானமே.

இனியும் எம் மொழியைச் சிதைத்து
புதுமொழி புதுக்க நினைப்பாரை,
இனியும் எம் இனத்தில் சாதிச்சண்டை, மதச்சண்டை
மூட்ட நினைப்பாரை,
இனியும் எம் இனத்தில் உட்பிளவும், உட்பகையும்

படிப்பகம்

www.padippakam.com



வளர்க்க நினைப்பாரை,
இனியும் எம் இனத்தைப் பன்முக அழிம்புகளால்
அழிக்க நினைப்பாரை,
இனியும் எம்இனத்து நிலத்தையும்.
தொழிலையும், அரசையும் பறிப்பானை
இனியும் பொறுப்பதில்லை; இனிஅவர்
செயலற நம்செயல் பேசும்.

எம் அரசியல் விருப்பரசியல்
வெறுப்பரசியல் அன்று; அன்று
மனுநெறியர் தமிழராய்த் திரும்பினால்
திராவிடர் தமிழராய்த் திரும்பினால்
திண்மையாய் எம் அரசியல் விருப்பரசியல்.

மனுநெறியர், மனுநெறியராய்த் தொடரும் போதும்
திராவிடர், திராவிடராய்த் தொடரும் போதும்
எம்மை ஆளும் போக்கை விட்டுவிட்டால்
எம்தமிழர் ஆட்சியை ஏற்றுக் கொண்டால்
உண்மையாய் எம் அரசியல் விருப்பரசியல்.

முன்னம் பிரிந்து திரிந்தவன் மனுநெறியன்
பின்னம் பிரிந்து திரிந்தவன் திராவிடன்
அய்ரோப்பியன் அமெரிக்கன் மேலை மனுநெறியன்
அய்யனென்னும் பொய்யன் கீழை மனுநெறியன்
தெலுங்கன் மலையாளி தென்புலத் திராவிடன்
மராட்டியன் பஞ்சாபி வடபுலத் திராவிடன்
சிங்களன் சியாமியன் கீழைத் திராவிடன்

உலகே ஒருங்குகூடி நம்மினத்தை ஒழித்தது
விலங்கன் சிங்களன்மேல் விருதுகள் பொழிந்தது
அவரவர் நாட்டுநலனே கரணியமாம் - தமிழனே
எவைஎங்கு நேரினும்நம் இனநலனே பேண்பேண்.



யாவரும் கேளிர் (உறவினர்) இப்போது சரியன்று
நம்கேளிரே நம்கேளிர் என்பதே சரியாகும்.
யாதும் ஊரே இப்போது சரியன்று
நாமாளும் ஊரேநம் ஊரென்பதே சரியாகும்.

எந்த நாட்டிலும் படிக்கவோ பாடாற்றவோ
அந்த நாட்டு மொழிஅறிவு தேவை என்கிறான்
தமிழறிந்தபின் தமிழ்நாட்டில் நுழையெனச் சொல்வோம்
தமிழர் அடிமைமனம் தகர்ப்போம் தலைநிமிர்வோம்.

வாழ்வதற்கே ஒருவலிமை வேண்டும்
ஆள்வதற்கோ மிகுவலிமை வேண்டும்
வலிமைக்கோ ஒற்றுமை வேண்டும்
வழிபிறக்க ஒற்றுமை நாட்ட வேண்டும்.

நான் தமிழன்; நீ தமிழன்!
நான் தமிழச்சி; நீ தமிழச்சி!
ஆமாம் ; ஆமாம்!
நாம் தமிழர்; நாம் தமிழர்!

படிப்பகம்

www.padippakam.com



# இ. கட்சிக்கொடிப் பாடல்

நாம்தமிழர் நாம் தமிழர் என்று தலைநிமிர்ந்து
பறக்குது புலிக்கொடி

நாற்றிசை உலகும் போற்றி மெய்சிலிர்க்க
தழைக்குது தமிழ்க்குடி

பறக்குது பறக்குது புலிக்கொடி
சிறக்குது சிறக்குது தமிழ்க்குடி (பறக்குது)

மானமுயிர் மூச்சாய்
வீரம் புயல் வீச்சாய்
வாழும் தமிழ் மாந்தர் குலக்கொடி
தேனினும் இனிய தமிழ் மொழியும்
தமிழினமும் காக்கும் மாவீரர் புலிக்கொடி

சோழன் கடற்படைக் கப்பல்கொடி
ஈழம் காக்கும் எங்கள் தொப்புள்கொடி (சோழன்)
கொடுமை ஆயிரம் ? குமுறல் ஆயிரம்
அடிமைநிலை வாழ்வில் இனியுமா ?

படைகள் ஆயிரம், தடைகள் ஆயிரம் – படினும்
எங்கள் மண் படியுமா ?
பறக்குது பறக்குது புலிக்கொடி
சிறக்குது சிறக்குது தமிழ்க்குடி (பறக்குது)

புலிக்கொடி வணங்கி நாம் துடித்தெழுவோம் !
புயலாய், நெருப்பாய் வெடித்தெழுவோம்!



# ஈ. செயற்பாட்டுக் கொள்கைகள்

கட்சியின் குறிக்கோளான, "தமிழர் உரிமை மீட்சியும், அதைச் சார்ந்த தமிழர் நல்வாழ்வும்", என்ற தலைமைக் கோட்பாட்டிற் கிசைய, கீழ்க்காணும் முன்மாதிரிச் செயற்பாட்டுக் கொள்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவை தக்க வல்லுநர்கள் உதவியுடன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, அரசியல் தலைமைக் குழுவால் மேம்படுத்தப்படும்; பட்டியலும் முழுமையானதன்று; துறைதோறும் தேவைகள் சார்ந்தும், தொண்டர்கள் முன்வைக்கும் சிக்கல்கள் சார்ந்தும் செயற்பாட்டுக் கொள்கைகள் காலந் தோறும் தொகுக்கப்படும்.

1) தமிழர், தமிழர் என்று உணர்ந்து தமிழராக வாழாத போது, தமிழ்த் தேசியம் கால்கொள்ள முடியாது என்ற பேருண்மைக்கிசைய தமிழர் தேசிய இனக் கட்டுமானம், தமிழ்த்தேசிய அரசியலுக்கு முன்தேவையாகிறது. எனவே, இனக்கட்டுமானம் பற்றிய பரப்புரையையும் ஆக்கப் பணிகளையும் கட்சி முதற்செயற்பாட்டுக் கொள்கையாக எடுத்துக்கொள்ளும்.

2) தமிழர் இனம் அழியாமல் காக்கப்பட்டால்தான், தமிழ்த் தேசிய உரிமைசார்ந்த நல்வாழ்வு அரசியல் பொருள்படும் என்பதால், தமிழீழச் சிக்கலில் தமிழீழத் தனியரசு அமையத் துணை நிற்பதும், தமிழ்நாட்டு மீனவர் சிக்கலில் கச்சத்தீவை மீட்பதற்கும், மீனவர் காப்புப்படை அமைப்பதற்கும் இயக்கம் கட்டுவதும், அடுத்து, தமிழர் அழிப்புக்கூறுகளான கூடங்குளம், கல்பாக்கம் ஆகிய

படிப்பகம்

www.padippakam.com



அணுமின் உலைகளை இழுத்து மூடத் தொடர்ந்து போராடுவதும், உணவுப் பற்றாக்குறையால் தமிழர் சாவுகளைத் தடுப்பதற்காக ஆற்றுரிமை மீட்புப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துதவதும் இரண்டாம் செயற்பாட்டுக்கொள்கையாகும்.

3) இந்திய ஒன்றிய மாநிலங்கள் அனைத்தும் முழுத் தன்னாட்சி உள்ளவையாயும், அவற்றின் உண்மையான கூட்டாட்சி ஒன்றியம் அமையவும் உரிய சட்டத் திருத்தம் செய்யத் தொடர்புடைய தோழமை ஆற்றல்களோடு சேர்ந்து உழைப்போம்.

4) தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவும் தமிழல்லாதார் ஆட்சியை அகற்றித் தமிழர் ஆட்சியை நிறுவுவதற்கான அனைத்துப் பணிகளையும் திட்டமிட்டுத் தொடர்ந்து செய்வோம்.

5) நாட்டில் நிகராண்மை (சமதருமம்) மலர்ந்திடத் தற்போதுள்ள கூட்டுறவு முறையை மக்கள் கூட்டுறவாய் மலரச் செய்வோம்.

6) நிலமற்றிருக்கும் நாற்பது விழுக்காட்டு மக்களுக்கும் மனையோ நிலமோ கிடைக்கத் தகுந்த நிலச் சீர்திருத்தம் செய்திடுவோம்.

7) இயற்கைக்கு உகந்த வகையில் பெரும்பான்மை மக்களுக்கேற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளை வளர்த் தெடுப்போம்! தொழில் நுட்பக்கல்வியை ஊக்குவிப்போம்.

8) உலகத் தமிழர்களையெல்லாம் ஒன்றிணைத்துத் தமிழர் உரிமை வென்றிட முயல்வோம்.



9) பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் குறையும் வகையில் பொதுப் பொருளியல் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும்.

10) பிறப்புவழி உயர்வுதாழ்வையும் உழைப்புச் சுரண்டலையும் ஞாயப்படுத்திச் சீரழிக்கும் மனுவியக் கொள்கையை மாய்ப்போம்.

11) சாதி சமய மேலாளுமையை ஒழிப்போம். சமத்துவமாய் வாழ வழிவகை செய்வோம். பிறப்புவழி ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வி உதவிகளையும், தொழில் தொடங்கு வதற்கான உதவிகளையும் பேரளவில் திட்டமிட்டுச் செய்வோம்.

சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நாம் தமிழராய் ஒன்றிணைவோம். தமிழர் கூடல் விழாக்கள் சிற்றூர் மட்டம் வரை நடத்துவோம்; தமிழர் திருமண மண்ட பங்கள், தமிழர் இடுகாடு, சுடுகாடுகள், அமைப்போம்.

12) மகளிருக்குச் சமபங்கு கொடுப்பது கொடையன்று. – அதை அடைவது அவர்கள் பிறப்புரிமை. – அதற்காகப் பாடுபடுவோம்.

13) "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்", என்ற நிலையை, உண்மை யான நிலையாக உருவாக்குவோம். தமிழை விரும்பிக் கற்போம். அனைத்துக் கல்வியையும் தமிழில் கற்போம். அனைத்துக் கல்வியையும் அரசே ஏற்கும் நிலை செய்வோம்.

14) அனைத்து நிலைகளிலும் தமிழே ஆட்சிமொழி, பேச்சு மொழி, வழிபாட்டுமொழி, வழக்காடுமொழி. தமிழைக் கற்றார்க்கும், தமிழ்வழியில் கற்றார்க்குமே தமிழகத்தில்

படிப்பகம்

www.padippakam.com



வேலைவாய்ப்பு. மொத்தத்தில் தமிழர்க்குத் தமிழே வாழ்வியல்மொழி.

15) ஊடகக்கலைப் பண்பாட்டுச் சீரழிவுகளை உரிய பண்பாட்டுப் புரட்சி மூலம் தடுப்போம்.

16) நாளைய நாம் தமிழர் ஆட்சியில், அரசு சமயம் சாராது. ஆனால் யாருடைய தனிப்பட்ட சமய நம்பிக்கையிலும் அரசு தலையிடாது.

17) அரசியல் தலையீடு அற்ற நயன்மை மேலாண்மை. கையூட்டு ஊழலற்ற ஆட்சிமுறை.

18) மகளிர் – ஆடவர் தன்னுதவிக் குழுக்கள் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் தற்சார்புப் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவோம். அனைவர்க்கும் வேலை உறுதி செய்யப்படும். வேலை கொடுக்கப்படும்வரை, அரசு நல்கை வழங்கப்படும்.

19) அதிகாரத்தையும் பொருளையும் பரவலாக்கப் போராடுவோம். அதிகாரமும் பொருளும் பெருமேடு (பிரமிடு) போல் அமையும் வகையில் கட்டமைப்போம்.

20) தனியார்மயக் கொள்ளைச் சுரண்டலைத் தடுப்போம்; கறுப்புப் பணத்தையும் கள்ளச் சந்தையையும் ஒழிப்போம். பிறமாநிலப் பொருளாதாரப் படையெடுப்பு, முதலீடுகள் வழியாகவும், உழைப்பாளர்கள் வழியாகவும் வருவதை ஒழுங்குபடுத்தி, நம் பொருளாதாரக் கட்டமைப்பும், மக்கள் இனக் கட்டமைப்பும் காப்பாக இருப்பது உறுதி செய்யப்படும்.



21) அனைத்துத் தொழிலாளர்களின் நலன்களையும் உறுதிபடக் காப்போம். குறிப்பாக, அமைப்புத் தொழிலாளர்– அமைப்புசாராத் தொழிலாளர் வேறுபாடு அகற்றி வாழ்வுரிமையை நிலைநாட்டுவோம்.

22) மருத்துவஉதவிகள் பெறுவதை அடிப்படை உரிமையாக்கு வோம். அனைத்து மருத்துவ உதவிகளும் அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்வோம்.

23) பிற மாநிலங்களில் வாழும் இந்தியத் தமிழருக்கு உரிமையும், காப்பும் முறைப்படி கிடைத்திடத் தேசிய இன நட்புறவுக் கழகம் மாநிலந்தோறும் அமைப்போம். (எ–டு) தமிழர் – வங்காளியர் நட்புறவுக் கழகம்.

24) பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்தி, உலகத் தமிழரை ஒருங்கிணைப்போம்.

25) அனைத்து முறைகேடுளையும் உசாவ, மக்கள் ஞாய மன்றங்கள் அமைக்கப்படும். ஞாயமன்றத் தீர்ப்பையும் திறனாய்வு செய்யச் சட்டம் இயற்றுவோம்.

26) சிலம்பம், களரி, சடுகுடு முதலாயத் தமிழர்தம் வீர விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளிப்போம்.

27) தமிழர் வரலாற்றச் சான்றுகள் தேடப்படும்; ஆயப்படும்; தமிழர் வரலாறு தொகுக்கப்படும்.

28) தமிழ்மொழியின் அடிப்படைக் கருவி நூல்களான அகர முதலிகள், பலதுறைச் சொற்பொருள் களஞ்சியங்கள், தமிழர் பெயர்கள் களஞ்சியம், ஒலிபெயர்ப்பு, மொழி பெயர்ப்புத் தரப்பாடுகள், கணினித்தமிழ்த் தரப்பாடுகள்,

படிப்பகம்

www.padippakam.com



மரபுசார்ந்த இலக்கணத் தொடர்ச்சி மேம்பாடுகள் தமிழ்நாட்டரசு செலவில், பிறமொழி மேலாண்மையை நீக்கி, உலகத் தமிழறிஞர்கள் ஒத்துழைப்போடு செப்பமுற நிறை வேற்றப்படும். தமிழ்நாட்டு ஊர், நகர, தெருப் பெயர்கள், திருக்கோயில் பெயர்கள் முதலியவை தூய தமிழ்ப் பெயர்களாக மீட்டெடுக்கப்படும்.

29 சாதி மறுப்புத் திருமணங்கள் செய்த தமிழர்க்கும், அவர்தம் பிறங்கடையினருக்கும் கல்வி வேலை வாய்ப்புகளில் 2% இடங்கள் ஒதுக்கப்படும்; ஆண்டுதோறும் இரண்டு விழுக்காடு மேனியில் ஒதுக்கீடு கூட்டப்படும். (எ.கா: இரண்டாம் ஆண்டு 4%; மூன்றாம் ஆண்டு 6%)

30) நடுவண் அரசுப்பணி, கல்வி வேலை வாய்ப்புகள் அனைத்தும் மாநில மக்கள்தொகைக்கேற்ப, மாநிலவாரி ஒதுக்கீடாகப் பெற, மற்ற மாநிலங்கள் ஒத்துழைப்போடு முயல்வோம்.

31. மக்கள் நல்வாழ்வையும், மாசற்ற இயற்கைச் சூழலையும் காப்பாற்றும் தமிழரின் இயற்கை வேளாண்மைப் பல வகையானும் ஊக்குவிக்கப்படும்; வாய்ப்புள்ள இடங்களி லெல்லாம் மக்கள் கூட்டு வேளாண்மை நாட்டப்படும்; வேளாண்மை விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், உரிய வேளாண்மைச் சந்தைகள் உழவர்கள் நிறுவிப் பேணிட, உண்மையான அக்கறை யோடு நடவடிக்கைகள் எடுக்கப்படும். சாலை ஓரங்கள், வழிடக் காலியிடங்கள், அழிக்கப்பட்ட காட்டு இடங்கள் முதலியவற்றில் பலவகை மரங்கள் நடப்பட்டு, பசுமைத் தமிழ்த்தேசம் அமைக்கப்படும்.



32. பொதுப்பணித்துறை, மின்பணிகள்போன்ற அரசுப் பணிகள் வேலையில்லாப் பட்டந்தாங்கியரின் கூட்டமைப்பு களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படும்.

33. கல்வியையும், மருத்துவத்தையும் நடுவணரசு பிடியி லிருந்து முழுமையாகவும், விரைந்தும் விடுவிக்கும் முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

34. கதிரவ மின்சாரம், காற்று மின்சாரம், கடல் அலை மின்சாரம் முதலிய இயற்கை சார்ந்த மின்னாக்க முறை களுக்கு உரிய ஊக்கம் தரப்படும்.

35. தமிழர்தம் சித்த மருத்துவக்கலை, சிற்பக்கலை, ஓகக்கலை, கப்பல் கட்டும் கலை, வானியற்கலை, எண்ணியக்கலை, இசைக்கலை முதலிய அருங்கலை களை மீட்டெடுக்கவும், மேம்படுத்தவும் பெருமுயற்சிகள் எடுக்கப்படும்.

36. இலவயமும், மதுவும் ஒழிக்கப்படும்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் (திருக்குறள் - 484)

படிப்பகம்

www.padippakam.com



# நாம்தமிழர் கட்சியின் அமைப்பு விதிகள்

**திருவள்ளுவர் ஆண்டு 2043**
**(கி.பி. 2012)**

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (திருக்குறள் - 517)



விதி : 1

## நாம்தமிழர் கட்சி

உலகத் தொல்குடி மக்களான தமிழர்கள்,சாதி, மத அடிப்படையிலும், பொருளியல் அடிப்படையிலும், பிளவுபட்டும், நசுக்குண்டும், மொழி, பண்பாடு ஆகியவை அடிப்படையில் தன்மானமிழந்தும், கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் அதிகாரம் முதலியவற்றில் உரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டும், உயிர் இருப்புக்குக்கூட உறுதி தரப்படாமலும் புறக்கணிக்கப்படும் இரண்டாந்தரக் குடிமக்களாக இருந்து வருகின்றனர். அத் தமிழர்களின் மீட்சிக்கும் ஆட்சிக்கும் பாடுபடுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ள இயக்கம், நாம்தமிழர் கட்சி. இனிவரும் இடங்களில் இடம்பெறும் கட்சி, எனும் சொல் நாம்தமிழர் கட்சி' என்பதையே குறிக்கும். கட்சியின் அமைப்புக் கூறுகளும், அவைசார்ந்த பொறுப்புகளும், அவற்றிற்கு இடையே உள்ள இடை உறவுகளும் கீழ்க்காணும் வகையில் விளக்கப்படுகின்றன.

விதி : 2

## குறிக்கோள்

தமிழினம் தன் அரசியல், பொருளியல், குமுகாய (சமூக), மொழி, பண்பாட்டு உரிமைகளை இழந்ததால், தன் அடையாளத்தை இழந்து வருகிறது. தமிழ்நாட்டு இயற்கை வளமும் மாற்றாரால் சூறையாடப்பட்டு வருகிறது. தமிழரின் இன, மொழி நலத்தையும், நாட்டுவளத்தையும் பேணுவதற்காக இந்திய

படிப்பகம்

www.padippakam.com



அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வதன்மூலம், இந்திய ஒன்றியத்தில் உள்ள, தமிழ்நாட்டு மாநிலம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களும் இந்திய ஒன்றிய இறையாண்மைக குட்பட்டு முழுத் தன்னாட்சி உடையவையாகவும், தமிழ்நாட்டு மாநிலம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் உண்மையான கூட்டாட்சி ஒன்றியம் அமையவும் நாம்தமிழர் கட்சி பாடுபடும்.

**விதி : 3**

## உறுப்பினர் தகுதி, சேர்க்கை, கட்டணம்.

பிரிவு : 1

கட்சிக் குறிக்கோளையும், கொள்கைகளையும் ஏற்றுச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதாக உறுதி தரும், 18 அகவை (வயது) நிரம்பிய, இந்தியக் குடிமக்களான ஆண், பெண், திருநங்கையர் ஆகிய முப்பாலினத்தவர் மட்டும்,

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தால் அல்லது தமிழை வாழ்வியல் மொழியாக ஏற்றுத் தாய்த் தமிழ்மொழிக்குத் திரும்பியிருந்தால்,

உழைப்புச் சுரண்டலையும், பிறப்புவழி உயர்வு, தாழ்வு கற்பித்துத் தமிழினத்தைத் துண்டாடுவதையும், தமிழ்மொழியை இழிவுபடுத்தியும், திரித்து வேறாக்கியும் தமிழினத்தை அழிப்பதையும் ஞாயப்படுத்தும் மனுவியத்தை (வருணாசிரமக் கொள்கைகளை) மறுத்துப் பொதுமை, உயிரி நேயம், அறிவியம் முதலிய விழுமியங்களை ஏற்று வாழும் நிலையிலும்,

தமிழ்மொழியையும், தமிழ் மண்ணையும், தமிழ்நாட்டு மக்கள் உரிமைகளையும், நலன்களையும் போற்றிப் பாதுகாத்து, அதற்காகப் போராடுகின்ற நிலையிலும் உறுப்பினர்களாகச்



சேரத் தகுதி உடையவர்கள். அவர்கள், தமிழ்நாட்டிலோ அல்லது பிற மாநிலங்களிலோ வாழ்பவர்களாக இருக்கலாம்.

வெளிநாட்டில் வாழ்பவராக இருப்பின், இந்திய ஒன்றியத்தின் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வெண்டும்.

பிரிவு : 2

தலைமை அலுவலகத்தால் தரப்படும் உறுப்பினர் விண்ணப்பத்தில், உறுப்பினராகச் சேர விரும்புபவர் முறைப்படி நிறைவுசெய்து, உரிய கட்டணத்துடன் தான் சேரவிரும்பும் கிளையில் ஒப்படைப்பார். கிளை அவற்றைத் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பும். விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு, முறைப்படி தலைமை அலுவலகம் பதிவு செய்த நாளிலிருந்து உறுப்பினராகக் கருதப்படுவர். உறுப்பினர் அட்டையைத் தலைமை அலுவலகம் வழங்கும்.

பிரிவு : 3

குறிப்பிட்ட கிளையில் உறுப்பினராகச் சேர விரும்புவோர், அந்தக் கிளைக்கு உட்பட்ட பகுதியில் இயல்பாகக் குடியிருப்பவ ராகவோ, தொழில் புரிபவராகவோ இருத்தல் வேண்டும். தம்முடைய இயல்பான முகவரி உள்ள இடத்தில் கட்சிக் கிளை அமையாதிருந்தால், அருகிலுள்ள கிளையில் தம்மை உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு அமைப்பிலும், 50 விழுக்காட்டிற்கு மகளிரை உறுப்பினராக்க முயலவேண்டும்.

பிரிவு : 4

கிளைகளில் புதிதாகச் சேரும் உறுப்பினரின் விண்ணப்பம்,பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள், தலைமையகத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு : 5

கட்சிக்குப் புதிய உறுப்பினர்களை, நேரடியாகச் சேர்த்துக் கொள்வதற்கு மாவட்ட, மாநில அமைப்புகளுக்கு அதிகாரம் உண்டு. விண்ணப்பங்களைத் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக அனுப்ப வேண்டும். பதிவிற்குப்பின், உறுப்பினர் முகவரி உள்ள கிளைக்கு உறுப்பினர் அட்டையை அனுப்ப வேண்டும்.

பிரிவு : 6

ஒருவர், ஒரு கிளையில் மட்டுமே உறுப்பினராக இருக்க வேண்டும்.

பிரிவு : 7

தகுந்த கரணியங்கள் இருப்பின், ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தமது உறுப்பாண்மையை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள், தாம் உறுப்பினராக உள்ள அல்லது சேரவிரும்பும் கிளையின் செயலாளரின் ஒப்புதலோடு, தனி உறுப்பினர் மாறுதல் கட்டணமாக, 10 உருபாயைத் தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தி மாற்றிக்கொள்ள வேண்டும். தக்க கரணியமின்றி, இரு செயலாளர்களும் மறுப்பார்களேயானால், அடுத்த மேலமைப்பின் செயலாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பிரிவு : 8

கட்சிப் பொதுத் தேர்தலுக்கான நாள் குறிப்பிட்ட திலிருந்து, தேர்தல்கள் முடியும் வரை உள்ள இடைக்காலத்தில், மேற்கண்ட 7ஆவது பிரிவு செயலற்றதாகும்.

பிரிவு 9

உறுப்பினர்களுக்குத் தகுதிகாண் காலம் ஓராண்டு ஆகும். முதலாண்டு முடிவில், உறுப்பினர் இடம்பெறும் கிளையின் பொதுக்குழு, உறுப்பினர் தகுதிபற்றிய அறிக்கையைத் தலைமையகத்துக்கு அனுப்பும். மாநிலச்செயற்குழு உறுப்பாண்மை பற்றிய இறுதி முடிவை அறிவிக்கும்.



பிரிவு :10

உறுப்பினர் கட்டணமாகப் பத்து உருபாயினை ஓர் ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தவேண்டும்.

பிரிவு :11

கட்சியின் பொதுக்குழு விரும்பினால் உறுப்பினர் கட்டணத்தை மாற்றி அமைக்கலாம்.

பிரிவு :12

அனைத்து அமைப்புகளும் தங்களுக்குத் தேவையான நிதியை, மாநிலப் பொருளாளரின் எழுத்து வடிவ முன் ஒப்புதலோடு நன்கொடை மூலம் திரட்டிக்கொள்ளலாம். அவர்களின் நிதி திரட்டல், தலைமையின் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**விதி : 4**

## கட்சி உறுப்புகள்

பிரிவு :1

*கிளைகள்*

உட்பிரிவு : 1-1

ஊர்களில் அமையும் கிளைகள், ஊர்க்கிளைகள் என்றும், பேரூர்களில் அமையும் கிளைகள், பேரூர்க்கிளைகள் என்றும் அழைக்கப்படும்.

ஊர்க்கிளைகள் அமைக்கமுடியா ஊர்கள், கிளைகள் இல்லாத ஊர் அமைப்புகளாகச் செயற்படும்.

படிப்பகம்

www.padippakam.com



நகராட்சிப் பகுதிகளிலும், நகரியங்களிலும் அமையும் கிளைகள், நகர்க் கிளைகள் ஆகும்.

உட்பிரிவு : 1-2

ஊர்க்கிளைகள் இணைந்தவை ஊர். பேரூர்க் கிளைகள் இணைந்தவை பேரூர்.

ஊர்கள், பேரூர்கள் இணைந்தவை ஒன்றியம்.

நகர்க் கிளைகள் இணைந்தவை நகரம்.

ஒன்றியங்கள், நகரங்கள் இணைந்தவை, கட்சி மாவட்டம்,

கட்சி மாவட்டங்கள் இணைந்தவை மாநிலம்.

வருவாய் மாவட்டத்தைவிடப் பெரியதான சென்னை மாநகராட்சி போன்றவற்றில், நாட்டுப்புறப் பகுதிகளில், தலைமை ஒருங்கிணைப்பாளரால் / கட்சி அமைப்பாளரால் வரையறுக் கப்பட்டு நடைமுறையில் இருக்கும் கட்சி மாவட்டம், நகரம், நகர்க் கிளை ஆகியவற்றின் அளவுகளுக்கு இசைய, கட்சி மாவட்டம் முதலியன இருக்கும். இந்த ஏற்பாடு, முதற்பொதுக்குழுவால் ஏற்கப்பட்டோ அல்லது தக்கவாறு மாற்றப்பட்டோ நடைமுறைப் படுத்தற்குரியது.

உட்பிரிவு : 1-3

ஒரே ஊராக உள்ள ஊராட்சியில் அல்லது ஓர் ஊராட்சியில் அடங்கி உள்ள ஒவ்வொரு சிறு சிறு உள்ளூர்களில் அல்லது ஊராட்சிகளின் உட்பிரிவுகளாகத் தனிப் பெயரோடும் எல்லை யோடும் விளங்கும் ஊர்களில் அமையப் பெறுவதே ஊர்க் கிளைகள் ஆகும்.



உட்பிரிவு : 1-4

பதினைந்து பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புதான் கிளையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

உட்பிரிவு : 1-5

ஒவ்வோர் ஊர்க்கிளை, பேரூர்க்கிளை ஆகியவற்றின் உறுப்பினர்கள் தம் கிளைகளில் ஒன்றுகூடி, அவர்களுக்குள் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு கிளையின் பொறுப்பாளர்களும், அதன் உறுப்பினர்களும் சேர்ந்து அக்கிளையின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.

உட்பிரிவு : 1-6

கிளைகளின் பொதுக்குழுக் கூட்டங்கள், குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அப்படிக் கூட்டப்படாவிட்டால் மேல் அமைப்புகளாகிய ஊர், பேரூர், ஒன்றிய, நகர அமைப்புகளுக்கு, அந்தக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு உரிமை உண்டு. கூட்ட நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கைகளை அவ்வப்போது தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும். இந்நெறிமுறை, அனைத்து மட்டங்களிலுமுள்ள அனைத்துக் குழுக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

உட்பிரிவு : 1-7

கிளைப் பொறுப்பாளர்களைக் கொண்டது, கிளைச் செயற்குழு ஆகும். அது மாதந்தோறும் கூடவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உட்பிரிவு : 1-8

கட்சி அமைப்பு ஒவ்வொன்றும், கட்சி நடவடிக்கையில் படிப்படியாகத் தனது மேல் அமைப்புகளின் மூலம், உரிய வழிமுறையில் மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும். முறையீடுகளை, நேரடியாக உரியவருக்கு அனுப்பலாம்.

பிரிவு : 2

## ஊர் / பேரூர் அமைப்பு

உட்பிரிவு : 2-1

ஊர்க்கிளைகள் /பேரூர்க்கிளைகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், செயலாளர்கள், துணைச்செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் இடம் பெற்றதே ஊர் /பேரூர் அமைப்பின் பொதுக்குழு. இந்தப் பொதுக்குழு, அதன் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும். ஊர் /பேரூர்ப் பகுதிகளின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு பகுதிகளில் கிளைகள் அமையப் பெற்றிருந்தால் மட்டுமே, அது ஓர் ஊர் / பேரூர் அமைப்பாகக் கருதப்படும்.

உட்பிரிவு : 2-2

பொதுக்குழு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும்.

உட்பிரிவு : 2-3

பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஊர் / பேரூர்க் கிளைத் தலைவர்கள், செயலாளர்களைக் கொண்டது ஊர்/பேரூர்ச் செயற்குழு ஆகும்.



உட்பிரிவு : 2-4

செயற்குழு குறைந்தது மாதம் ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

பிரிவு : 3

## ஒன்றியம் / நகரம்

உட்பிரிவு : 3-1

ஒன்றியங்களின் ஊர்கள் / நகரத்தின் பகுதிகளின் எண்ணிக்கையில், எட்டில் ஒரு பங்குக் கிளைகள் இருந்தால் மட்டுமே, ஒன்றிய / நகர அமைப்பாகக் கருதப்படும். அல்லாத போது நேரடி மாவட்டக் கட்டுப்பாட்டில் இயங்கும்.

உட்பிரிவு : 3-2

ஊர்கள், பேரூர்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், துணைச்செயலாளர்கள், பொருளாளர்கள், ஊர்க் கிளைகள், பேரூர்க் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரைக் கொண்டது ஒன்றியப் பொதுக்குழு ஆகும்.

உட்பிரிவு : 3-3

நகர்க்கிளைகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், துணைச்செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரைக் கொண்டது நகரப் பொதுக்குழு ஆகும்.

உட்பிரிவு : 3-4

நகர / ஒன்றியப் பொதுக்குழு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உட்பிரிவு : 3-5

ஒன்றியப் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஊர், பேரூர் அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள், ஆகியோரைக் கொண்டது ஒன்றியச் செயற்குழு ஆகும்.

உட்பிரிவு : 3-6

நகரப் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், நகர்க் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரைக் கொண்டது நகரச் செயற்குழு ஆகும்.

உட்பிரிவு : 3-7

நகர/ஒன்றியச் செயற்குழு குறைந்தது மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

உட்பிரிவு : 3-8

கட்சியின் துணை அமைப்புகளின் (அணிகள் / பாசறைகள்) தலைவர்கள், செயலாளர்கள் முதலியோர் கட்சியின் நகர, ஒன்றியப் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களுக்குச் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்படவேண்டும். அதுபோல, துணை அமைப்புகள் நடத்தும் ஒன்றிய / நகரப் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களுக்கு அந்த மட்டத்திலுள்ள கட்சியின் முதன்மை அமைப்புத் தலைவர், செயலாளர் ஆகியோரைச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்க வேண்டும். இந்த இருவழி அழைப்பு முறை, மற்ற மட்டங்களில் உள்ள அமைப்புகளுக்கும் பொருந்தும். ஒட்டுமொத்த தேவைப்படும் சூழ்நிலைகளில், அந்தந்த மட்டத்து கட்சியின் முதன்மை அமைப்புத் தலைவர்கள், துணை அமைப்புகளையும் இணைத்துக் கூட்டுப்பொதுக்குழு, கூட்டுச்செயற்குழுக் கூட்டங்களை நடத்தும் அதிகாரம் உள்ளவர்கள் ஆவர்.



பிரிவு : 4

# மாவட்டம்

உட்பிரிவு : 4-1

நகர, ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், பொருளாளர்கள், ஊர், பேரூர்த் தலைவர்கள், செயலாளர்கள் அடங்கியது மாவட்டப் பொதுக்குழு ஆகும்.

உட்பிரிவு : 4-2

மாவட்டப் பொதுக்குழு குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

உட்பிரிவு : 4-3

மாவட்டப் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், நகர, ஒன்றியத் தலைவர்கள், செயலாளர்கள் கொண்டது மாவட்டச் செயற்குழு ஆகும்.

உட்பிரிவு : 4-4

மாவட்டச் செயற்குழு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உட்பிரிவு : 4-5

கட்சித் துணை அமைப்புகளின் (பாசறைகளின்) மாவட்டப் பொறுப்பாளர்கள், கட்சி மாவட்டப் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களுக்குச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பெறல் வேண்டும்.

உட்பிரிவு : 4-6

மாவட்டங்களின் ஒன்றிய, நகரங்கள் எண்ணிக்கையில் எட்டில் ஒரு பங்கு அளவிற்கு அமைப்புகள் இருந்தால் மட்டுமே, மாவட்ட அமைப்பு, ஓர் அமைப்பாகக் கருதப்படும். அல்லாதபோது, நேரடி மாநிலப் பொறுப்பில் இயங்கும்.

பிரிவு - 5

## மாநிலம்

உட்பிரிவு : 5 -1

பொதுக்குழு :- மாவட்டப் பொதுக்குழுக்களாலும், மாவட்டப் பொறுப்பாளர்களாலும் தேர்வு செய்யப்பட்ட மாநிலப் பொறுப்பாளர்கள், குழுக்களின் உறுப்பினர்கள், தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோரால் அமர்த்தப்பட்ட மாநிலப் பொறுப்பாளர்கள், அனைத்து மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், ஊர், நகர்க்கிளைத் தலைவர், செயலாளர் ஆகியோரும், இந்த நான்கு மட்டங்களில் உள்ள கட்சியின் முதன்மை அமைப்புகளுக்கு இணையான, கட்சியின் துணை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் சேர்ந்தது மாநிலப் பொதுக்குழு ஆகும். மாநிலப் பொதுக்குழுவே, கட்சியின் இறுதி அதிகாரம் கொண்ட உறுப்பாகும்.



உட்பிரிவு : 5-2

செயற்குழு :- பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர், தலைவரால் மாவட்டப் பொறுப்பாளர்கள் தொகுதியிலிருந்து அமர்த்தப்படும் துணைத் தலைவர்கள் நால்வர், பொதுச் செயலாளரால் தலைவரின் இசைவோடு, மாவட்டப் பொறுப்பாளர்கள் தொகுதியிலிருந்து அமர்த்தப்படும் அமைப்புச் செயலாளர் இருவர், துணைப் பொதுச்செயலாளர் நால்வர், தலைமை நிலையச்செயலாளர் இருவர், மாவட்டப் பொறுப்பாளர்கள் தொகுதியிலிருந்து, (மாவட்டங்களின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், பொருளாளர்கள், மாவட்டக் கூடுதல் பொறுப்பாளர்கள் ஆகியோரைக்கொண்ட தொகுதியிலிருந்து) அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் 22பேர், ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினர் மூவர், சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினர் நால்வர், தணிக்கைக் குழு உறுப்பினர் மூவர், மாவட்டங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியது மாநிலச் செயற்குழு ஆகும். மாவட்டப் பொறுப்பாளர்கள் என்பது, மாவட்ட மட்டத்தில் இயங்கும் அனைத்துத் துணை அமைப்புகளின் பொறுப்பாளர்களையும் சேர்த்துக் குறிக்கும். செயற்குழு எடுக்கும் செயல்முறை முடிவுகள், ஏற்கெனவே, பொதுக்குழு எடுத்த கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டவையாக இல்லையாயின், மேற்கொண்ட செயல் முடிவுகளுக்கு பொதுக் குழுவின் பின் ஒப்புதல் பெற வேண்டும். உரிய குழுக்கள் அமைத்து, ஒழுங்கு நடவடிக்கை, துணை அமைப்புகளின் சிறப்புத் தன்மை, தேர்தல் முதலியவைபற்றிய விதி முறைகளை இறுதி செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com



உட்பிரிவு : 5-3

மாநிலப் பொதுக்குழு ஆண்டுக்கு ஒருமுறையும், செயற்குழு நான்கு மாதங்களுக்கு ஒருமுறையும் கூட்டப்பட வேண்டும். மாநிலப் பொதுக்குழுவில் தணிக்கை செய்யப்பட்ட கட்சியின் வரவு – செலவு அறிக்கையை மாநிலப் பொருளாளரும், கட்சியின் செயற்பாட்டு அறிக்கையைப் பொதுச்செயலாளரும் முன் வைத்துப் பொதுக்குழு ஒப்புதலைப் பெறவேண்டும். தேவைப்படின், சிறப்புப் பொதுக் குழுவையும், சிறப்புச் செயற்குழுவையும் கூட்டும் அதிகாரம் மாநிலத்தலைவருக்கு உண்டு. மாநிலப் பொதுக்குழு, மாநிலச் செயற்குழுக் கூட்டங்கள் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் அறிவித்துக் கூட்டப்பெறுதல் வேண்டும். மாநிலப் பொதுக்குழு/ செயற்குழுவின் உறுப்பினர் களில் 20 விழுக்காட்டிற்கு மேற்பட்டவர்கள் வேண்டும்பொழுதும், தலைவர் செயற்குழு/பொதுக்குழுவைக் கூட்டுவதற்குக் கடமைப்பட்டவர் ஆவார்.

உட்பிரிவு : 5-4

அரசியல் தலைமைக்குழு: பொதுக்குழுவால் தேர்ந் தெடுக்கப்படும் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர், தலைவரால் அமர்த்தப்படும் துணைத் தலைவர்கள் நால்வர், பொதுச்செயலாளரால் தலைவரின் இசைவோடு அமர்த்தப்படும் அமைப்புச் செயலாளர்கள் இருவர், தலைமை நிலையச் செயலாளர்கள் இருவர், துணைப் பொதுச் செயலாளர்கள் நால்வர், அரசியல் தலைமைக் குழுவிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 22 பேர். ஆக மொத்தம் 37 உறுப்பினர்களைக் கொண்டது அரசியல் தலைமைக்குழு ஆகும். செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களின் இடைவெளியில், தேவை ஏற்படும் போதெல்லாம் கூடி, கொள்கை முடிவுகள்,



அமைப்பு முடிவுகளை அரசியல் தலைமைக்குழு எடுக்கும். இம் முடிவுகளுக்குச் செயற்குழுவின் பின்னேற்பை, அடுத்துவரும் நான்கு மாதங்களுக்குள்ளும், பொதுக்குழுவின் பின்னேற்பை அடுத்துவரும் ஓராண்டுக்குள்ளும் பெற வேண்டும்.

பிரிவு : 5-5

மாவட்டப் பொறுப்பாளர்களிலிருந்து 44 பேர் மாநிலப் பொறுப்பாளர்கள் ஆவதால் ஏற்படும் காலி இடங்களுக்கு, 90 நாள்களுக்குள் மறுதேர்தல் நடத்தப்படும்.

பிரிவு : 6

## கட்சித் துணை அமைப்புகள்

**உட்பிரிவு 6-1**

கீழ்க்காணும் 20 துணை அமைப்புகள், கட்சி உறுப்பினர் களிலிருந்து அமைக்கப்பட்டுக் கட்சி வளர்ச்சிக்காகப் பாடுபடும்.

1. நாம்தமிழர் உழவர் பாசறை
2. நாம்தமிழர் இளைஞர் பாசறை
3. நாம்தமிழர் மகளிர் பாசறை
4. நாம்தமிழர் மாணவர் பாசறை
5. நாம்தமிழர் கொள்கை விளக்கப் பாசறை
6. நாம்தமிழர் தொழிலாளர் பாசறை
7. நாம்தமிழர் கலை இலக்கியப் பண்பாட்டுப் பாசறை
8. நாம்தமிழர் வழக்கறிஞர் பாசறை
9. நாம்தமிழர் தொண்டர் பாசறை

படிப்பகம்

www.padippakam.com



10. நாம்தமிழர் மருத்துவப் பாசறை
11. நாம்தமிழர் வணிகர் பாசறை
12. நாம்தமிழர் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பாசறை
13. நாம்தமிழர் விளையாட்டுக்கலைப் பாசறை
14. நாம்தமிழர் பொருளியல் மேம்பாட்டுப் பாசறை
15. நாம் தமிழர் நுகர்வோர்ப் பாதுகாப்புப் பாசறை
16. நாம் தமிழர் பொறியாளர் பாசறை
17. நாம்தமிழர் தகவல் அறியும் உரிமைச் சட்டப் பாசறை
18. நாம்தமிழர் அறிவியல் மேம்பாட்டுப் பாசறை
19. நாம்தமிழர் அமைப்புச்சாராத் தொழிலாளர் பாசறை
20. நாம்தமிழர் அயலக நட்புறவுப் பாசறை

உட்பிரிவு : 6-2

கட்சியின் அந்தந்த மட்டத்தில் உள்ள பொதுக்குழு, மேற்கண்ட பாசறைகள் ஒவ்வொன்றுக்கும் அமைப்பாளர் ஒருவரைத் தேர்வுசெய்து தரும். மேற்கண்ட துணை அமைப்புகள் தமக்குரிய பொறுப்பாளர்களைக் கட்சிக் கட்டமைப்பு முறையினைப் பின்பற்றித் தேர்ந்தெடுத்துக்கொள்ளும். இவை அமைப்பிற்குக் கட்டுப்பட்டனவாகும். கட்சியின் முதன்மை அமைப்புப் பொறுப்பாளர்களுக்கு உள்ள உரிமைகள், துணை அமைப்புப் பொறுப்பாளர்களுக்கும் உண்டு; விதிமுறைகளும் பொதுவே.

உட்பிரிவு : 6-3

மேற்கண்ட பாசறைகள் மாநிலச் செயற்குழுவின் வழி காட்டுதலுக்கு இசைய, தங்களுக்கென்று உள்ள சிறப்புத் தன்மையைச்சார்ந்து, குறிப்பான வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். அதாவது, துணை அமைப்புகள் கட்சியின் பொதுவான விதிமுறைகளால் ஆளப்படும் நிலையில், தங்களுடைய தனிச்சிறப்புத் தன்மை சார்ந்து, தாங்கள் ஏற்படுத்திக்கொள்ளும் சிறப்பு விதிகளாலும் ஆளப்படுவர். ஒவ்வொரு துணை அமைப்பின் பொதுக்குழுவும், அவ்வமைப்பிற்கான சிறப்பு விதிகளை உருவாக்கிக் கொள்ளும். அவை, கட்சியின் முதன்மை அமைப்பின் பொதுக்குழு முடிவு செய்துள்ள கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டு இருப்பதை, கட்சியின் முதன்மை அமைப்பின்செயற்குழு சரிபார்த்துக் கொண்டு துணை அமைப்புகளுக்கு, நடைமுறைப் படுத்துவதற்காக ஒப்புதல் வழங்கும்.



உட்பிரிவு : 6-4

கட்சி உறுப்பினர்கள் மேற்கண்ட இருபது துணை அமைப்புகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு, முக்கிய பங்காற்ற வேண்டும். இவர்களுக்குக் கட்சியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊர்ச் செயற்குழுக்கள் தகுந்த ஒத்துழைப்பை நல்கும். கட்சியின் முதன்மை அமைப்பிற்கும், கட்சித்துணை அமைப்புகளுக்கும் உள்ள உறவு, ஒரே தன்மைகொண்ட இரட்டைப் பிறப்பினர்க்கு இடையே உள்ள உறவு போன்றது.

உட்பிரிவு : 6-5

மேற்கூறிய கட்சித் துணை அமைப்புகளின் செயற்பாடுகள், அனைத்து விதங்களிலும் கட்சியின் செயல்களுக்குப் பொருந்துகிற வகையில், மிகுந்த விழிப்புணர்வுடன் அமைக்கப்படவேண்டும்.

www.padippakam.com



பிரிவு : 7

## ஆன்றோர் அவையம்

ஆன்றோர்களின் அறிவுரைகளைத் தொடர்ந்து பெறும் வாய்ப்பினை உறுதி செய்யும் வண்ணம், ஒரு தன்னாட்சி உரிமைகொண்ட, 'ஆன்றோர் அவையம்', அமையக் கட்சி முயலும். அதன் அறிவுரைகளை, அக்கறையுடன் கட்சி ஆய்வுசெய்யும். தேவைப்படின், ஆன்றோர் அவையுடன் விவாதிக்கும். உரியவற்றை நடைமுறைப்படுத்தும். ஆன்றோர் அவையம், தனக்குரிய அமைப்பு, செயல் விதிமுறைகளைத் தானே அமைத்துக்கொண்டு செயற்படும். ஆன்றோர் அவைய உறுப்பினர்கள் விரும்பினால், நாம் தமிழர் கட்சியிலும் சேர்ந்து பணியாற்றலாம்.

விதி : 5

## கட்சிப் பொறுப்பாளர்கள்

பிரிவு -1

## கட்சித் தலைவர்

பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் கட்சித்தலைவர், கட்சியின் அரசியல் தலைமைக்குழு, செயற்குழு, பொதுக்குழு, மாநில மாநாடு ஆகியவற்றுக்குத் தலைமை ஏற்பார்.

கட்சித் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரின் கூட்டுப் பொறுப்புகளுடன் கட்சி நிதி, சொத்து, வைப்பகக் (வங்கி) கணக்கு முதலானவற்றை ஏற்று நடத்தும் தலைமைப் பொறுப்பு, கட்சித் தலைவருக்கு உரியதாகும்.



பொறுப்பாளர்களின் பொறுப்புகள் வரையறை, நிதி கையாளும் நெறிமுறை, உறுப்பினர்கள் குறைகள் தீர்ப்பு நெறிமுறை போன்றவற்றைத் தொகுப்பதற்கும், பிற சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உரிய பணிக்குழுக்களை அமர்த்துவார். அவற்றின் முன்மொழிவுகள் மாநிலச் செயற்குழுவால் ஏற்கப்பட்ட பின், நடைமுறைக்கு வரும்.

பொதுக்குழு, செயற்குழு, அரசியல் தலைமைக்குழு ஆகியவை வழியாகத் தலைவர் பெறுகின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, கட்சியின் குறிக்கோளை நிறைவேற்றும் மாபெரும் பொறுப்பு, கட்சித் தலைவரையே சாரும்.

பிரிவு -2

## பொதுச்செயலாளர்

பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச் செயலாளர், கட்சி வழங்கும் அதிகாரத்திற்கிசைய, தலைவர் வழிகாட்டுதலோடு மாநில அமைப்புகளைக் கூட்டவும், முடிவு களைச் செயற்படுத்தவும் செய்வார்.

கட்சி உடைமைகளின் பெயரில் கடன் வாங்கவும், கொடுக்கவும், இவை கரணியமாகத் தேவைப்படும் நடவடிக்கை களில் கட்சியின் சார்பாக ஈடுபடவும், கட்சியின் தலைவர் பொருளாளருடன் சேர்ந்து கூட்டாகச் செயற்படப் பொதுச் செயலாளருக்கு உரிமை உண்டு.

கட்சியின் குறிக்கோளை நிறைவேற்றும் மாபெரும் பணியில், தலைவருக்கு உண்மையான ஒத்துழைப்பு நல்கும் மாபெரும் பொறுப்பு, கட்சியின் பொதுச்செயலாளருக்கு உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு : 3

## பொருளாளர்

பொருளாளர் கட்சியின் வரவு செலவுக் கணக்குப் பொறுப்புகளை ஏற்பார். கட்சியின் நிதியை, நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கியொன்றில், தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் பெயர்களில் உரிய கணக்கு/ கணக்குகள் தொடங்கிப் பேணுவார். கட்சித் தலைவரும், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய இருவரில் ஒருவரும் இணைந்து வங்கிக் காசோலை வழங்கும் அதிகாரம் உடைய வர்கள். பொருளாளர், தணிக்கைக் குழுவிற்குத் தேவையான ஒத்துழைப்பினை நல்குவார்.

பொருளாளர், செயற்பட இயலாக் காலத்தில் பொதுச் செயலாளர், கூடுதலாகப் பொருளாளர் பொறுப்பையும் ஏற்பார். நீண்டகால மாற்று ஏற்பாடு தேவைப்படின், துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவர், செயற்குழுவால் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். கீழ்மட்டங்களில் நீண்டகால மாற்று ஏற்பாடாக, உரிய மறுதேர்தல் வழியாகப் புதுப் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பிரிவு : 4

## துணைத்தலைவர் (நால்வர்)

தலைவர் பங்கேற்க இயலாத நிலையில், தலைவருக்குரிய பணியை முதன்மைத் துணைத்தலைவர் மேற்கொள்வார்.

தலைவர் பணியாற்ற இயலாக் காலம் மூன்று மாதங்களைத் தாண்டினால், நான்கு துணைத் தலைவர்களில் ஒருவரைச்



செயற்குழு, தலைவராகத் தேர்ந்தெடுக்கும். அவர், அடுத்து வரும் தேர்தல் (பொதுக்குழுவால், தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல்)வரைத் தலைவராகச் செயற்படுவார். மற்ற மட்டங்களில், நீண்டகால ஏற்பாடாக, உரிய மறுதேர்தல் நடத்தப்படும்.

பிரிவு : 5

## துணைப் பொதுச்செயலாளர் (நால்வர்)

துணைப் பொதுச்செயலாளர்கள், பொதுச் செயலாள ருக்குத் துணையாக நின்று பணிகளை மேற்கொள்வர். பொதுச் செயலாளர் செயற்பட இயலாக்காலம் குறுகியதாயின், முதன்மைத் துணைப் பொதுச்செயலாளர், பொதுச்செயலாளர் பணியை ஏற்பார். நீண்டகாலமாயின், துணைப்பொதுச் செயலாளர்களில் ஒருவர் பொதுச்செயலாளராகச் செயற் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பிரிவு : 6

## அமைப்புச் செயலாளர் (இருவர்)

கட்சி அமைப்புகளின் கட்டுமானப் பணி, கொள்கை பரப்புப் பணி, பயிற்சிப் பணி முதலியவற்றைப் பொதுச்செயலாளர், ஒப்புதலோடு, அமைப்புச்செயலாளர்கள் மேற்கொள்வர்.

பிரிவு : 7

## தலைமை நிலையச் செயலாளர் (இருவர்)

தலைவராலும், பொதுச் செயலாளராலும், பொருளாள ராலும், தரப்படும் பொறுப்புகள், கிளைப் பதிவுகள், தலைமை நிலைய ஆளுமை, கட்சியின் தொடர்புப் பணிகள் முதலான வற்றை தலைமைநிலையச் செயலாளர்கள் நிறைவேற்றுவர்.

www.padippakam.com



பிரிவு : 8

## மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், ஊர்ப் பொறுப்பாளர்கள்

மாநிலத்தலைவர், துணைத்தலைவர், பொதுச்செயலாளர், துணைப்பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோருக்குக் கூறப்பட்ட பொறுப்புகளும் கடமைகளும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், ஊர், நகரக்கிளை, பேரூர்க் கிளை, ஊர்க்கிளைத் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கும் பொருந்தும்.

பிரிவு : 9

## தலைமை நிலையம்

கட்சியின் அன்றாட அலுவல்களை நிறைவேற்றவும், கட்சியின் எல்லா அமைப்புகளுடனும் தொடர்புகொள்ளவும், தலைமை நிலையம் சென்னையில் அமைந்திருக்கும்.

தலைமை நிலையப் பொறுப்பாளராகத் தலைமை நிலைய முதன்மைச் செயலாளர் இருப்பார். அவர், தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் வழிகாட்டுதலோடும், பொருளாளர் ஒத்துழைப்போடும் செயற்படுவார்.

பிரிவு : 10

## தணிக்கைக்குழு

கட்சியின் எல்லா அமைப்புகளின் வரவு செலவுகளைத் தணிக்கை செய்து, பொதுக்குழுவுக்கு அறிக்கை தருதல். தணிக்கைக் குழுவின் பொறுப்பு ஆகும். தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டிய, தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்யும். மாவட்டப் பொறுப்பாளர்கள் தொகுதியினரால், தேர்ந்தெடுக்கப்படும் மூவர், மாநிலத் தணிகைக்குழு உறுப்பினர் ஆவர்.



பிரிவு : 11

## ஒழுங்கு நடவடிக்கைக்குழு

மாநிலச் செயற்குழு வகுத்தளிக்கும் ஒழுங்கு நடவடிக்கை குறித்த விதிமுறைகளை, ஒழுங்கு நடவடிக்கைக்குழு செயற்படுத்தும். மாவட்டப் பொறுப்பாளர்கள் தொகுதியினரால், தேர்ந்தெடுக்கப்படும் மூவர் மாநில ஒழுங்கு நடவடிக்கைக்குழு உறுப்பினர் ஆவர்.

பிரிவு : 12

### சொத்துப் பாதுகாப்புக்குழு

உட்பிரிவு : 12-1

கட்சிக்கென வழங்கப்படும் / வாங்கப்படும் சொத்துகள், ஊர்திகள் அனைத்தும் கட்சியின் சார்பில் தலைவர், பொதுச்செயலாளரின் பெயர்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

உட்பிரிவு : 12-2

வாங்கப்படும் சொத்துகளையும், ஊர்திகளையும் கட்சியின் பெயரில் வாங்கப்படுவதாக ஆவணங்களில் குறிப்பிட வேண்டும். கட்சிச் செயற்குழுவின் முடிவின்படிதான் கட்சியின் சொத்துகளை வாங்கவும், விற்கவும் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உட்பிரிவு : 12-3

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோருடன், மாவட்டப்பொறுப்பாளர்கள் தொகுதியினரால், தேர்வு செய்யப்படும் நால்வர் கொண்ட எழுவர்குழு, சொத்துப் பாதுகாப்புக்குழு ஆகும். கட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான அனைத்து வகைச் சொத்துகளும், ஊர்திகளும் இக்குழுவின் பொறுப்பின்கீழ் வரும்.

உட்பிரிவு : 12-4

சொத்துப் பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்தின்பேரில்தான், பொதுச் செயலாளர் சொத்துக்கள் தொடர்பான பாதுகாப்புச் செலவு, மேம்பாட்டுச் செலவு, வருவாய் ஈட்டுதல் முதலியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு : 13

## தேர்தல்

கட்சித் தேர்தல் ஆணையம் அறிவிக்கும் தேர்தல் விதிமுறைகளின்படி, கட்சியின் அனைத்துமட்ட அமைப்புகளுக்கும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படும். பெரும்பான்மை அடிப்படையில் தேரதல் முடிவு அறிவிக்கப்படும்; சம எண்ணிக்கையின்போது, திருவுளச்சீட்டு முறை பின்பற்றப்படும்.

பிரிவு : 14

## தேர்தல் ஆணையம்

உட்பிரிவு : 14-1

மாநிலச் செயற்குழு, தேவைப்படும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் ஆணையத்தையும், அதன் தலைவரையும் அமர்த்தும்.



உட்பிரிவு : 14-2

கட்சியின் எந்த மாவட்டத்திலும் பதவியில் இல்லாதவரே இக்குழுவில் தேர்தல் அதிகாரியாக இடம் பெற வேண்டும்.

உட்பிரிவு : 14-3

தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றிட, இக்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

உட்பிரிவு : 14-4

ஊர்/பேரூர்க்கிளைகள், ஊர்/பேரூர்/ நகர்க்கிளை, ஒன்றியம்/நகரம், மாவட்டம், மாநிலம் ஆகியவற்றின் பொறுப்பாளர்களுக்கான தேர்தல்களைத் தேர்தல் குழுவின் உறுப்பினர்கள், தேர்தல் அதிகாரிகளாக முன்னின்று நடத்தி வைப்பார்கள்.

உட்பிரிவு : 14-5

1. ஊர்க்கிளை / பேரூர்க்கிளை, 2. ஊர் / பேரூர் /நகரக் கிளை, 3. ஒன்றியம்/நகரம், 4. மாவட்டம், 5. மாநிலம் ஆகிய 5 தளங்களில் உள்ள தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஆகிய 5 பொறுப்புகளில் குறைந்தது ஒருவர் மகளிராகவும், ஒருவர் ஆதித் தமிழராகவும் /பழங்குடித் தமிழராகவும் இருக்கும் வகையில், தேர்தல் விதிகள் அமைக்கப்பட்டுப் பெரும்பான்மை அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

உட்பிரிவு : 14-6

தேர்தல் ஆணையம், குடியாண்மை (சனநாயக) முறையில், விதிகளை வகுத்துத் தேர்தலை முழுமை செய்யும். தேர்தல்பணி முடிந்தவுடனே தேர்தல் ஆணையம் கலைந்துவிடும்.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு : 15

## பொறுப்புகளும், குழுக்களும்

| | |
|---|---|
| தலைவர் | ஒருவர் |
| துணைத்தலைவர்கள் | நால்வர் |
| பொதுச்செயலாளர் | ஒருவர் |
| துணைப்பொதுச் செயலாளர்கள் | நால்வர் |
| பொருளாளர் | ஒருவர் |
| அமைப்புச்செயலாளர்கள் | இருவர் |
| தலைமை நிலையச்செயலாளர்கள் | இருவர் |
| அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் | 37 பேர் |
| சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் | எழுவர் |
| ஒழுங்கு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் | மூவர் |
| தணிக்கைக்குழு உறுப்பினர்கள் | மூவர் |
| துணை அமைப்புகளின் பொறுப்பாளர்கள். | |
| பிறமாநிலப் பொறுப்பாளர்கள். | |

பிரிவு : 16

## மாநாடு

உட்பிரிவு : 16-1

மூன்று ஆண்டுகள் இடைவெளியில் ஒன்றிய, மாவட்ட, மாநாடுகள் நடத்தப் பெறல் வேண்டும். தேவை ஏற்படின் அந்தந்தப் பகுதி அமைப்புகளின் முடிவின்படி, பொதுச் செயலாளர் ஒப்புதல் பெற்று மாநாடுகள் நடத்திக்கொள்ளலாம்.



உட்பிரிவு : 16-2

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில மாநாடு நடத்தப்பெறல் வேண்டும்.

உட்பிரிவு : 16-3

மாநில மாநாட்டினை ஒத்தி வைக்க நேரிடுமாயின் மாநிலச் செயற்குழுவின் ஒப்புதல் பெற வேண்டும்.

உட்பிரிவு : 16-4

அரசியல் தலைமைக்குழுவின் ஒப்புதல்பெற்று, முறையான மாநில மாநாட்டையும், தேவைப்படும்பொழுது சிறப்பு மாநாட்டையும் நடத்திக் கொள்ளலாம்.

உட்பிரிவு : 16-5

மாநாட்டின் நன்றியுரைக்கு முன்னே, மாநாட்டு வரவு செலவுக் கணக்கு, மாநாட்டு மேடையிலேயே அறிவிக்கப்பட வேண்டும்.

பிரிவு : 17

## நன்கொடை

தலைமை நிலையப் பொருளாளரின் எழுத்துவடிவ ஒப்புதல் பெற்று, மாநாட்டுச் செலவினங்களுக்கும், பிறவற்றுக்கும் அந்தந்த மட்டத்தில் அச்சிட்ட நன்கொடைச் சீட்டுகள் வழியாக, தண்டல் செய்து கொள்ளலாம். தணிக்கை உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு : 18

## தலைமை அலுவலகம்

நாம்தமிழர் கட்சியின் தலைமை அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகிறது.

கதவு எண் 7, மருத்துவமனைச் சாலை,
செந்தில் நகர், சின்னப்போரூர்,
சென்னை 600116.

பிரிவு : 19

## கிளை அலுவலகம்

ஊர்க்கிளை, ஊர், பேரூர், வட்டக்கிளை, ஒன்றியம், நகரம், மாவட்டக் கட்சி அலுவலகங்களை, அந்தந்த அமைப்பின் வசதிக்கு ஏற்ப, அமைத்துக்கொள்ள வேண்டும்.

பிரிவு : 20

## படிப்பகம், நூலகம்

தமிழ்த்தேசியச் சான்றோர் பெருமக்களின் பெயரால், படிப்பகங்கள், நூலகங்கள் அந்தந்த அமைப்பு மட்டத்தில் இயங்கும் செயற்குழுவின் இசைவுபெற்று நடத்தலாம்.

**விதி : 6**

# ஒழுங்கு நடவடிக்கையும் முரண்பாட்டுத் தீர்வும்

பிரிவு : 1

கட்சி உறுப்பினர், கட்சி விதிகளை மீறினால், உறுப்பினர் இடம்பெற்றுள்ள அமைப்பைச்சேர்ந்த பொதுக்குழுவால், பெரும்பான்மை முடிவின்பேரில், அவருக்கு மேல்நிலை



அமைப்பின் தீர்ப்பு கிட்டும்வரை, உறுப்பினர் பொறுப்பிலிருந்து இடைக்காலமாக நீக்கம் செய்யப்படுவார்.

பிரிவு : 2

இடைக்கால நீக்கத்தைத் தீர்மானமாக நிறைவேற்றி, அவர் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி, அடுத்த மேல் அமைப்பிற்கு அனுப்பும்.

பிரிவு : 3

ஒவ்வொரு அமைப்பும், தனது கீழ் அமைப்பிலிருந்து நடவடிக்கைக்காகப் பரிந்துரைக்கப்படுபவர் குறித்துத் தனது செயற்குழுவால் அமர்த்தப்படும் மூவர் கொண்ட நடுவர் குழுவால் உசாவித் தீர்ப்பு அளிக்கும்.

பிரிவு : 4

தீர்ப்பை எதிர்த்து, இரண்டு மேல்முறையீடுகளுக்கு மிகாமல் அடுத்தடுத்த மேல் அமைப்புகளுக்கு முறையீடு செய்து கொள்ள உரிமை உண்டு.

பிரிவு : 5

உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டு, உறுப்பினர் மீதான நடவடிக்கைத் தீர்ப்பு முதலானவற்றின் அறிக்கைத் தலைமை நிலையத்திலுள்ள ஒழுங்குநடவடிக்கைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். அக்குழுவின் முடிவுதான் இறுதித் தீர்ப்பாகும்.

பிரிவு : 6

இருமுறை ஒழுங்கு நடவடிக்கையால் தண்டனை பெற்றவர் மாநிலத்திற்கும், மும்முறை தண்டனை பெற்றவர் மாவட்டம், ஒன்றியம், பேரூர், ஊர்க்கிளைகளுக்கும் நான்கு ஆண்டு

படிப்பகம்

www.padippakam.com



களுக்குக் கட்சித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவார். நான்கு முறை ஒழுங்கு நடவடிக்கையால் தண்டனை பெற்றவர் எத்தேர்தலிலும், எக்காலத்தும் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவார்.

பிரிவு : 7

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் தவிர்ந்த மாநிலப் பொறுப்பாளர்கள்மீது குற்றச்சாட்டு எழுந்தால், மாநிலச் செயற்குழுவால் அமர்த்தப்படும் நடுவர்குழு உசாவல் நடத்தித் தீர்ப்பு வழங்கும். தேவைப்படின், குற்றம் சாட்டப்பட்டவர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம். அது வழங்கும் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

பிரிவு : 8

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர்மீது குற்றச்சாட்டு எழுந்தால், செயற்குழுவால் அமர்த்தப்படும் நடுவர்குழு, உசாவல் நடத்திச் செயற்குழுவிற்கு அறிக்கை தரும். அறிக்கையின் மீதான செயற்குழுவின் பெரும்பான்மை முடிவே இறுதித் தீர்ப்பாகும்.

பிரிவு : 9

பிரிவுகள் 5, 7, 8 ஆகியவற்றைத் தாண்டி, எந்த உறுப்பினருக்கும் வழக்குமன்றம் செல்ல உரிமை இல்லை.

பிரிவு : 10

உறுப்பினர்மீது எழுப்பப்படும் குற்றச்சாட்டு கையாளப் படுவதைப்போல, உறுப்பினர்களிடையே எழும் முரண்பாடுகளும், குழப்பங்களும் கையாளப்பட்டு அவற்றிற்குத் தீர்வு காணப்படும்.



## விதி : 7

## கட்சி நடவடிக்கைகளுக்கான அடிப்படை விதிகள்.

பிரிவு : 1

பலவேறு அமைப்புகளின் பொதுக்குழுக்கள், செயற் குழுக்கள் ஆகியவை கூடும் காலமுறையைக் கீழ்க்காணும் பட்டியலில் காண்க.

| அமைப்பு நிலை | பொதுக்குழு | செயற்குழு |
|---|---|---|
| மாநிலம் | 12 மாதம் | 4 மாதம் |
| மாவட்டம் | 6 மாதம் | 2 மாதம் |
| ஒன்றியம்/நகரம் | 3 மாதம் | 1 மாதம் |
| ஊர்/பேரூர்/ நகரக்கிளை | 3 மாதம் | 1 மாதம் |
| ஊர்க்கிளை | 3 மாதம | 1 மாதம் |

பிரிவு : 2

உறுப்பினர்களில் 20 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர், கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று வேண்டும்போதும் தொடர்புடைய அமைப்பின் தலைவர் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

பிரிவு : 3

கூட்ட அறிவிப்பு முன் காலம் குறைந்தது 7 நாள்கள்; விதிவிலக்காக, அரசியல் தலைமைக்குழு மட்டும் தேவைப்படும்

படிப்பகம்

www.padippakam.com



போதெல்லாம், அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய முன் தகவல் கொடுத்துக் கூட்டப்படலாம்.

பிரிவு : 4

கூட்டம் நடத்துவதற்குரிய உறுப்பினர் குறைவெண் வரம்பு, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும்.

பிரிவு : 5

கூட்ட நடைமுறையில், உறுப்பினர் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்; முடிவுகள் பெரும்பான்மை அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.

பிரிவு : 6

அவைத் தலைவரால் ஏற்கப்பட்ட, கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முறைப்படி பதிவு செய்யப்பட வேண்டும்; முடிவுகள் தொடர்புடைய அமைப்புகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**விதி : 8**

## கட்சியின் பொருட்குவை (நிதி) கையாளும் நெறிமுறைகள்

பிரிவு : 1

பொருளாளரின் பொறுப்பும் அதிகாரமும்பற்றிய கூறுகள், பொருளாளர் என்ற தலைப்பில் (விதி 5, பிரிவு 3) கொடுக்கப் பட்டுள்ளது.



பிரிவு : 2

கட்சிக்கு வரவாக வரும் அனைத்துப் பணமும், பெறுகைச் சான்று அடிப்படையில் பெறப்பட்டு, உரிய பதிவேட்டில் வரவு வைக்கப்பட வேண்டும். தனிப்பட்ட தவிர்க்கவியலாச் சூழ் நிலையில் மேற்கொள்ளப்படுகிற உண்டியல்வழித் தண்டலாக இருப்பின், தண்டலை மேற்கொள்ளும் கட்சியின் அமைப்பு சார்பாகப் பொது மக்கள் நடுவில், தண்டல் தொகை அறிவிக்கப் பட்டுக் கட்சிக் காசேட்டில் வரவு வைக்கப்பட வேண்டும்.

பிரிவு : 3

கட்சித் தலைமைச் செயற்குழுவால், அவ்வப்போது ஒவ்வொரு பொறுப்பாளருக்குமாக நெருக்கடிச் செலவுகளை ஏற்கும் வகையில், அறிவிக்கப்படுகிற கைப்பணத்தொகையைத் தாண்டி எந்தத் தொகையையும், எந்தப் பொறுப்பாளரும் கையில் வைத்திருக்கக்கூடாது; மிகைத்தொகை கட்சியின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கட்சிப் பணிக்காகக் கட்சியிலிருந்து பெற்ற பணத்தை, கட்சிப்பணி நிறைவேறும்வரை தன் பொறுப்பில் வைத்துக் கையாளலாம். கட்சிப்பணி முடிந்தவுடன், கட்சிப்பணிக்கான செலவின விளக்கங்களைக் கொடுப்பதோடு, மீதிப் பணத்தையும் கட்சியின் மாநிலப் பொருளாளரிடம் ஒப்படைக்க வேண்டும். கட்சியின் எந்தப் பணத்தையும் ஒரு மாதத்திற்குமேல் வைத்திருக்க நேரும் பொறுப்பாளர்கள், பொருளாளரின் தனி ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

பிரிவு : 4

ஒவ்வொரு வரவும் உரிய பதிவேட்டில் பதியப் படுவதைப்போல, ஒவ்வொரு செலவும் உரிய பதிவேட்டில பதியப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு : 5

கட்சியின் அனைத்து மட்டங்களிலும் உள்ள வரவு செலவு நடவடிக்கைகளும், கட்சியின் தணிக்கைக் குழுவினரால் ஆண்டுக்கொரு முறை உள்தணிக்கை செய்யப்படும். உள் தணிக்கைக்குப் பின், அரசு உரிமம் பெற்ற முறையான பட்டயக் கணக்காயரால், அவை ஒருங்கிணைந்த முறையில், ஆண்டுக் கொருமுறை தணிக்கை செய்யப்படும்.

பிரிவு : 6

ஒவ்வொரு நிதியாண்டை அடுத்தும் பட்டயக் கணக்காய ரால் மேற்கொள்ளப்படுகிற தணிக்கையின் நிதிநிலை அறிக்கையை, நிதியாண்டு முடிந்த 60 நாள்களுக்குள் தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு : 7

கட்சிப் பணம் முழுவதும், கட்சிப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

## விதி : 9

### கட்சி அமைப்பு விதிகள் திருத்தும் முறை

பிரிவு : 1

கட்சி அமைப்பு விதிகளைத் திருத்தும் இறுதி அதிகாரம் மாநலப் பொதுக்குழுவிற்கு மட்டுமே உண்டு.

பிரிவு : 2

கட்சி அமைப்பு விதிகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகளை, மாநிலப் பொதுக்குழுக் கூட்ட நாளுக்கு 4 மாதங்களுக்கு முன்பாகத் தலைமையகம் வந்த சேரும் வகையில், பொதுக்குழு உறுப்பினர் யாரும் அனுப்பலாம்.



பிரிவு : 3

முன்மொழிவைக் கட்சியின் செயற்குழு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும். பெரும்பான்மை உறுப்பினர்கள் ஏற்றால் பொதுக் குழுவின் ஆய்விற்குப் பரிந்துரைப்பர். செயற்குழு, தானாகவே செயற்குழு சார்பில், கட்சி அமைப்பு விதிகள் திருத்தம் தொடர்பாக முன்மொழிவுகளைப் பொதுக்குழுவிற்கு, கூட்ட நாளுக்கு 3 நாள்கள் முன்பாக அனுப்பி வைக்கலாம்.

பிரிவு : 4

கட்சியின் அமைப்பு விதிகள் திருத்தம் தொடர்பாக வரும் அனைத்து முன்மொழிவுகளையும், பொதுக்குழு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். முறையான இருதரப்பு வாதங்களுக்கு வாய்ப்பளித்துப் பெரும்பான்மை (50 விழுக்காட்டிற்கு மேல்) அடிப்படையில் திருத்தம்பற்றிய முடிவெடுக்கப்படும்.

## விதி : 10

### இணைவு, பிளவு, கலைப்பு

பிரிவு - 1

கட்சியில் புதிதாக இணைய வருகிற சிறு குழுக்கள், கட்சியில் தனித்தனி புது உறுப்பினர்கள் சேர்க்கப்படும் முறையைப் பின்பற்றிச் சேர்க்கப்பட்டு இணைக்கப்படுவர். இணைய வரும் குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை, கட்சியின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



பங்குக்குமேல் இருந்தால், அந்த உறுப்பினர்கள் மொத்தமாகச் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்கு மேல் 12 மாதத்திற்குள் கட்சியின் அனைத்து மட்டங்களிலும் பொதுத் தேர்தல் நடத்திப் புதுப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு பெருந்திரளாக இணைய வருபவர்கள், வேறொரு கட்சியிலிருந்து கட்சிச் சொத்துகளோடு வந்தால், அவையும் கட்சிச் சொத்துகளோடு இணைக்கப்படும்.

பிரிவு - 2

கட்சியிலிருந்து சிறு குழுக்கள் பிரிந்து செல்வது, தனி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகிச் செல்வதாகக் கருதப்படும். பெருங்குழுவாகக் கட்சியில் பிளவு ஏற்படும்போது அரசியல் தலைமைக்குழுவும், செயற்குழுவும் தனித்தனியே வாதித்து, அறிக்கையைப் பொதுக்குழுவிற்கு அனுப்பும். பிளவின் வலிமை பொதுக்குழுவில் முடிவு செய்யப்படும். பெரும்பான்மைத் தரப்பு, கட்சியாகத் தொடர்ந்து செயற்படும். சிறுபான்மைத் தரப்பு கட்சியிலிருந்து நீக்கப்படுவர்.

பிரிவு - 3

அரிதினும் அரிதாக நேரும் வாய்ப்பாக, கட்சிக் கலைப்புபற்றிய சிக்கல் எழுந்தால், அதுபற்றி அரசியல் தலைமைக்குழுவும், செயற்குழுவும் தனித்தனியே வாதித்து, அறிக்கையைப் பொதுக்குழுவிற்கு அனுப்பும். கட்சிப்பொதுக் குழுவில் மூன்றில் இரண்டுபங்குப் பெரும்பான்மையோடு கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று பொதுக்குழு உறுப்பினர்கள் முடிவு செய்துவிட்டால், அந்தச் சமகாலத்தில் தமிழ்நாட்டில் செயற்படும் ஒரு முன்னணித் தமிழ்த் தேசியக்



கட்சியிடம் கட்சிச் சொத்துகளை ஒப்படைத்துவிட்டு, கட்சி கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்படும்.

**விதி : 11**

## உறுதிமொழிகள்

பிரிவு - 1

இந்திய அரசியல் சட்டத்திற்கு உண்மையாக இருப்பதுடன், சமனியம் (சோசலிசம்), மதச்சார்பின்மை, குடிநாயகம் ஆகிய கொள்கைகளின்பால் உண்மையான நம்பிக்கைகொண்டு, நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்தி, வலிமைப்படுத்தக் கட்சி உறுதி அளிக்கிறது.

பிரிவு - 2

கட்சி எந்தவித வன்முறைச் செயல்களையும் உருவாக்காது என்றும், வன்முறைகளைப் பிறர் உருவாக்கிடும் வகையில் தூண்டுகோலாக இருக்காது என்றும், பிறர் உருவாக்கிச் செயற்படுத்தும் வன்முறைகளில் ஈடுபடாது என்றும் கட்சி உறுதி அளிக்கிறது.

பிரிவு - 3

கட்சியின் அனைத்துமட்ட அமைப்புகளுக்கும் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் நாயக அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் என்று கட்சி உறுதி அளிக்கிறது.

பிரிவு - 4

கட்சியின் அனைத்து அமைப்புகளிலும் மேற்கொள்கிற நடவடிக்கைகளில் கட்டாயமாக உட்கட்சி மக்கள்நாயக முறை பின்பற்றப்படும் என்றும் கட்சி உறுதி அளிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு - 5

கட்சி பதிவுசெய்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள், தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களில் கட்சி போட்டியிடும் என்று கட்சி உறுதி அளிக்கிறது.


பிரிவு - 6

மக்கள் நாயகம், நிகர்மை, மதச்சார்பின்மை ஆகியவை கட்சியின் அடிப்படை நெறுமுறைகள் என்று கட்சி உறுதியளிக்கிறது.

> "செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்". (திருக்குறள்-466)



# பிற்சேர்க்கை




படிப்பகம்

www.padippakam.com



# நாம்தமிழர் கட்சி உறுப்பினர் நடத்தை விதிகள்

திருவள்ளுவர் ஆண்டு 2043
(கி.பி. 2012)

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (திருக்குறள், 131)



## தோற்றுவாய்

'நாம்தமிழர் கட்சி' மற்றுமோர் அரசியல் கட்சி அன்று; மாற்று அரசியல் புரட்சி. தமிழர் உரிமையை மீட்டு, அதை நிலைநாட்டித் தமிழர்களால், தமிழர்களுக்காக, மக்கள் நாயக முறையில் முடிவெடுத்துப் படைநாயக முறையில் செயற்படுத்தும் தமிழர்களின் பாசறை. தமிழர் உரிமை மீட்சிக் குறிக்கோளே 'நாம்தமிழர் கட்சி'யின் தனிப்பெருந்தலைமை.

## நடத்தை விதிகள்

1. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நம்மீது திணிக்கப் பட்டுள்ள சாதி, மத அடையாளங்களையும், அண்மைக் காலமாகத் திணிக்கப்பட்டு வருகிற இந்தியன், திராவிடன் என்ற முத்திரைகளையும் தவிர்த்து விட்டுத் 'தமிழன்' என்ற அடையாளத்தையே முதன்மை அடையாளமாகப் பெருமிதத்தோடு நாம் தமிழர் கட்சியினர் ஏற்க வேண்டும்.

2. சாதியமைப்புகளின் செயற்பாடுகளோடு மறைமுக மாகவோ, நேரடியாகவோ தொடர்புகள் கொண்டிருக்கக் கூடாது.

3. இன்ன மதம், சாதி என்று அடையாளம் காணும் வகையில், பெயரொட்டு, புறவயமான மத அடையாளம் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



4. அறிவையும், நலத்தையும் அழித்துக் குடி கெடுக்கும் மதுவகைகளையும் வெறியூட்டுப் (போதைப்) பொருள் களையும் பயன்படுத்தக் கூடாது.

5. அடிமைப்படுத்தும் பழக்கங்களான சூதாட்டம், பரிசுக் குலுக்கல் முதலியவற்றைத் தவிர்த்தும், திரைப்படம், தொலைக்காட்சி, கைப்பேசி, உண்பொருள்கள், அழகு-மணப்பொருள்கள், பற்பசை, வழலை போன்ற பயன் படுபொருள்கள் முதலிய நுகர்வுக்கூறுகளைத் தேவைக் கேற்ற அளவில் மட்டும் பயன்படுத்தியும் வாழ வேண்டும். தேவைக்கேற்ற குறைந்த பொருள்களும் தமிழர் தாயகப் பொருள்களாக இருக்கட்டும்.

6. நாம்தமிழர் கட்சியினர், 'பண்பான மக்கள் பணி யாளர்கள்', என மக்கள் மதிக்கின்ற வகையில், ஒரு முன்மாதிரியான தொண்டு மனப்பான்மையுள்ள மருத்துவர் போலக் கண்ணியமுடன் இன்சொல் பேசி, மக்களுக்குப் பயன்படும் வகையில் வாழ வேண்டும்.

7. இயன்ற வரையில் இயற்கை தழுவிய எளிய வாழ்வினை மனநிறைவோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து, தான்-தன்குடும்பத்தார் உடல்-உள்ள நலத்தைப் பேணிக்கொண்டு, தான் வாழும் குமுகாயத்திற்குப் பயன்பட வாழ வேண்டும். மேலும் பயன்படத் தன் ஆற்றலை நாளும் வளர்த்து வரவேண்டும்.

8. ஒருவர் 'நாம் தமிழர்', என்ற வகையில் இன்னொரு தமிழர்க்கு உறவினரே என்றுணர்ந்து, ஓர் உறவுமுறைப் பேரினமாகக் கருதி வாழ வேண்டும். குமரி / கோலார்/ குவைத்துத் / தமிழனுக்கு ஒரு தொல்லை என்றால்



கும்மிடிப்பூண்டித் தமிழன் குமுறி எழுகிறாற் போல நாம் ஓரினமாதல் வேண்டும். பிற மாநில, பிற நாட்டுத் தமிழர்களும் நம் தொப்புள்கொடி உறவே.

9. பெற்றோர், ஆசிரியர், இனநலங்காக்கும் சான்றோர் முதலியோரை, மனமாரப் போற்றி மதிப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

10. பிறப்பு அடிப்படையில் தாழ்வு கற்பிக்கப்பட்டு ஒடுக்கப் பட்டுள்ள தமிழர்களின் வாழ்வு உயர்ந்திட, அனைத்து வகையானும் திட்டமிட்டு உழைக்க வேண்டும். மகளிர்க்குச் சமவுரிமை தந்து, மதித்துப் போற்ற வேண்டும். உடற்குறையாளர்க்கு உரியவகையில் துணைநிற்க வேண்டும். மேற்கண்ட மூன்று தரப்பி னர்க்கும் துன்பந் தருவோரை எதிர்த்துப் போராடத் தயங்கக்கூடாது.

11. தமிழர் உரிமை மீட்சியே நம் தலைமை. தமிழர் உரிமை மீட்சியின் வடிவமான, தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனே (பெரும்பாகரன்) நம் பெருந்தலைவர். அவரது செயல்வழிப் பேசுங்கலையை நாமும் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டும். மேலும், அவருடைய மற்ற அரும்பண்புகளையும் சிந்தித்து உள்வாங்கவும் முயல வேண்டும். வெற்றுத் தலைமை வழிபாட்டைத் தவிர்க்க வேண்டும்.

12. தமிழர் உரிமை மீட்சியைக் குறிக்கோளாய் ஏற்கும் எவரிடமும் எந்தப் பிணக்கு ஏற்படினும், எவ்வகையானும் அதைத் தீர்த்துவிட்டு, உடனே அவருடன் இணக்கமாதல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



13. நம் குறிக்கோளுக்கு எதிர்க்கொள்கை கொண்ட தமிழர்களையும் முடிந்தவரை மதித்து, அன்பு பாராட்டி வென்றெடுக்கவே முயலவேண்டும் ஏனெனில் நாம் இயங்கிக் கொண்டிருப்பது கருத்துப் போர்க்களம். ஆனால் அதே வேளையில் எதிர்க்கொள்கைக் கருத்தியலைச் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்குவதில் ஈவு இரக்கமற்றத் திண்மனம் கொள்ள வேண்டும்.

14. மேலோர்-கீழோர், உடையார்-இல்லார் முதலிய வேறுபாடுகளை, நம் இயக்கம் புறக்கணிப்பதால், கட்சியினர் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு 'வணக்கம் சொல்லி' ஒருவரை ஒருவர் மதித்து அன்பு பாராட்ட வேண்டும். இந்த முறையை 'முந்து போற்றி முறை', என அழைக்கலாம். இது சாதிய உயர்வு-தாழ்வுப் பண்பை, உளவியல் முறையில் தகர்க்கப் பயன்படும்.

15. நாம்தமிழர் கட்சியினர் ஒருவருக்கொருவர் அய்யா, அம்மா, அண்ணன், அக்கை, தம்பி, தங்கை, தோழர் முதலிய உறவு முறைகளில் அழைத்துக்கொள்ள வேண்டும்.

16. நாம்தமிழர் கட்சியினர் மூட நம்பிக்கைகளை ஏற்கக் கூடாது. யார் கூறினாலும் எதைப் பற்றிக் கூறினாலும் மெய்ப்பொருள் காணும் அறிவியக்க நெறியைப் பின்பற்ற வேண்டும். இயன்ற வரையில், இயற்கை, உலகப் பொதுவியம், உயிரி நேயம், அறிவியம் ஆகியவை தழுவிய முழுமை வாழ்வியலான அறம், பொருள், இன்பம் ஆகிய தமிழிய நெறிகளைப் பரப்பும் பரப்புரையில் பங்கேற்க வேண்டும்.



17. தன்னலத்தைக் காட்டிலும் இனநலத்தையே முன்னிறுத்த வேண்டும். ஏனெனில் இனநலனில் தன்னலமும் உள்ளடக்கம்.

18. தன்னை முன்னிறுத்துவோருக்கும், தன் விளம்பர வெறியர்க்கும், ஊழல், கையூட்டு போன்ற புறவழிகளில் தன்வருவாய் சுருட்டுநர்க்கும் நாம் தமிழர் கட்சியில் இடம் இல்லை.

19. 'இன்னார்க்கு இன்ன பணி பொருத்தம்', எனக் கட்சி முடிவு செய்து ஆணையிடும் பணியை முழு ஈடு பாட்டோடு செய்ய வேண்டும்.

20. நாம்தமிழர் கட்சிக்கு இனப் பணியாற்ற வருவோர், தம்மால் இயன்ற பங்களிப்பைத் தம் வருவாய் வரம்பிற்குத் தக்கவாறு ஈகவுணர்வோடு வழங்க வேண்டும்.

21. நாம்தமிழர் கட்சியினர், தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்துத் 'தமிழன்', என்ற பெருமிதவுணர்வு, அஞ்சாமை, தன்னுறுதி, குறிக்கோள் மீது பற்றுறுதி, உழைப்பில் விழைவு, உண்மை, நேர்மை, ஒழுக்கம், ஒற்றுமைப்பண்பு, தன்முனைப்பின்மை, ஒப்படைப் புணர்வு, ஈகவுணர்வு, ஆய்வறிவு, தன்னாய்வு முதலிய அரும்பண்புகளில் நாளும் மேம்பாடு காண முயல வேண்டும்.

22. நாம்தமிழர் கட்சியினர், 'குறிக்கோளை மனத்தில் கொண்டு விடுவதாலேயே அது அடையக்கூடிய தில்லை; அது உரிய முறையில் உழைப்பதாலும், குருதி சிந்திப் போராடுவதாலும் அடையக்கூடுவது' என்ற தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



23. "தமிழர் உரிமைப் போராட்டம் வலிமையுடன் இருக்க வேண்டுமாயின், பரந்துபட்ட தமிழர் இனம் 'நாம் தமிழரே' என்று உணர்ந்தறிந்து ஒற்றுமையுடன் ஒழுகி ஒன்று திரள வேண்டும்; திரட்டப்பட வேண்டும்" என்பதை ஆழமாக நாம் தமிழர் கட்சியினர் உணர்ந்து தமிழர் இனக் கட்டுமானத்தில்- அதாவது தமிழர் குமுகாயக் (சமுதாய) கட்டுமானத்தில் அக்கறையுடன் ஈடுபட வேண்டும், தமிழர் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் அமைப்புகள், தமிழர் திருமணக் கூடம் போன்ற பொது அமைப்புகள், தமிழர் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் முதலியவை அமைக்கப்பட வேண்டும். திருவள்ளுவர் புத்தாண்டு விழா, பொங்கல் விழா, கோடையில் கல்வி விழா, முழுநிலவு நாள்களில் தமிழர் நிலாச்சோறு விழா, நவராத்திரிக் கொலு விழாக் காலத்தில் 10 நாள்கள் அறிவியல் விழா, அய்யப்பன் பருவத்தில் திருக்குறள் ஓதி, குமரிப் பயணம் செல்லும் விழா, வள்ளலார்தமிழிய விழா, நடுகல் தெய்வ (அய்யனார், வீரய்யன், கருப்பண்ணன் போன்றோர்க்கான) விழா என்றவாறு தமிழர் விழாக்கள் நடத்தலாம்.

24. இனத்தைக் காட்டவும், கட்டவும், அறிவைக் காட்டவும், கட்டவும் பயன்படுவதோடு பொருள் உருவாக்கத் திற்கும் பயன்படும் ஓர் உணர்வார்ந்த அறிவுச்செல்வம், நம் தாய்மொழி தமிழ், என்பதால் அதன் கட்டமைப்புச் சிதையாமல் காப்பது நம் கடமை. எனவே தமிழைத் தமிழ் எழுத்துகளால் மட்டும் எழுத வேண்டும்; தமிழைத் தமிழ்ச் சொற்களால் மட்டும் எழுதவேண்டும். பிறமொழி ஒலிப்புகளைத் தமிழில் எழுத வேண்டிய கட்டாயம் வரும்போது, தமிழ் மரபிற்குட்பட்ட ஒலிகளாக மாற்றியே எழுத வேண்டும்.



25. தமிழர்கள் தங்களுடைய முதன்மை அடையாளமான பெயரை, நல்ல தமிழிலேயே தாங்க வேண்டும். ஆங்கில முன்னெழுத்துகள், கிரந்த எழுத்துகள், சாதிப் பின்னொட்டுகள் கூடா.

26. அனைத்து வாழ்வியல் துறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும். கட்டாயத் தேவை நேர்கிற இடங்களிலும், தமிழ் அறியாதவர்களிடமும் பிறமொழி பயன்படுத்தலாம்.

27. கல்வி மொழியாகத் தமிழையே தேர்ந்திட வேண்டும்.

28. திருமணம், பிறப்பு, இறப்பு முதலிய வாழ்வியல் நிகழ்வுகளைத் தமிழிலேயே நடத்த வேண்டும்; தமிழர்களைக் கொண்டே நடத்தவேண்டும்.

29. நாம்தமிழர் கட்சியினர் தம் கட்சி நடவடிக்கைகளில் காலவொழுக்கம், காசுஒழுக்கம், கருத்து (கொள்கை) ஒழுக்கம் ஆகியவற்றைத் தவறாது பேண வேண்டும்.

30. கட்சி நடவடிக்கைகளில் வெற்று ஆரவாரச் செலவு தவிர்க்கப்படவேண்டும்.

31. கட்சி நிகழ்ச்சிகளுக்கு, உரிய பதாகைகளில் நம் வாழ்வியல் வழிகாட்டி திருவள்ளுவர், நம் உரிமை மீட்சியியல் வழிகாட்டி தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் (பெரும்பாகரன்) ஆகிய இருவரின் உருவங்கள் தவிர வேறெந்த உருவமும் பயன்படுத் தக்கூடாது; தமிழர்களுடைய வரலாற்று அடையாளங் களாகிய புலி, வில், கயற்கொடி, பனை, காந்தள்மலர்,

படிப்பகம்

www.padippakam.com



அன்றில் பறவை, ஐந்திணை இயற்கைக் காட்சிகள், பழந்தமிழ் இலக்கியக் காட்சிகள் போன்றவை இடம் பெறலாம்.

32. சுவரொட்டிகளும், பதாகைகளும் நல்ல தமிழில் பிழை இல்லாமல் எழுதப்பட வேண்டும். பதாகைகள், நெகிழித் தட்டிகள் முதலியன கட்சி அறிவித்துள்ள முழக்கங்களையும், தேசியத் தலைவர் பொன் மொழிகளையும், கொள்கை விளக்கக் கருத்துப் படங்களையும் மட்டுமே தாங்க வேண்டும். சுவரொட்டிகள், சுருக்கமாக நிகழ்ச்சித் தலைப்பு, இடம், நாள், நேரம், பங்கேற்போர் பெயர்கள், நிகழ்ச்சியேற்பாடு செய்யும் அமைப்புப்பெயர் ஆகியவற்றை மட்டுமே தாங்க வேண்டும். இடம் இருப்பின் சிறப்புச் சொற்பொழிவாளர் உருவம் பொறிக்கப்படலாம். துண்டறிக்கை, கட்சிக் கொள்கைக் குட்பட்ட செய்திகளை மட்டும் நல்ல தமிழில் தாங்கி வரவேண்டும்.

33. கட்சி ஆணைப்படி ஏற்கப்பட்ட சீருடைகளில் கட்சியினர் நிகழ்ச்சிகளுக்கு வரவேண்டும்.

34. நாம்தமிழர் கட்சிக்கொடியை மிக்க மதிப்புடன் கட்சியினர் கையாள வேண்டும், கொடியைத் தலையில் கட்டுவதோ, கையில் கட்டுவதோ கூடாது, முறைப்படி நிமிர்த்திக் கொடியை ஏந்தி வரவேண்டும்; அல்லாத போது அதைச் சுருட்டிக் காப்பாக வைக்க வேண்டும், கம்பங்களில் ஏற்றும் போதும், இறக்கும்போதும் கொடிக்கு உரிய வணக்கம் செலுத்த வேண்டும். கட்சி அறிவிக்கும் துன்பியல் அல்லாத மற்ற காலங்களில் கம்பங்களில் உச்சியில் தடையின்றிப் பறக்குமாறு கொடி கட்டப் படவேண்டும்; அந்நிலையில் பேணப்பட வேண்டும்.



35. கட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் அகவணக்கம், வீரவணக்கம், உறுதி மொழி, இனமுழக்கம் ஆகியவற்றை (பிற்சேர்க்கையில் காண்க) முழங்கிய பின்னரே தொடங்கப்பட வேண்டும். நிகழ்ச்சி முடிவில் நன்றி யுரைக்குப் பின் இனமுழக்கம் (நாம்-தமிழர், நாம்-தமிழர்) முழங்கப்பெற வேண்டும்.

36. கட்சி நிகழ்ச்சிகளைக் குறித்த நேரத்தில் தொடங்கிக் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும்.

37. கட்சி மேடையில் நிகழ்ச்சிக்கு உரியவர்கள் மட்டுமே அமரவேண்டும்.

38. கட்சி நிகழ்ச்சிகளில் யாரும், யார் காலிலும் விழக் கூடாது. தனிமாந்தனைப் போற்றும் முழக்கங்கள் தவிர்க்கப்படவேண்டும். பிற பொது முழக்கங்கள் தேவையெனின் திட்டமிட்டு அரங்கேற்ற வேண்டும்.

39. கட்சிப் பொது நிகழ்ச்சிகளில் மாலை சூட்டுதல், நேரியல் (சால்வை) அணிவித்தல், பரிசுப் பொருள்கள் அல்லது நினைவுப் பொருள்கள் வழங்குதல் முதலிய கூறுகளைத் தவிர்க்க வேண்டும்.

40. மேடைப் பேச்சுகளில் வெற்றுரைகளும், முகப்புகழ்ச்சி யுரைகளும் தவிர்க்கப்பட வேண்டும். எதிர்க்கருத்து கொண்டோரையும், தம்மைத் தாக்கிப் பேசுவோரையும் கூட இழிவாகவோ, தரக் குறைவாகவோ, அவர்களது குடும்பத்தையும், தனிமாந்த வாழ்வையும் இழிவு செய்வதாகவோ பேசக்கூடாது.

41. மேடைப் பின்புலமாகத் தேசியத் தலைவர் படம், கட்சிச் சின்னம் (பாயும் புலியின் நேர்முகம்), நிகழ்ச்சியை

படிப்பகம்

www.padippakam.com



யொட்டிய கருத்து விளக்கப்பதாகை ஆகியவையே இடம்பெற வேண்டும்.

42. கட்சி நிகழ்ச்சிகளில், கட்சியினர் வெற்றுக் கூச்சலிடுதல், சீழ்க்கையடித்தல், ஆடுதல் முதலிய அறுவறுப்புகளைத் தவிர்க்க வேண்டும்.

43. நாம்தமிழர் கட்சியினர், நிகழ்ச்சிகளில் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் போன்ற உயர்நிலைப் பொறுப்பாளர்களைத் தம் உயிர்போல் மதித்துப்படையொழுங்குடன் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கட்சியின் சொத்துகளைப் பாதுகாக்கவும் வேண்டும்.

44. பொதுக்கூட்டம், மாநாடு, கட்சிக் கூட்டம் எதுவாயினும் நிகழ்ச்சிக்கு முன் பின்னாகக் கட்சிக்கு ஏற்புடைய பாடல்கள் ஒலிபரப்பலாம். தமிழர்நலம் சாராப் பாடல்கள் கூடா.

## பிற்சேர்க்கை : (பார்வை 35ஆம் விதி)

அ. அகவணக்கம் வருமாறு:-

தாயக விடுதலைப் போரில், உயிர் நீத்த பொது மக்களுக்கும், இனப் பற்றாளர்களுக்கும் அகவணக்கம்; ஒரு மணித்துளி அமைதி வணக்கம்.

ஆ. வீரவணக்கம் வருமாறு:-

நம் மொழிகாக்க, நம் இனம் காக்க, நம் மண் காக்க, நம் மானம் காக்க, இன்னுயிர் ஈந்த மாவீரர் அனைவருக்கும் வீரவணக்கம்; வீரவணக்கம்.



இ. உறுதிமொழி வருமாறு:-

மொழியாகி, எங்கள் மூச்சாகி,
நாளை முடிசூடும் எம் தமிழ்மீது உறுதி
வழிகாட்டி, எம்மை உருவாக்கும்,
தமிழ் வரலாற்றின் மீதும் உறுதி
விழிமூடித் துயில்கின்ற - வீர
வேங்கைகள் மீதும் உறுதி
இனிமேலும் ஓயோம், இழிவாக வாழோம்
உறுதி உறுதி உறுதி
வென்றெடுப்போம் தமிழர் உரிமைகளை
கட்டி எழுப்புவோம் தமிழர் உலகத்தை
வென்றாக வேண்டும் தமிழ்
ஒன்றாக வேண்டும் தமிழர்
தமிழால் இணைந்து
நாம் தமிழராய் நிமிர்வோம்

## இன முழக்கம்:

நாம் தமிழர்
நாம் தமிழர்
நாம் தமிழர்

* * *

படிப்பகம்

www.padippakam.com



# ஈ. கலைச்சொல் விளக்கம்

தமிழ் - தமிழுக்கே உரிய 247 எழுத்துகளால் மட்டுமானத் தமிழ்ச் சொற்களால் இலங்கும் மொழி; தமிழ் உலகின் முதன்மொழி; இயற்கை மொழி; அறிவியல் மொழி; உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி. தமிழர் என்று அடையாளம் காட்டுவதும், தமிழரை ஓர் இனமாகக் கட்டுவதும், தமிழர் அறிவைக் கட்டிவைப்பதும், அவர்தம் அறிவை உலகிற்குக் காட்டிநிற்பதும், தமிழர் உருவாக்கங்களுக்குத் தொழில்நுட்ப அறிவாய்த் துணைநிற்பதும் தமிழே. 50ஆயிரம் ஆண்டுகளாகியும் அழியாப் பேராற்றல் மொழி; நாளை உலகை மீண்டும் ஆளப்போகும் மொழி.

தமிழர் - தம்மைத் தமிழராக அறிந்து உணர்ந்ததன் விளைவாக, தமிழராக வாழ விரும்பித் தமிழை வாழ்வியல் மொழியாகவும், தமிழியத்தை வாழ்வியல் நெறியாகவும், தமிழர் நலனை நடைமுறையாகவும் கடைப்பிடிப்பவர் வாழும் தமிழர் ஆவார். மரபு வழியாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர், பிறப்புவழித் தமிழர். அவர் தமிழராக வாழும்போது, வாழும் தமிழர் ஆவார்.



தமிழியம் - ஐந்திணை மரபுசார்ந்த இயற்கைநெறி, எண்ணியம் சார்ந்த அறிவியநெறி, பொதுமை சார்ந்த உலகியநெறி, உயிரிநேயம் சார்ந்த அருள்நெறி ஆகியவற்றை உள்ளடக்கிய அறம், பொருள், இன்பம் போற்றும் விழுமிய வாழ்வியம் (வாழ்வியல்நெறி).

மனுவியம் - பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழி லிருந்தும், தமிழியத்திலிருந்தும், பிரிந்து பல்வேறு மொழிகளாய் - பிறப்புவழி உயர்வு தாழ்வாய் - உடல் வண்ணத்துவழி உயர்வு

தாழ்வாய் - ஒரு குலத்துக்கொரு ஞாயமாய்த் திரிந்து, தமிழர்க்கு மூலப்பகையாய் மூண்டு நிற்கும் கோட்பாடு.

திராவிடம் - பல காலக்கட்டங்களில் தமிழிலிருந்து பிரிந்து சென்று, மனுவியம் சார்ந்துப் பல்வேறு மொழி களாய்த் திரிந்துபோன கோட்பாடு.

வடுகர் - வடக்கர், வடக்குப் பகுதியில் வாழ்பவர்.

அய்யன் - தலைவன், தகப்பன் (தகு அப்பன்), அழகன்.

அய்யன்காரு - அய்யன் என்ற சொல்லின் தெலுங்கு, கன்னட வழக்கு.

அந்தணன் - ஈவு இரக்கங்கொண்ட அறநெறியாளன்.

பார்ப்பான் - ஆய்வாளன், இளைஞன்.

ஆரியன் - சீரியன், உயர்ந்தவன், சீரிய தவசமான கேழ்வரகு (தருமபுரி, சேலம் மாவட்ட வழக்கு)

படிப்பகம்

www.padippakam.com



பிராமணன் - பேரமணன்.

மனுநெறியர் - ஒரு குலத்துக்கு ஒரு ஞாயம் என்று சட்டம் எழுதிய மனு என்பானின் பின்பற்றாளர்கள், மனுவாள்கள், மனுவாளிகள் (தமிழ் வழக்கு), மனுவாளு, மனுவாடு, (தெலுங்கு வழக்கு), மனுவாடி, மனுவாதி (இந்திப் புல வழக்கு)

அரசு - ஒருவர் அல்லது ஒரு குழு அல்லது ஓர் இனத்தின் நலனுக்காக, தொடர்புடைய அனைத்துக் கூறுகளையும் அடக்கி ஆளும் ஒரு வன்முறைக் கருவி.

வரலாறு - கால நிகழ்வுகளை, ஒரு வல்லான் அல்லது ஒரு வலிமை படைத்த குழு தனது நலனுக் கேற்றாற்போல மாற்றிப் பதிவு செய்து கொள்ளும் ஒரு பதிவுத் தொகுப்பு. பதியப்பட்ட வரலாற் றோடு, மறைக்கப்பட்ட சான்றுகளையும் சேர்த்து ஆய்ந்தால், உண்மை வரலாறு தெரியவரும்.

குற்றச்சாட்டு - செய்தக்க செய்யாமை, செய்தக்க அல்ல செய்தமை

முழுமைத் தமிழ்த் தேசியம் - தமிழ்த் தேசியத்தின் கூறுகளான அரசியல் விடுதலை, படை விடுதலை, பொருள் விடுதலை, மொழி விடுதலை, குமுக விடுதலை, கலை விடுதலை, பண்பாட்டு விடுதலை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயற் படுவதே முழுமைத் தமிழ்த் தேசியமாகும்.



முழுமைத் தமிழ்த்தேசியம், முழுமையாகத் தமிழியத்தைச் சார்ந்து நின்று, தமிழ், தமிழர், தமிழ்நிலம் ஆகிய கூறுகளின் நலன்சார்ந்து நிற்கும். தமிழியம் சாராத மனுவியத்தையும், திராவிடத்தையும் முழுமையாகப் புறக்கணித்து, அவை அழிக்கப்படும் வரை, அவற்றை எதிர்த்துப் போராடும்.

பகுதித் தமிழ்த் தேசியம் - தமிழ்த் தேசியத்தின் ஒரு கூறானமொழி விடுதலையையோ அல்லது குமுக விடுதலை யையோ (தீண்டாமை ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, பெண்ணுரிமை மீட்பு) அல்லது ஓரிரு கூறுகளைச் சேர்த்தோமட்டும் செயற் படுவது பகுதித் தமிழ்த்தேசியமாகும்.

ஒருவரின் இனப் பங்களிப்பை மதிப்பிடும் முறை - ஒரு தேசிய இனத்தின் அரசியல், படை, பொருள். மொழி விடுதலைக் கூறுகள் ஆகியவை அடிப்படைத் தன்மையும், முதன்மைத் தன்மையும் வாய்ந்தவை. இத்தளத்தில் சிறப்புறப் பங்களிப்பவர் ஒரு தேசிய இன விடுதலைத் தலைவ ராவார். குமுக விடுதலை (தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு), கலைப் பண்பாட்டு விடுதலை ஆகிய மேற்கட்டுமான தளங்களில் சிறப்புறப் பங்களிப்பவர் சீர்திருத்தத் தலைவராவார்.

படிப்பகம்

www.padippakam.com



மேலே கண்ட இரண்டு வகைகளையும் ஒருங்கிணைத்து வெற்றியுறப் பங்களிப்பவர். அந்தத் தேசிய இனத்தின் முழுமைத் தலைவரும், தேசியத் தந்தையும் ஆவார்.

சமற்கிருதம் - விந்தியம் முதல் இமயம் வரையிலான வட பகுதியில் நிலவிய வடதமிழ் மொழியின் திரிபு வடிவம். மனு நெறியர்களால் செயற்கையாகச் செய்யப்பட்ட மொழி. ஆனால், அது மனுநெறியர்களுக்கே பேச்சுமொழி அன்று; பிழைப்பு மொழி மட்டுமே; அதேவேளை, திராவிடர்களால் பகுதிப் பேச்சு மொழியாகப் பேசப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகிறது. இம்மொழி வடதமிழ்மொழியிலிருந்து தோன்றியதால், வடமொழி என்றும் அழைக்கப்படுவது, எண்ணற்பாலது.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்". திருக்குறள்-611.

வடிவம் - அச்சு: அன்றில் பதிப்பகம், சென்னை - 5. பேசி: 044 - 28411525

படிப்பகம்